விலை : 20.00
பக்கங்கள் : இருபது

வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 பங்குனி 01 வியாழக்கிழமை (14.03.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085

MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வித சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C.) ராம்கோ சிமெந்து

பரிந்துரையை அமுலாக்க ஜப்பான் வலியுறுத்தல்

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்காக அரசாங்கம் முன்வைத்துள்ள தேசிய செயல்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்படாத பரிந்துரைகளையும் எதிர்காலத்தில் அமுலாக்க வேண்டும்என்றுஜப்பான்தெரிவித்துள்ளது.

ஐக்கியநாடுகளின்மனிதஉரிமைகள் மாநாட்டில் உரையாற்றிய ஜப்பானிய தூதுவர் இதனைத் தெரிவித்துள்ளார். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுலாக்குவதற்கான தேசிய வேலைத்திட்டத்தை ஜப்பான் வரவேற்கிறது எனினும் இப் பரிந்துரைகளில் குறிப்பிட்ட சில பரிந்துரைகள் மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஏனைய பரிந்துரைகளையும் அமுலாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜப்பான் வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜப்பானுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்த வேளையில் ஜப்பான் தூதுவர் ஜெனிவா மாநாட்டில் இவ்வாறு உரையாற்றியிருப்பது குறிப்பிடத்தக்கது. (எ-1)

அமெரிக்காவின் தீர்மானத்துக்கு வாக்கெடுப்புக் கோர திட்டம்

(கொழும்பு)

ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனித வுரிமைகள் ஆணைக்குழுவின் 22 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் வாக்கெடுப்பைப் கோருவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்தீர்மானம் தொடர்பில் அமெரிக்காவுடன் பேசமாட்டோம் என ஜெனிவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்திருந்த நிலையில், இச் செய்தி வெளியாகியுள்ளது.

இத்தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பை நடத்த கோரது விட்டால், அது அத்தீர்மானத்தை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதாகிவிடும் என அரசாங்கம் கருதுவதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

ஐ.நாமனிதவுரிமைகள்ஆணைக்குழுவில் இத்தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்படுவது இலங்கையின்தேசியநலன்களுக்குகுந்தகத்தை ஏற்படுத்தும் எனவும். அது கடந்த ஆண்டு ஏற்பட்ட தோல்வியை விடவும் மோசமானது எனவும் அரசாங்கம் கருதுகின்றது.

இந்த நிலையில், இந்தத் தீர்மானம் தொடர்பில் வாக்கெடுப்பு கோருவதை விட, அரசாங்கத்திற்கு மாற் (20ஆம் பக்கம் பார்க்க)

தமிழர்களுக்கு ஆதரவாக புழல் சிறைக் கைதிகள்

(கொழும்பு)

ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராகவும் தமிழகத்தில் போராட்டம் வலுத்து வருகின்றது. இந்த நிலையில் புழல் சிறையில் உள்ள கைதிகளும் ஈழத்தமிழர்களுக்குஆதரவாக உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

தமிழகம் முழுவதும் பல்வேறு கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களுக்கு அரசியல் கட்சியினர் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் புழல் சிறைக் கைதிகளும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர்.

நேற்றுக்காலை7.30 மணி அளவில் தண்டனை கைதிகளுக்கு காலை உணவு வழங்கப்பட்டது. அப்போது 23 கைதிகள் சாப்பிட மறுத்து உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில்தமிழர்கள்அமைதியாக வாழ இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும், ராஜபக்ஷ மீது போர்க் (20ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை மீது கடும் நடவடிக்கை தேவை அரசு சாரா நிறுவனங்கள் கோரிக்கை

(ஜெனிவா)

இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழு கடும் போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும் என மூன்று அரச சார்பற்ற நிறுவனங்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரின் போது வலியுறுத்தியுள்ளன.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே இம்மூன்று அரச சார்பற்ற நிறுவனங்களும் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளன.

இந்தியாவில் இயங்கும் பசுமைத் தாயகம் அமைப்பு, சர்வதேச நீதியாளர்கள் ஆணைக்குழு மற்றும் சர்வதேச கல்வி அபிவிருத்தி நிறுவனம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளே இவ்வாறு இலங்கை விவகாரம் தொடர்பில் சுட்டிக்காட்டிப் பேசியுள்ளனர்.

இதன்போது இலங்கையில் நீதித்துறையில் உள்ள அரசியல் தலையீடு குறித்து சர்வதேச நீதியாளர்கள் ஆணைக்குழு கடும் கண்டனத்தை வெளியிட்டது. பிரதம நீதியரசர் பதவி நீக்கம் கையாளப்பட்ட விதம், சட்டத்தரணிகள மீதான தாக்குதல், சர்வதேசச் சட்டங்களை மீறியமை, தொடர்பில் குறித்த விசாரணைகளை நடத்துவது சர்வதேசத்தின் பொறுப்பென்றும், இதற்காக விசேட விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் எனவும் சர்வதேச நீதியாளர்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

பசுமைத்தாயகம் அமைப்பின் பிரதிநிதி பேசும்போது, இலங்கையில் (20ஆம் பக்கம் பார்க்க)

ஐப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இலங்கைக்கான ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷியை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஏ.எச்.எம்.பௌசி ஆகியோர் கலந்துகொண்டனர்.

தகவல் வழங்குவோரை பாதுகாக்க நவநீதம்பிள்ளை வலியுறுத்தல்

(ஜெனிவா)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தகவல்களை வழங்கும் மக்களின் பாதுகாப்பை இலங்கையில் உறுதிப்படுத்துவதுஐ.நா.சபையின்தலையாய கடமை என அவ் வமைப்பின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச அரசசார்பற்றநிறுவனங்களின் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கட்டடத்தின் 19ஆம் இலக்கக்குழு அறையில் சந் தித்து அவர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் மனித உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும், மனித உரிமைகள் தொடர்பான சாட்சியாளர்களுக்கும் அச்சுறுத்தல் இருப்பதாக சுட்டிக் காட்டிய அவர், அவை தொடர்பில் கவனம் செலுத்துமாறு சர்வதேச அரச (20ஆம் பக்கம் பார்க்க)

காணாமல் போனோரின் உறவுகள் ஐ.நாவிடம் மகஜர் கையளிப்பு

(கொழும்பு)

காணாமல் போன தமது உறவுகளை மீட்டுத்தரக் கோரியும் தமிழ் அரசியல்கைதிகளின்விடுதலையை வலியுறுத்தியும் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் சபை காரியாலயத்தில் வடக்கு கிழக்கு காணாமல் போன உறவுகளைத் தேடும் சங்கத்தின் பிரதிநிதிகளால் மகஜர் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் காணாமல் போன உறவுகளைத் தேடும் சங்கத்தின் ஏற்பாட்டில்கடந்தவாரம்கொழும்பில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெறவிருந்தது.

அதற்கென வடக்கிலிருந்து பொதுமக்கள் பயணித்த சமயம் வவுனியாவில் வைத்து பொலிஸாரால் பாதுகாப்பைக் காரணம்காட்டி வவுனியாவில் தடுத்து நிறுத்தினர்.

பின்னர் அம்மக்கள் வவுனியாவில் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர். மிகுந்த எழுச்சியுடன் போராட்டத்தைமுன்னெடுத்தமக்கள்வவுனியா மாவட்டச் செயலாளருக்கு மகஜர் ஒன்றினைக் கையளித்தனர்.

இந்நிலையில் அன்று கொழும்பில் கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொண்டு ஐ.நாவுக்கு மகஜர் கையளிக்க முடியாமை போனமை காரணமாக நேற்று அம் மகஜரைக் கையளிக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

பாதுகாப்புக் காரணமாக வடக்கு கிழக்கில் காணாமல் போன உறவுகளைத் தேடும் சங்கத்தின் பிரதிநிதிகளில் ஒரு தொகுதியினரே மகஜர் கையளிப்பதற்கு சென்றிருந்தனர்.

அவர்கள் நேற்று புதன்கிழமை மதியம் 12.30 மணியளவில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்ட அலுவலகத்தில் அவ்வமைப்பின் பிரதிநிதியான பற்றிக் இவான்ஸிடம் கையளித்தனர். (20ஆம் பக்கம் பார்க்க)

பதிலுரை மட்டும் நிகழ்த்தவென மகிந்த சமரசிங்க ஜெனிவா பயணம்

(ஜெனிவா)

ஐநாமனிதஉரிமைகள்பேரவைக் கூட்டத்தொடரில் கலந்துகொள்வதற்காக ஜெனிவா விரைந்துள்ள மனிதவுரிமை விவகாரங்களுக்கான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவர் அமைச்சர் மகிந்த சமரசிங்க, அங்கு இராஜதந்திர மட்டத்திலான செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார் எனத் தெரியவருகின்றது.

எனினும், ஐ.நா மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இம்முறை அவர் பதிலுரை மாத்திரமே நிகழ்த்துவார் என்றும் அறியமுடிகின்றது.

ஐ.நா மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் பங்கேற்கவென ஜெனிவா சென்றிருந்த இலங்கை இராஜதந்திரக்குழுவை சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு ஐ நா. (20ஆம் பக்கம் பார்க்க)

கஸ்தூரியார் வீதிப் பகுதியில் மதுப்பிரியர்கள் ரகளை

விழி பிதுங்கிய பொதுமக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியூடாகப் பயணம் செய்த பலர் அங்கு நின்ற இளைஞர்களால் நேற்று கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 20 வயதுக்குக் குலறந்த இளைஞர்களினாலேயே இந்தத் தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப் பட்டுள்ளது. தாக்குதல் மேற்கொண்ட

டதாக தாக்கப்பட்டவர்கள் தெரிவித்த ர்கள் மது போதையில் காணப்பட் னர். (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின் தடைப்படும்

மின்சார திருத்த வேலை காரணமாக வீதி அகலிப்பு பணி மேற் கொள்வதனால் இன்று காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 2 மணி வரை பரந்தன் சந்தியில் இருந்து முரசுமோட்டை, விசுவமடு, வசந்தபுரம் உட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேசம் எங்கும் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருக்கும் என முல்லை. மாவட்ட மின் அத்தியட்சகர் ப. செந்தில் செல்வன் அறிவித்துள்ளார். (எ-15)

மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P.ஆறுமுகம் T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில் 12.03.2013 முதல் 17.03.2013 வரை 6 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள் ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறு கள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத் துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுக மாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப் படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்த மைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(சி-2679)

பிள்ளையார் இன்

இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.

25% கழிவு

இன்றைய விசேட உணவு :-

பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/- சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-

தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829.

(C-1660)

மரண அறிவித்தல்

திருமதி சின்னத்தங்கம் சதாசிவம்

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொழு ம்பை தற்காலிக வசிப்பிடமாகவும், கொண்ட திருமதி சின்னத்தங்கம் சதாசிவம் அவர்கள் நேற்று (12/03/2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசதுரை - சின்னம்மா தம்பதிகளின் புதல்வியும், காலஞ்சென்ற சீனித்தம்பி - சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற சதாசிவத்தின் (மாவைக்கந்தன்) அன்பு மனைவியும், இராமநாதன் (Pathma Construction Ltd), காலஞ் சென்ற பத்மநாதன் - சதாலக்சுமி (Canada), பத்ம லோசனி (Swiss), சறோஜினிதேவி (Canada), பாலச்சந்திரன் (Canada), வின்சேந்திரராஜன் (Rajan), Rajan Umayal, 4th Cross Street, எரிபொருள் நிரப்பு நிலையம் யாழ்ப்பாணம், கமலாதேவி எரிபொருள் நிரப்பு நிலையம், சுன்னாகம், Liverpool Building, Jaffna), புவனேஸ்வரராஜன் (Canada) ஆகியோரின் அன்புத்தாயாரும் பத்மராணி, றோகிணிதேவி, அரியரத்தினம் (Canada), ஜெயக்குமார் (Swiss), கனகசிங்கம் (Canada), சுபாஷினி (Canada), சுமதி, ஆஷா (Canada) ஆகியோரின் அருமை மாமியாரும், சிவானுஷா-ரவிஷங்கர் (Newzealand), அங்கஜன்- பிரஷாந்தினி (SLFP Jaffna District Chief Organizer), லாவண்யா- சஞ்சிவன் (Australia), யாதவன் (Australia), சுதாகரன் - ஜனா (Canada), சுஜினி-ராஜ்குமார் (USA), நவின்-சன்ரி (Canada), அனுக்ஷா - ஜெர்ஷன் (Canada), சமித்தா (Swiss), நிஷாந்தன் (Swiss), கோபிகன் - சரண்ஜா (Canada), நிருஜன் (Canada), சாருஜன் (Canada), அக்ஷரா (Canada) நிதர்ஷன் (London), விதுர்ஷன், ஷிறோதி (Canada) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், நேத்ரா - ஆதிரா (Newzealand), சாயிரா, ஜருண், ரினா, ரியா, லக்மிர் (Canada) ஆகியோரின் அருமைப் பூட்டியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 26/1, Alfred place-ல் அமைந்துள்ள அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இன்று (14.03.2013) வியாழக்கிழமை 3 மணியளவில் கிரியைகள் நடைபெற்று 4.30 மணியளவில் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
26/1, Alfred place, Colombo -03
0777 372897

தகவல்:
குடும்பத்தினர்

(சி-2666)

கைதான மீனவர்கள் விடுதலையாகினர்

(மன்னார்)

கச்சதீவு பகுதியில் மீன் பிடித்துக் கொண்டி ருந்த தமிழக மீனவர்கள் 19 பேர் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 19 மீன வர்கள் நேற்று அதிகாலை கச்சதீவு பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது அவர் களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் தலை மன்னாருக்கு கொண்டு செல்லப்பட்டுள் ளதாக கூறப்படுகின்றது.

இம்மீனவர்கள் 4 படகுகளில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

தூத்துக்குடி தருவைக்குளத்தைச் சேர்ந்த 16 மீனவர்கள் கடந்த 3ம் திகதி நடுக் கடலில் மீன்பிடித்தபோது அங்கு வந்த இலங்கைக் கடற்படையினர் எல்லைதாண்டி மீன்பிடித் ததாகக் குற்றம் சாட்டி கைது செய்தனர்.

பின்னர் அவர்கள் நீர்கொழும்பு சிறையில் அடைக்கப் பட்டனர்.

பின்னர் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரிகள், இலங்கை அதிகாரி களுடன் பேச்சு நடத்தியதைத் தொடர்ந்து 16 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் நேற்றுக்காலைஊர் சென் றடைந்தனர். (எ-11)

இலங்கைக்கு எதிராக மற்றொரு குறுஞ்செய்தி வெளியிட்டது சனல் 4

இலங்கையில் நடத்தப்பட உள்ள பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் கலந்துகொள்ளும் உச்சி மாநாட்டை இரத்து செய்யும் நோக்கில், பிரித்தானியாவின் சனல் 4 தொலைக்காட்சி, இலங்கைக்கு எதிராக மற்றுமொரு குறுகிய செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல்கள் காரணமாக இப்படியான மாநாடு அங்கு நடத்தப்படக் கூடாது என அந்தத் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த மகாநாட்டில் பிரித்தானியா மகாராணி எலிசபெத் கலந்து கொள்வது நகைப்புக்குரியது எனவும் அதில் கூறப்பட்டது. இதனைத் தவிர பிரித்தானியாவின் முன்னாள் அமைச்சர்களான டேவிட் மிலிபேண்ட், மெக் லம் ரிக்கின்ட் ஆகி யோரின் கருத்துக் களும் செய்தியில் வெளியிடப்பட்டன.

தனதுதவறுகளை மறைக்க இலங்கை க்கு இந்த மாநாடு வாய்ப்பாக அமைந்து விடும் என மிலிபே ண்ட் தெரிவித்துள் ளார். (எ-11)

மரண அறிவித்தல்

திருமதி இராமநாதன் யோகம்மா

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், வன்னேரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் யோகம்மா அவர்கள் 12.03.2013 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற இராமநாதன் அவர்களின் அன்பு மனைவியும், சுப்பிரமணியம்- வேலாசிப்பிள்ளையின் மகளும், மகேஸ்வரி, காலம்சென்ற செல்வராசா, தேவராசா, சந்திரராசா, குபேந்திரராசா, புவனேந்திரராசா (லண்டன்), காலம்சென்ற மனோராசா, சௌந்தரராசா விமலராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராசா, இராசம்மா, பரமேஸ்வரி, பூமலர், பத்மவதி, பஞ்சகௌரி (லண்டன்), தயாளினி, ஜெயந்தினி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.03.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஐயனார்புரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.41, ஐயனார்புரம், வன்னேரிக்குளம். (சி-2645) தகவல் : றஜிந்தன்

31-ம் நாளில் நினைவு கூருகின்றோம்

அமரர் கந்தசாமி மோகனதாஸ்

(முல்லை/தண்ணீரூற்று டில்க்கா நகைமாட உரிமையாளர்)

தோற்றம்:-11.12.1969

மறைவு:-12.02.2013

மாத மொன்று ஆனதுவோ
ஆறவில்லை எம்மனம்
காலங்கள் எத்தனை கடந்தாலும்
மாறாது உன் நினைவுகள்

தண்ணீரூற்று முள்ளியவளை
பிரதேச நகைமாடங்களின்
உரிமையாளர்களும், பணியாளர்களும்

(சி-2676)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இன்று ஒரு தகவல்

அரசர் பெற்ற படிப்பினை

ஒரு ஊரிலே மன்னர் ஒருவர் இருந்தார்.

அவர் ''அயலில் இருக்கும் நாட்டின் மீது படையெடுக்க வேண்டும்'' என்று நினைத்துக் கொண்டிருந்தார். அதையும் தன்னுடைய நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என ஆசைப்பட்டார்.

''எப்போது படையெடுக்கலாம்?'' என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த சமயத்தில் ஒரு பெரியவர் அவரைத் தேடி வந்தார்.

''மன்னரே! தாங்கள் என்ன யோசித்துக் கொண்டிருக் கிறீர்கள்?'' என்று அவர் வினவினார்.

மன்னர் தன்னுடைய யோசனையைத் தெரிவித்தார்.

இந்தச் சமயம் மன்னருக்கு தாகம் எடுத்தது. அவருக்குத் தண்ணீர் குடிக்க வேண்டும் போல் இருந்தது.

உடனே மன்னர், அரண்மனை பணியாளர் ஒருவருக்கு ''தண்ணீர் கொண்டு வருமாறு'' அழைப்பு விடுக்கிறார்.

அந்தப் பணியாளரும் சென்று ஒரு குவளையில் தண்ணீர் கொண்டு வந்து அரசனிடம் நீட்டினர்.

அதை வாங்கிக் குடிப்பதற்காக அரசன் வாய் அருகில் கொண்டு போனார்.

அந்நேரம் பார்த்து, ''மன்னா... சற்றுப் பொறுங்கள்'' என்று அந்தப் பெரியவர் கூறினார்.

மன்னர் தண்ணீர் குடிப்பதை நிறுத்திவிட்டு பெரியவரைப் பார்த்தார்.

இப்போது அந்தப் பெரியவர் சொன்னார்;

''மன்னரே! இப்போது உங்களைவிட வலிமையுள்ள ஒரு சக்தி உங்களுக்குத் தண்ணீர் கொடுக்க மறுத்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த சக்தி தண்ணீர் பருக விடாமல் தடுத்து விடுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியானால் இப்போது இந்த ஒரு குவளைத் தண்ணீரை என்ன விலை கொடுத்து நீங்கள் வாங்குவீர்கள்?'' என்று கேட்டார்.

''இப்போது எனக்கு இருக்கும் தாகத்திற்கு... என்னுடைய அரசாங்கத்தில் பாதியைக் கொடுத்தாவது இந்தத் தண்ணீரை வாங்கத் தயங்கமாட்டேன்'' என்று அரசன் கூறினார்.

''சரி... இப்போது அந்தத் தண்ணீரைக் குடியுங்கள்'' என்று பெரியவர் சொன்னார்.

மன்னர் ஆவலோடு அந்தத் தண்ணீரைக் குடித்து முடித்தார்.

சிறிது நேரம் கடந்த நிலையில் மீண்டும் இந்தப் பெரியவர் கேட்டார்; ''மன்னா, நீங்கள் ஒரு குவளைத் தண்ணீரைக் குடித்து முடித்து விட்டீர்கள்... இப்போது அந்தத் தண்ணீர் உங்களது உடம்பை விட்டு வெளியில் வரக்கூடிய பாதை அடைபட்டுப் போய் விட்டது என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை வெளியேற் றுவதற்கு நீங்கள் எவ்வளவு செலவு செய்வீர்கள்?'' என்று வினவினார்.

மன்னர் மீண்டும் யோசித்தார்.

''அப்படி ஒரு நிலை ஏற்படுமாகில் என்னுடைய அரசாங்கம் முழுவதையும் அதற்கு ஈடாகத் தரவும் நான் தயங்க மாட்டேன்'' என்றார்.

இப்போது அந்தப் பெரியவர்; ''எந்த அரசாங்கத்தின் மதிப்பு ஒரு குவளை தண்ணீர் அளவுக்குக்கூட இல்லையே... அந்த அரசை அடைய வேண்டும் என்ற பேராசையில் மனிதர்கள் தங்களுடைய சகோதரர்கள் கூடவே சண்டையிடுகிறார்களே... அதில் ஏதாவது அர்த்தம் உள்ளதா?'' என்று கேட்டார்.

மன்னருக்கு இப்போதுதான் அர்த்தம் புரிந்தது. மனதில் தெளிவு தென்பட்டது.

தன் மனதில் தோன்றிய போர் வெறியை அவர் விரட்டி அடித்து விட்டார். அதன்பின் நிம்மதியாக ஆட்சி புரிந்தார்.

இந்தக் காலத்து மனிதர்களுக்கு பணம், அதிகாரம் என இரண்டு விதமான பைத்தியம் பிடித்திருப்பதாக கூறப்படுகிறது. இதெல்லாம் எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

பலவந்த ஊர்வலத்தை நடத்த அரசுக்கு வெட்கமில்லையா?

மனோ கணேசன் கேள்வி

அமெரிக்க இந்திய எதிர்ப்பு குறித்து வீரக்கதைகளை சிங்கள மக்கள் மத்தியில் பேசிக்கொண்டு அரசாங்கம் பின் கதவால் அமெரிக்காவிடம் சமரசம் பேசுகிறது. இந்த பின் கதவு சமரச வேலைகளுக்காக இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்தான் சுப்பிரமணிய சுவாமி.

கொழும்பு, டில்லி, வோஷிங்டன் என இலங்கை அரசாங்கத்தின் தூது வராக பணியாற்றும் சுப்பிரமணிய சுவாமிக்கு அரசாங்கம் இலங்கை குடியுரிமை வழங்கலாம் என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப் படுத்தும் இயக்கம் கொழும்பில் நேற்றையதினம் நடத்திய ஊடகவியலாளர்மாநாட்டில்கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

2012 ஆம் வருடத்தை போல் இந்த வருடமும் நமது நாட்டுக்கு எதிரான தீர்மானத்தை கொண்டு வருவதற்கு அமெரிக்காவும் இந்தியாவும் சண்டித்தனம் செய்கின்றன என அமைச்சர் விமல் வீரவன்ச வின் கட்சி ஊடக பேச்சாளர் கூறுகிறார். இந்த அரசாங்கம்தான் இந்தியஅரசியல்வாதி சுப்பிரமணிய சுவாமியை பயன்படுத்தி அமெரிக்க அரசாங்கத்துடன் பின் கதவால் சமரசம் பேசுகிறது.

தீர்மான வாசகங்களை மாற்றி அமைக்கும்படி கெஞ்சுகிறது. இதற்கு இந்திய மத்திய அரசின் ஆசீர்வாதமும் உண்டு. மென்மையான வாசகங்களுடன் தீர்மானம் கொண்டுவரப்பட்டால் அது இலங்கை அரசுக்கு மாத்திரம் அல்ல. இந்திய அரசுக்கும் சாதகமாக அமையும்.

மூத்தோர் சபை சார்பாக நோபல் பரிசு பெற்ற தென்னாபிரிக்க பேராயர் டெஸ்மன்ட்டுட்டு இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை இலட்சணத்தை புட்டு வைத்துள்ளார். அவரும் முன்னாள் அயர்லாந்து ஜனாதிபதி மேரி றொபின்சனும் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை நடைமுறைகள் பற்றி தீவிர கருத்துக்களை தெரிவித்துள்ளார்கள்.

அபிவிருத்தி பற்றி பேசும் அரசாங்கம் மனித உரிமை விவகாரம் தொடர்பில் கடந்த ஜ.நா மனித உரிமை கூட்டத்திற்கும் தற்போ தைய கூட்டத்திற்கும் இடையில் எந்தவித மனித உரிமை அபிவிருத்தியையும் காணவில்லை என இவர்கள் கூறியுள்ளார்கள். அது மட்டும் அல்லாமல் இலங்கையில் நடக்கவுள்ள பொது நலவாய மாநாட்டை அடுத்து வழமையான சம்பிரதாயத்தின்அடிப்படையில்பொதுநலவாய சம்மேளனத்தின் தலைமை பொறுப்பை இலங்கைக்கு வழங்க முடியுமா என கேள்வி எழுப்பியுள்ளார்கள். உண்மையில் இது இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ள எச்சரிக்கை அரசாங்கத்தின் தலை வலி தொல்லை இன்னும் சில நாட்களில் முடிவ டைய உள்ள ஜ.நா. மனித உரிமை கூட்டத்தொடருடன் முடிவுக்கு வரப்போவதில்லை என்ற முன்னறிவித்தலை இந்த மூத்தோர் சபையினரின் கூற்று அறிவிக்கின்றது. ஜ.நா.மனித உரிமை காய்ச்சல் முடிந்தவுடன் பொதுநலவாய காய்ச்சல் ஆரம்பித்துவிடும் என்பது தான் இந்த எச்சரிக்கை.

கடந்த வாரம் கொழும்புக்கு வர இருந்த காணாமல் போன உறவுகளின் குடும்ப உறுப்பினர்களை அரசாங்கம் தடுத்து நிறுத்தியது. கொழும்பிலும் வவுனியாவிலும் நாம் நடத்த இருந்த ஊர்வலங்களுக்கு ஆயிரம் கட்டுப்பாடுகளை அரசாங்கம் விதித்தது.

இதே அரசாங்கம் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் பலவந்தமாக தமிழ் மக்களைவரவழைத்து அரசு சார்பு ஊர்வலத்தை நடத்தியுள்ளது. கடந்த ஜெனீவா கூட்டத்தின் போது கொழும்பில் பெரும் ஆரவாரம் ஏற்பட்டது. சுவர்களில் சுவரொட்டிகளும் தெருக்களில் ஊர்வல கோஷங்களும் உலக நாடுகளை திட்டித்தீர்த்தன.

இன்று கொழும்பில் கூடு இருக்கிறது. ஆனால் ஆரவாரம் இல்லை. அதனாலோ என்னவோ கிளிநொச்சியில் சொல்லொணாத் துன்பங்களின் மத்தியில் வாழும் மக்களை பிடித்து வந்து பலவந்தமாக அரசாங்கத்தை பாராட்டி அமெரிக்காவை திட்டி ஊர்வலம் நடத்தியுள்ளார்கள்.

இதை யார் நம்ப போகிறார்கள்? இத்தகைய பலவந்த ஊர்வலங்களை நடத்த இந்த அரசாங்கத்துக்கு வெட்கம் இல்லையா என கேட்க விரும்புகிறேன் என்றார். (அ-2)

சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

மரக்கறி வகைகள்	நெல்லியடி	திருநெல்வேலி	சாவகச்சேரி	கிளிநொச்சி
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	180	150	160	120
உருளைக்கிழங்கு	60	70	70	60
பச்சைமிளகாய்	200	200	250	200
தக்காளி	50	50	80	90
மரவள்ளிக்கிழங்கு	60	40	40	40
கோவா	50	50	60	50
கரட்	140	120	140	140
பூசணி	80	60	50	60
புடோல	70	70	80	60
வாழைக்காய்	50	50	60	60
சின்ன வெங்காயம்	50	50	80	60-100
பெரிய வெங்காயம்	80	70	100	90
பாகற்காய்	140	120	140	120
வெண்டிக்காய்	60	60	80	100
கருணைக் கிழங்கு	100	80	80	70
பயற்றங்காய்	80	100	80	100
லீக்ஸ்	140	120	120	120
பீற்றூட்	90	50	120	100
கறிமிளகாய	100	120	140	140
முருங்கைக்காய்	400	500	600	--
போஞ்சி	120	110	120	140
கத்தரிதம்புள்ள	130	120	120	--
கீரை - 1 பிடி	10	30	30	40
தேசிக்காய்	40	50	50	50
தேங்காய் (ஒன்று)	60	40	50	45-50
இராசவள்ளி	120	90	120	100
வெங்காயப்பூ	120	120	160	160

இராசி பலன்

14.03.2013
(பங்குனி 01, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.18 மணிக்கு
திருதியை பின்னிரவு 2.49 மணிவரை
ரேவதி பிற்பகல் 2.33 மணிவரை
இராகுகாலம் 1.51-3.21 மணிவரை
சுபநேரம் 7.51-9.21 மணிவரை
காரடையா நோன்பு, சித்தாமிர்தம்

மேடம் தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதம் உண்டு, பணியில் சிறுமன உளைச்சல் ஏற்படலாம், ஆதாயத்தை எதிர்பாராமல் செய்த வேலையொன்றில் கணிசமான இலாபம் கிடைக்கும்.

இடபம் விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியத்தை முடிப்பதில் சில தாமதங்கள் ஏற்படலாம், சேமிப்பில் சிறிது கரையலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்துகொள்வர்.

மிதுனம் செய்தொழில் உயர் நிலைக்கும் வருவதற்கான வாய்ப்புண்டு, தன வரவுகள் திருப்திகரமாக அமையும், கௌரவமான நாள், எடுத்தகாரியங்கள் எளிதில் கைகூடும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும்.

கடகம் உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், தொட்ட காரியங்களில் வெற்றி பெறும் நாள், நல்ல தகவலைத் தரும் கடிதம் ஒன்று வந்து சேரலாம், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

சிங்கம் சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், பேச்சில் இனிமை தென்படும், கடனில் ஒரு பகுதியை செலுத்தும் எண்ணம் உருவாகும், தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

கன்னி கவலைகள் தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்பட நேரிடலாம், வாகனப் பழுதுச்செலவுகள் உருவாகும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

துலாம் குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், திட்டமிட்ட வெளியூர் பயணங்களைச் செல்ல நேரிடலாம், சுற்றத்தார் வருகையுண்டு, கௌரவமான் நாள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

விருச்சிகம் பொது வாழ்வில் புகழ் கூடும், மனக்குழப்பம் அகலும், ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் பணியாற்றுவீர்கள், சத்துரு ஜெயமுண்டு, காரிய நன்மையுண்டு, வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

தனுசு எடுத்த கருமங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகலாம், பொதுப் பணிகளில் ஈடுபாடு காட்டுவீர்கள்.

மகரம் பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பெற்றோர்களின் தேவைகளை பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், கல்வியில் ஆர்வம் கூடும், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும், தொழில் நன்மையுண்டு.

கும்பம் காலையில் நிறுத்தி வைத்த வேலையொன்றை மாலையில் செய்து முடிப்பீர்கள், உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், குடும்ப பொறுப்புக்கள் கூடும், பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

மீனம் வாக்கு மேன்னையுண்டு, இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள் சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், நண்பர்கள் உதவி செய்ய முன்வருவர், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் தோன்றும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக்களின் போர் சமநிலையில் முடிவு



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி சமனிலையில் முடிபடைந்துள்ளது.

யாழில் இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி கடந்த இரண்டு நாட்களாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவந்தது.

நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிபில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி 7 விக்கெட்டிழப்பிற்கு 119 ஓட்டங்களை பெற்றிருந்தது.

நேற்று தனது ஆட்டத்தை தொடர்ந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினர் 56 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களினை பெற்றுக்கொண்டனர்.

அதிக பட்சமாக வாமனன் 57 பந்துகளுக்கு முகம் கொடுத்து 33 ஓட்டங்களினையும், சஜிகன் 82 பந்துகளுக்கு முகம் கொடுத்து 30 ஓட்டங்களினையும், மதுஷன் 11 பந்துகளுக்கு முகம் கொடுத்து 18 ஓட்டங்களினையும், கல்கோபன் 45 பந்துகளுக்கு முகம் கொடுத்து 15 ஓட்டங்களினையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் சிலோஜன் 13 ஓவர்கள் வீசி 4 ஓட்டமற்ற ஓவர் உட்பட 54 ஓட்டங்களினை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் பவிதரன் 19 ஓவர்கள் பந்து வீசி இரண்டு ஓட்ட மற்ற ஓவர்கள் உட்பட 50 ஓட்டங்களினை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், பங்குஜன் 13 ஓவர்கள் வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 32 ஓட்டங்களினை விட்டுக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். உதிரிகளாக 41 ஓட்டங்கள் விட்டுக்கொடுக்கப்பட்டது.

தனது இரண்டாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் சத்தியனின் அபார சதத்துடன் 213 ஓட்டங்கள் என்ற மிகப்பெரிய இலக்கினை அடைந்தனர்.

அவ் அணி 6 விக்கெட்டிழப்புக்கு 213 ஓட்டங்களினை பெற்றிருந்த போது தனது ஆட்டத்தினையும் இடை நிறுத்திக் கொண்டது.

அதிக பட்சமாக சத்தியன் 172 பந்துகளுக்கு முகம் கொடுத்து 100 ஓட்டங்களினையும், பங்குஜன் 98 பந்துகளுக்கு முகம் கொடுத்து 28 ஓட்டங்களினையும், சிலோஜன் 11 பந்துகளுக்கு முகம் கொடுத்து 16 ஓட்டங்களினையும், பிரதாபன் 8 பந்துகளுக்கு முகம் கொடுத்து 10 ஓட்டங்களினையும் அதிக பட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி சார்பாக சாரங்கன் 16.3 ஓவர்கள் வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 57 ஓட்டங்களினை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், மதுஷன் 24 ஓவர்கள் பந்து வீசி 8 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 56 ஓட்டங்களினைவிட்டுக்கொடுத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணியினர் 28 ஓவர்களில் 3 விக்கெட்டிழப்பிற்கு 93 ஓட்டங்களினைப் பெற்றிருந்த போது ஆட்ட நேரம் முடிபடைந்ததனால் போட்டி சமனிலையானது.

அதிக பட்சமாக சஜிகன் 64 பந்துகளுக்கு முகம் கொடுத்து 33 ஓட்டங்களினையும், கல்கோபன் 75 பந்துகளுக்கு முகம் கொடுத்து 32 ஓட்டங்களினையும் அதிக பட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் பார்த்தீபன், பங்குஜன் தலா ஒரு விக்கெட்டினைக் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்டநாயகனாக கொக்குவில் இந்துக்கல்லூரியின் கே.சிலோஜனும் சிறந்த துடுப்பாட்ட வீரராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் ரி.சத்தியனும், சிறந்த பந்து வீச்சாளராக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மதுசனும், சிறந்த களத்தடுப்பாளராக கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆதித்தனும் தெரிவாகினர்.

படங்கள் : க.மதீசன், ஸ்ரீ.துவாரகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களும் அரசின் மீது நம்பிக்கை இழந்துவிட்டனர்

சுரேஷ் எம்.பி.தெரிவிப்பு

கடந்த வருடம் ஜெனீவாவில் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை கொண்டு வந்தவேளை அதைக் கண்டித்து பெரும் எடுப்பில் இலங்கையில் ஆர்ப்பாட்டங்களை நடத்திய முஸ்லிம் மக்கள் இந்த வருடம் அமைதியாக இருக்கின்றார்கள். தமிழ் மக்கள் மட்டுமல்ல முஸ்லிம் மக்களும் மஹிந்த அரசு மீது நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதையே இது காட்டுகிறது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இலங்கையில் பள்ளிவாசல்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் ஹலால் தொடர் பில் விடுக்கப்படும் மிரட்டல்களால் முஸ்லிம் மக்கள் கடும் கொதிப்பில் உள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச் சந்திரன் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கடந்த காலங்களில் பொய்களைக்கூறி உலக நாடுகளை ஏமாற்றி வந்த மஹிந்த அரசு இந்த வருடம் ஜெனீவா அரங்கில் சிக்குண்டு துடிக்கின்றது.

கடந்த வருடம் ஜக்கிய மனித உரிமைகள் பேரவையின் ஜெனீவா மாநாட்டில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா பிரேரணை கொண்டு வந்த வேளை மஹிந்த அரசின் அமைச்சர்கள் உட்ட நூற்றுக்கணக்கானவர்கள் அங்கு படையெடுத்து சண்டித்தனம் காட்டினர். ஆனால், இம்முறையும் இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா பிரேரணையை நிறைவேற்றவுள்ள நிலையில் ஜெனீவாவுக்கு மஹிந்த அரசின் சார்பில் மிகக் குறைவானவர்களே சென்றுள்ளனர்.

ஏனெனில், உலகத்தை இனிமேல் ஏமாற்ற முடியாது என்பதை மஹிந்த அரசு உணர்ந்துவிட்டது. தமது படைகள் தமிழ் மக்கள் மீது இழைத்த பாரதூரமான மனித உரிமை மீறல்களை மூடி மறைக்க முடியாத நிலையில் மஹிந்த அரசு திண்டாடுகின்றது. குறிப்பாக சொல்லப் போனால் உலக நாடுகளின் முன் முகம் கொடுக்க முடியாத நிலையில் தற்போது இலங்கை அரசு உள்ளது.

எனவே, ஜெனீவாவில் இம்முறை இலங்கை அரசுக்கு எதிராக அமெரிக்கா நிறைவேற்றவுள்ள பிரேரணை, திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியை-தீர்வைப் பெற்றுத் தரக்கூடிய வகையில் அமைய வேண்டும்.

இலங்கையில் பள்ளிவாசல்கள் மீது இனவெறி பிடித்த பேரினவாதத்தால் நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் ஹலால் தொடர்பில் மஹிந்த அரசின் அடிவருடிகளால் விடுக்கப்படும் மிரட்டல்களால் முஸ்லிம் மக்கள் கடும் கொதிப்பில் உள்ளனர்.

இதனால் அரசுக்குச் சார்பாக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்த முஸ்லிம் மக்கள் முன்வரவில்லை. முஸ்லிம் கட்சிகள் அரசுடன் சேர்ந்து கூக்குரல் இட்டாலும் முஸ்லிம் மக்கள் தற்போது அதிலிருந்து ஒதுக்கியுள்ளனர் என்று தெரிவித்தார். (அ-2)

கஞ்சா பயிர் செய்த நபருக்கு அபராதம்

கஞ்சா பயிர் செய்த குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் திருமதி சதீஸ்குமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளி எனக்கண்டு 3 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒரு வார சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளித்தார். (அ-3)

சொற்பொழிவு

(தும்பளை)

தொண்டைமானாறு செல்வசந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த கலை நிகழ்வும் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும் ஆறுமுகபெருமான் எனும் தலைப்பில் காரை எம்.பி அருளானந்தம் சொற்பொழிவாற்றவுள்ளார். . (அ-3-19)

கிருஸ்னா அடைவு சேவை

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல.09, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு.இல : J/DS/BR/472

மேற் குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2012 ஆம்ஆண்டு (28.02.2012) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2013 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி (15.04.2013) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவு தொகையைக் கூட்டிப் பெற்றுக்கொள்ளவும். அல்லது ஒரு பகுதி பணத்தைக் கட்டி புதுப்பித்துக்கொள்ளவும். இரண்டும் செய்யத் தவறின் 15.04.2013 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

இல.370, கே.கே.எஸ்வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 4900311 (சி-2670)

உரிமையாளர்
இல.09, கன்னாதிட்டி வீதி.
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 5046

இந்தி கற்பதற்கான புலமை பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் ஆக்ரா மத்திய இந்தி நிறுவனத்தில் 2013-2014 ஆம் ஆண்டில் இந்தி (ஹிந்தி) பயில்வதற்காக, இந்திய அரசினால் வழங்கப்படும் புலமைப்பரிசிலுக்கு இலங்கை மாணவர்கள் விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறித்த புலமை பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப் பதற்கான தகைமையாக க.பொ.த உயர் தரம், அல்லது ஆக்ரா சேந்திரய இந்தி சனஸ் தான் இல் மத்தியம் அல்லது 100,200 கற்கை நெறி அல்லது இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றில் இந்தி கற்கைநெறி ஒன்று செய் திருத்தல் வேண்டும்.

மேலும் எதிர்வரும் முதலாம் திகதியில் 21வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் 8 ஆம் திகதி வரையும் முற்பகல் 9.30 மணியிலிருந்து பிற்பகல் ஒரு மணிவரை 16/2 கிறெகரி வீதி, கொழும்பு 7 என்ற முகவரி யில் அமைந்துள்ள இந்தி கலாசார மையத் திலோ அல்லது இல.14, மருதடி வீதி, யாழ்ப்பா ணத்தில் உள்ள இந்திய துணைத் தூதரகத் திலோ பெற்றுக் கொள்ளமுடியும்.

ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் ஒரு மணிக்குள் விண்ணப் பங்களை நேரடியாக சமர்ப்பிக்க வேண்டும்.

இதேவேளை, 24 ஆம் திகதி அன்றைய தினமே நேர்முகப் பரீட்சை நடைபெறும் என்பதோடு தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு விமானப் பயணச்சீட்டு, உதவிப்பணம் , விடுதிவசதி; புத்தகங்கள் வாங்குவதற்கான கொடுப்பனவு ஆகியன வழங்கப்படும் என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களை யாழ்.இந்திய துணை தூதரகத்தின் 021 2220504 அல்லது 222 0505 என்ளனும் தொலைபேசி இலக்கங் கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (அ-5)

கட்சியை பதிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது ஏன்?

(கொழும்பு)

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தனது கட்சியை பதிவு செய்வதில் உள்ள தாமதம் குறித்து கேட்டறிய நேற்று தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவை சந்தித்துள்ளார்.

கட்சியை பதிவு செய்வதற்கான அனைத்து ஆவணங்களையும் அவர் தேர்தல்கள் ஆணையாளரிடம் கையளித்துள்ளார்.

கட்சியில் இதுவரை இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை எத்தனை? இதுவரை காலமும் ஆற்றிய செயற்பாடுகள் என்ன? போன்ற கேள்விகளை தேர்தல்கள் செயலக அதிகாரிகள் இதன்போது சரத் பொன்சேகாவிடம் எழுப்பியுள்ளனர்.

குறித்த ஆவணங்கள் மாத்திரமன்றி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளையும் கவனத்தில் கொண்டு ஜனநாயக கட்சியை பதிவு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தேர்தல்கள் ஆணையாளர் முற்படுவார் என்று சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையிலான சந்திப்பின் பின்னர் செய்தியாளர் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இந்த தகவல்களை வழங்கினார்.

தீப்பந்த சின்னத்தின் கீழ் எதிர்வரும் மாகாண சபை தேர்தல்களிலும் ஜனநாயக தேசிய கூட்டமைப்பு கூட்டு கட்சியாக போட்டியிடவுள்ளது எனவும் அவர்நம்பிக்கை வெளியிட்டார். இதற்கு முன்னரும் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளை சந்தித்த சரத் பொன்சேகா ஜனநாயகக் கட்சியை பதிவு செய்வதில் ஏற்பட்டுள்ள தாமதம் குறித்து முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இவர்களுக்கு மணமகள் தேவை

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1979 இந்து வேளாளர் நட்சத்திரம்: திருவோணம் 1 உயரம்: 5'2" கி.பா: 55, 12 இல் செவ். தகைமை/தொழில்: A/L, (சொந்தக்கடை) தொ.இ: B -1409	பிறப்பு: 1986 இந்து வேளாளர் நட்சத்திரம்: பூசம் 2 உயரம்: 4'9" கி.பா: 19, 12 இல் செவ் தகைமை/ தொழில்: O/L தொ.இ: G -1422
பிறப்பு: 1977 இந்து வேளாளர் நட்சத்திரம்: ரோகினி உயரம்: 5'5" கி.பா: 15.5 8 இல் செவ் தகைமை/தொழில்: O/L (UK Citizen) தொ.இ: B -1410	பிறப்பு: 1978 இந்து விஸ்வகுலம் நட்சத்திரம்: புனர்பூசம் 1 உயரம்: 5'3" கி.பா: 42 தகைமை/ தொழில்: A/L பகுதிநேரஆங்கில ஆசிரியர் தொ.இ: G-1425
பிறப்பு: 1971 இந்து நட்சத்திரம்: மகம் உயரம்: 5'6" கி.பா: 42, 8 இல் செவ் தகைமை/ தொழில்: Degree (work in super market) (UK-PR) தொ.இ: B -1411	பிறப்பு: 1974 இந்து நட்சத்திரம்: பூரம் 2, 2 இல் செவ் தகைமை/ தொழில்: A/L தொடர்பாடல் (தனியார்) தொ.இ: G -1428
பிறப்பு: 1976 இந்து குருகுலம் நட்சத்திரம்: உத்தராடம் தகைமை/தொழில்: A/L, கப்பல்துறை (கொங்கொங்) தொ.இ: B -1413	பிறப்பு: 1982இந்து செங்குந்தர் நட்சத்திரம்: அனுசம் 2 உயரம்:5'7" கி.பா: 30, 4இல் செவ் தகைமை/ தொழில்: விவசாய டிப்ளோமா தொ.இ: G -1410

சகல தொடர்புகளுக்கும்:-

கல்யாண மாலை

(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)

வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் இடமாற்றத்தின் பின்னர் பதிலாசிரியர்கள் நியமிக்கப்படவில்லை

பெற்றோர் குற்றச்சாட்டு

(சித்தன்கேணி)

வலிகாம வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கு பதிலாக ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை என பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

வலிகாம வலயத்தில் இருந்து வன்னிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களுக்கு பதிலாக வலிகாம வலய பாடசாலைகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் அவ் ஆசிரியர்கள் கற்பித்த பாடங்கள் தற்போது கற்பிக்கப்படுவதில்லை எனவும் அதனால் மாணவர்களே பாதிக்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன் ஆரம்ப பிரிவு பாடசாலைகளில், உயர்தர பாடசாலைகளில் கடமையாற்றக் கூடிய தரங்களை உடைய அதிபர்களையும் உயர்தர பாடசாலைகளில் ஆரம்ப பிரிவில் கடமையாற்றக்கூடிய தரத்தை உடைய அதிபர்களையும் நியமித்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயங்களில் கவனமெடுத்து உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பெற்றோர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (அ-3-17)

ஆவணங்கள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வளலாய் மேற்கு அச்சுவேலி என்ற முகவரியை உடைய கந்தசாமி ஸ்ரீகாந்தராசா என்பவரின் 662880655V என்ற இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், விசேட அடையாள அட்டை அடங்கிய ஆவணங்கள் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும். (அ-5)

ஸ்ரீ நாகலிங்கேசுவரர் ஆலய கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் வடக்கு ஸ்ரீ நாகலிங்கேசுவரர் ஆலய புனராவர்த்தன மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி நாளை மறுதினம் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 8.30 மணிவரை ஹோம பூசைகளும் கிரியைகளும் நடைபெறும்.

தொடர்ந்து 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை எண்ணெய் சாத்தும் வைபவம் இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை முற்பகல் 7 மணிக்கு யாகபூசை, அலங்காரபூசை என்பன இடம்பெற்று 10 மணிக்கு மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் என நாகலிங்கேசுவர்பரிபாலனசபை அறிவித்துள்ளது.(அ-5)



பாலச்சந்திரன் கொல்லப்பட்டமைக்கு சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றம்

(கரவெட்டி)

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் இளைய மகன் பாலச்சந்திரன் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையில் கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தில் அதிகமான மக்கள் இராணுவத்தினரிடம் சரணடைந்தனர்.

இதன்போது 12 வயதுடைய சிறுவனான பாலச்சந்திரனும் சரணடைந்தபோது இராணுவத்தினரால் பாலச்சந்திரன் சுட்டுக் கொல்லப்படும் காணொளி அண்மையில் வெளியிடப்பட்டது.

இதற்கு பல தரப்புக்களாலும் எதிர்ப்பும் கண்டனமும் வெளியிடப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் விசேட கூட்டம் கடந்த 27 ஆம் திகதி இடம்பெற்றது.

இதன்போது சபை உறுப்பினரான ஆ.மதியரசன் இக்கண்டன கோரிக்கையை சபையில் முன்வைத்தார்.

அதற்கு எதிரணியை சேர்ந்த இரு உறுப்பினர்கள் இக்கண்டனத்திற்கு மீளாய்வு செய்வதாகவும் தெரிவித்தனர்.

ஏனைய 16 உறுப்பினர்களும் இக்கண்டன தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்ததை அடுத்து இக்கண்டன தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது. (அ-3-24)

தொழில்நுட்பம் தொடர்பான விரிவுரைகள் நாளை

(யாழ்ப்பாணம்)

தரம் 9 மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்வி நனோ தொழில்நுட்பம் தொடர்பான விரிவுரை அமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமை யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

Practical action நிறுவனத்தின் மூலம் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் கலந்துகொள்ளும் இவ் விரிவுரை அமர்வில் தரம் 9 முதல் தரம் 13 வரையான மாணவர்கள் கலந்து கொள்ள முடியும் என அதிபர் எஸ்.நோபேட் உதயகுமார் அறிவித்துள்ளார். (அ-5)

காண்பியற்கலை கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கலை வட்டம் மற்றும் நுண்கலைத் துறையின் ஆதரவில் நடைபெறும் அ.யேசுராசாவின் பதிவு என்னும் காண்பியக்கலை காட்சி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முதல் எதிர் வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் புதிய கட்டடத்தொகுதியில் நடைபெறவுள்ளது.

இதில் விருந்தினர் பேராசிரியர் கே.கந்தசாமி கண்காட்சியை திறந்து வைக்கவுள்ளார்.

இக் காட்சி நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் பேராசிரியர் அ.றோ.கிருஷ்ணவேணி அழைப்பு விடுத்துள்ளார். (அ-5)

விவசாயிகளின் இழப்பீட்டு உதவிகளை சம்மேளனம் பெற்று கொடுக்க வேண்டும்

யாழ்.மாவட்ட அமைப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாயச் செய்கையின்போது ஏற்படும் இயற்கை அனர்த்தங்களால் பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் மானியங்கள் மற்றும் இழப்பீட்டுத் தொகை, விவசாய உபகரணங்கள் உரியவர்களுக்கு சென்றடையும் வகையிலான செயற்பாடுகளை விவசாய சம்மேளனத்தினர் முன்னெடுக்க வேண்டும் என யாழ்.மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் தெரிவித்துள்ளார்.

வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பண நிகழ்வில் அண்மையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபையை அங்குரார்ப்பணம் செய்ததுடன் மட்டுமல்லாது அதனை சிறந்த முறையில் செயற்படுத்துவதிலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் விவசாய சம்மேளனத் தலைவர்களும் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

விவசாயத்தினை பிரதான தொழிலாகக் கொண்ட மக்கள் வாழ்கின்ற பிரதேசமாகையால் அவர்களின் நலனை கருத்திற்கொண்டு இன்றைய தினம் அங்குரார்ப்பணம் செய்யப்படும் வலி.கிழக்கு விவசாய அபிவிருத்திச் சபை சிறந்த முறையில் விவசாயிகளின் நலனை முன்னிருத்திச் செயற்பட வேண்டும் எனவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியானது நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயிகளின் நலனில் மிகுந்த கரிசனை கொண்டதாக செயற்படும் எனத் தெரிவித்தார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நன்கு திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள விவசாய அபிவிருத்தி சபையில் இப்பிரதேசத்திலுள்ள 31 விவசாய சம்மேளனங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய மணவாளக்கோலம் 1008 மஹாசங்காபிசேக திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து சண்முக அர்ச்சனையும் முருகப் பெருமானின் வீதியுலாவும் நடைபெறவுள்ளது. (அ-5)

வடமாகாண கல்வி திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்திற்கு அமைவாக ஆயிரம் இடைநிலை பாடசாலை 5 ஆயிரம் ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி தொடர்பான அறிவுறுத்தல் கலந்துரையாடல் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு யாழ்.கல்வியியற் கல்லூரி கேட்போர் கூடத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி அதிபர் ஒருவருக்கு கணனி வழங்கி வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட வடமாகாண அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கருத்து சுதந்திரத்தை பறிக்கும் வகையில் சாளின் மீது தாக்குதல்

சிறிதரன் எம்.பி கண்டனம்

இளைய தலைமுறையினரது கருத்து சுதந்திரம் தலைமுறை உருவாகுவதை திட்ட மிட்டு தடுக்கும் வகையில் ஊடகவியலாளர் களையும் ஊடகங்களையும் மீறும் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

இதன் தொடர்பில் வலம்புரி பத்திரிகை யின் அலுவலக செய்தியாளர் உதயராசா சாளின் இனந்தெரியாத 6 பேர் கொண்ட குழுவினரால் நடுவீதியில் தாக்குதல் மேற் கொள்ளப்பட்ட சம்பவமானது கண்டிக்கத் தக்க செயலாகும். இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

தாக்கப்பட்ட வலம்புரி பத்திரிகையின் அலுவலக செய்தியாளர் சாளினை அவரது இல்லத்தில் நேற்று முன்தினம் மாலை சந் தித்து அவரது நிலை தொடர்பாக கேட்டறிந்த பின்பு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், வடக்கில் இருக்கும் மக்களின் கருத்து சுதந் திரத்தை பறிக்கும் வகையிலும் அவர்கள் மௌனிகளாக இருக்க வைக்கும் நோக்கு டனேயே இவ்வாறான காட்டுமிராண்டித்தன மான சம்பவம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.

தமிழ் தேசியத்தை வளர்க்கும் நோக்குடன் இளைய தலைமுறைகள் உருவாகுவதை அரசாங்கம் விரும்பவில்லை. அதன் வெளி ப்பாடே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுக் கொண்டு இருப்பதாக அவர் மேலும் தெரி வித்தார். (அ-6)

உடனடியாக அனைத்துலக விசாரணை வேண்டும்

நாடு கடந்த அரசு கையேடு வெளியிட்டது

உடனடியான அனைத்துலக விசாரணை வேண்டும். தமிழ் மக்கள் மீதான திட்டமிட்ட மனித உரிமை மீறல்கள் எனும் கையேடு ஒன்றினை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைச் சபையில் தமிழீழ தரப்பு பிரதிநிதிகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் இராஜதந்திரச் செயல்களுக்கு வலு வூட்டும் வகையில் இக்கையேடு ஐ.நா. மனித உரிமைச் சபை வளாகத்தில் வெளியிடப் பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் அமெரிக்கா கொண்டு வரவுள்ள பிரேரணை ஒன்றினை சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் இக் கையேடானது அனைத்துலக விசாரணைக் கான தேவை வலியுறுத்தி நிற்கின்றது.

நாடு கடந்த தமிழீழ மனித உரிமைகள் போர்க்குற்றம், இனப்படுகொலை விவகா ரங்களுக்கான அமைச்சகத்தினால் உருவாக் கப்பட்ட இந்தக் கையேடானது 2012 ஆம் ஆண்டில் மனித உரிமைப் பேரவைக் கூட்டத் தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களையும் அதன் தொடர்பான செயற்பாடுக ளையும் ஆராய்கின்றது.

அத்துடன் இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்ட காலத்திலிருந்து பொறுப்புக்கூறல் தொடர் பாக இலங்கை செய்தவற்றையும் செய்யாது விட்டவற்றையும் இந்தக் கையேடு ஆவ ணப்படுத்துகின்றது. அதுமட்டுமின்றி ஐ.நா வினதும் அனைத்துலக சமூகத்தினதும் செயற் பாட்டின் குறைபாட்டையும் இந்நூல் விளக் குகின்றது.

இதேவேளை ஐ.நாவுக்கு வெளியேயாக பல்வேறு நாடுகளிலும் இக்கையேடு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் வெளியி டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

இலங்கை அரசுக்கு எதிராக ஜெனீவாவில் 62 இலங்கையர்கள்

ஜெனீவா மனித உரிமைப் பேரவையில் உயர்ந்த தலைமையிலான இலங்கைக்கு எதிராக அமெரிக்கா முன்வைக்கவுள்ள பிரே ரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சார்ந்த சுமார் 62 இலங்கைப் பிரதிநிதிகள் ஜெனீவாவுக்கு சென்றுள்ளனர் என தெரியவருகின்றது.

மேலும், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அங்கத்தவர்களும் இலங்கை அரசை சர்வ தேச நீதிமன்றத்தின் முன்னிறுத்த வேண்டு மென்று தொடர்ச்சியாக அங்கு வலியுறுத்தி வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் தேசப்படத்தில் மூன்றில் இரண்டு பகுதி தமிழீழ இராச்சியத்துக்குச் சொந்தமானது என்பதைக் காட்டும் வரை படங்கள் கூட அங்கு காட்சிப்படுத்தப்பட்டன.

இலங்கைக்கு எதிரான செயற்பாடுகளை வலியுறுத்துவோர் மத்தியில் சிங்களவர்களும் காணப்படுகின்றனர் என்றும் இணையத் தள செய்திகள் மேலும் கூறுகின்றன.(அ-2)

ஹலால் ஏற்றுமதிகளின் போதும் நிராகரிக்கப்படவேண்டும்

பொதுபலசேனா அமைப்பு

ஹலால் சான்றிதழ் குறித்து விவாதம் இன்னும் தொடரவேண்டும் என்று பொது பலசேனா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இந்த வலி யுறுத்தல் விடுக்கப்பட்டது.

ஹலால் சான்றிதழை விநியோகிப்பதி ல்லை என்றும் ஏற்றுமதிகளுக்காக மாத்திரம் ஹலால் சான்றிதழ் இலவசமாக வழங்கப் படும் என்றும் ஜம்மியத்துல் உலமா சபை யினர் அறிவித்தனர்.

எனினும் ஏற்றுமதிகளின் போது ஹலால் சான்றிதழ் கட்டாயமானது என்ற நிபந்த னையை நீக்கவேண்டும் என்று தற்போது பொதுபலசேனா அமைப்பு வலியுறுத்தி வரு கிறது. சிங்கள மக்கள் இதனை முற்றாகப் புறக்கணிக்க வேண்டும்.

தற்போது சந்தையிலுள்ள பொருட்களில் ஹலால் சான்றிதழ் பொறிக்கப்பட்டுள்ள பொருட்களை சிங்களவர்கள் கொள்வனவு செய்யக்கூடாது எனவும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (அ-2)

முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

திருமதி லலிதா சண்முகலிங்கம்

(ஓய்வு பெற்ற உப அதிபர், யா/நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

அரியாலையூர் லலிதா சண்முகலிங்கம் ஆகிய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் அபிஷேகமும் 'செல்வச் சந்நிதி' ஆலயத்தில் 14.03.2013 அன்று காலை 10 மணி அளவில் நடைபெற்று தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் 12 மணி அளவில் பிரார்த்தனையும் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும் உறவினர், நண்பர்கள், அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

125, திருமகள் வீதி,
அரியாலை – நல்லூர். (2121)

தகவல்: வி.கே.சண்முகலிங்கம்
கிரிக்கெட் பயிற்றுநர், குடும்பத்தினர்

ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

திருத்தந்தை பெனடிக்கை நாமும் பின்பற்றுவோம்

என்னைப்பற்றி நானே சான்று பகிர்ந்தால், என் சான்று செல் லாது. என்னைப்பற்றி சான்று பகிர வேறு ஒருவர் இருக்கிறார். என் னைப்பற்றி அவர் கூறும் சான்று சொல்லும் என எனக்குத் தெரியும் எனும் இயேசு கூறும் வேதாகமப் பகுதி இன்று எமக்கு தரப்படுகின்றது.

திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் தனது பொறுப் பிலிருந்து விலகுவதாக அறிவித்தபோது பல தலை வர்கள் அவர் அறி வித்த முடிவைப் பற்றி கருத்துக்கள் கூறிய வண்ணம் உள்ள னர். நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன். என் ஓட்ட த்தை முடித்துவிட்டேன். விசுவாசத்தைக் காத்துக் கொண் டேன். இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே. அதை இறுதி நாளில் ஆண்டவர் எனக்குத் தருவார் என்று தந்தை தன்னிடம் ஒப்படைத்த பணியை நிறைவாக செய்து விட்டதாகவே எண்ணி யிருக்கலாம்.

திருத்தந்தை 16 ஆம் பெனடிக் புரட்சிகரமான இந்த அறிவித்ததைக் குறித்தும் கருத்துக்கள் கூறப்ப டுகின்றன.இக்கருத்துக்களில் ஒன்று, இறை பக்தியோ, மத நம்பி க்கையோ இல்லாத ஒரு மனித நேயப் பணியாளரும் இந்தியாவின் வாரணாசி நகரில் மனித உரிமை பற்றிய மக்களின் கண்காணிப்புக் குழு என்ற அமைப்பை நடத்தி வருபவர் Lenin Raghuvanshi என்பவரது கருத்தை இங்கு நோக்குவது நல்லது. இவர் ஏசியன் நியூஸ் என்ற செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில்,

திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்கள் தன் சொந்த வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களை பற்றியும் அழகாகக் கூறியிருக்கிறார். நான் பிறந்தது இந்து மதத்தில். அங்கு நிலவிய சாதியப் பிரிவுகளையும் தலித் மக்கள் தீண்டத்தகாதவர்கள் என்ற நிலைப்பாட்டையும் கண்டு, மதத்தையும் இறைவனையும்நான் வெறுத்து ஒதுக்கினேன். திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்கள் இறைவன் மதம் என்ற எண்ணங்களை மீண்டும் என் மனதில் விதைத்தார். இவர் வறுமை, பட்டினி, சமூக அநீதி ஆகியவற்றை பற்றி துணிவுடன் பேசினார்.

ஐ.நா. பொது அவையில் 18.04.2008 ஆற்றிய உரையைக் கேட்டேன். உலகில் நிலவும் பல பிரச்சினைகளின் ஆணிவேர் மனித உயிர்களுக்கு நாம் வழங்க மறுக்கும் மதிப்பு என் றும், மனித மதிப்பும் மனித உரிமையும் நிலைநாட்டப்பட்டால் பல பிரச்சினைகள் தீரும் என் றும் அவர் கூறியது என்னை அதிகம் கவர்ந்தது. அவர் தன் உரைகளில் கடவுளைப்பற்றி பேசிய போது கடவுளை நான் வெறுத்து ஒதுக்கவில்லை என்பதைப் புரிந்துகொண்டேன். எனவே கடவுள் மறுப்பாளி என்ற நிலையிலிருந்து பகுத்தறிவாளி என்ற நிலைக்கு நான் மாறக் காரணம் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் அவர்களே. இன்று நாம் கிறிஸ்தவ மறையில் ஒருவித ஈடுபாடு கொண்டிருப்பதற்கு காரணம் இயேசு கிறிஸ்துவை பற்றி திருத் தந்தை கூறிய கருத்துக்களே என்று திருத்தந்தையை பற்றி புகழ்ந்து கூறியுள்ளார். Lenin Raghuvanshi அழுத்தந்திருத்தமாய் கூறிய ஒரு கருத்தை நாம் மீட்டிப்பார்க்கலாம். மனிதம் எதிர்காலத்தில் வாழவேண்டுமெனில் ஆன்மீகத் தலைவரான இந்தத் திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ட் போன்ற தலைவர்களை இவ்வுலகம் கேட்பது மிகவும் அவசியம்.

நாமும் நம் தந்தையை போல பலரை கடவுள் பக்கம் திருப் புவோம். பலர் எம்மை பற்றி சான்று பகர நாம் வாழ்வோம்.

மடுமாதா சிஸ்டர்ஸ் கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பங்குனி மாத ராசி பலன்கள்

14.03.2013-13.04.2013

மிதுனம்

மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்

தொழில் வளர்ச்சி மேலோங்கும்! பேச்சாற்றல் மூலமாக பெரிய பெரிய காரியங்களை எல்லாம் சாதித்துக் கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தொழில் ஸ்தானத்திலேயே சகாய ஸ்தானாதிபதியும் தனாதிபதியும் இணைந்து சஞ்சரித்து மாதம் தொடங்குவதால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். இருப்பினும் 10 ஆம் இடத்தில் உள்ள செவ்வாய் காரணமாக புதிதாக வாங்கிய சொத்துக்களாலும் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். என்ன இருந்தாலும் செவ்வாய், சனி பார்க்கும் நேரங்களில் கூடுதல் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. கொடுக்கல்- வாங்கல்களில் நண்பர்களால் ஏமாற்றமும் வந்து சேரும். எதிர்பாராத லாபமும் வந்து சேரும். இராசிநாதன் புதன் மாதத்தின் மையப்பகுதியில் நீச்சம் பெறுவதால் ஆரோக்கியத்திலும் கொஞ்சம் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும். பிறரை நம்பி செய்த காரியங்கள் தேக்க நிலையில் இருக்கலாம். ஊக்கம் கொடுத்தவர்கள் உங்களை விட்டு விலகாமல் பார்த்துக் கொள்வது மேன்மை தரும். பிள்ளைகள் மீது பிரியம் கூடுதலாக காட்டுவது நல்லது. அவர்களின் போக்கில் மாற்றம் தெரிந்தால் உடனடியாக கண்டிக்காமல் அன்பு காட்டி திருத்துவதே நல்லது. பஞ்சமஸ்தானாதிபதி சுக்கிரனும் பலம் இழந்து இருக்கிறார். எனவே, இதுபோன்ற நேரங்களில் சுக்ர வழிபாட்டையும் புதனுக்குரிய விஷ்ணு வழிபாட்டையும் முறையாக மேற்கொள்வது சிறப்பு தரும்.

இராசிநாதன் நீச்சம் பெறும் நேரத்தில் மன சஞ்சலங்கள் அதிகரிக்கும். பணப் பற்றாக்குறை ஏற்படும். கணப்பொழுதில் முடிவடைய வேண்டிய காரியம் கடைசிவரை இழுத்துக் கொண்டே செல்லலாம். எனவே, எப்படி செய்தால் காரியம் எளிதில் வெற்றி பெறும் என்பதை குடும்ப பெரியவர்களை கலந்து ஆலோசித்து செய்வது நல்லது.

மீன சுக்கிரனின் சஞ்சாரம்!

5,12 க்கு அதிபதியான சுக்ரன் மார்ச் 18 ஆம் திகதி உச்சம் பெறப்போகிறார். புத்திர ஸ்தானத்திற்கும் விரய ஸ்தானத்திற்கும் அதிபதியான சுக்ரன் உச்சம் பெறும்போது பிள்ளைகள் வழியில் பெரும் விரயம் உருவாகும் அமைப்பு உண்டு. எனவே, அவர்களின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். கல்யாண வாய்ப்புகள், கடல் தாண்டும் வாய்ப்புகள், கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் அனைத்தும் ஒவ்வொன்றாக நடைபெறுவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

மீன புதனின் சஞ்சாரம்!

ஏப்ரல் 4 ஆம் திகதி இராசிநாதன் புதன் நீச்சம் பெறுகிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் நீச்சம் பெறுவது யோகம்தான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு இணங்க, எதிர்பார்த்த விதத்தில் நல்ல வாய்ப்புகள் வந்தாலும் உயில் ஆரோக்கியம் மட்டும் சீராக இருக்காது. மருத்துவ செலவுகள் கூடும்.

மேஷ செவ்வாயும் சுக்ர பெயர்ச்சியும்!

ஏப்ரல் 10 ஆம் திகதி மேஷத்தில் செவ்வாய் சஞ்சரித்து சனியை சப்தம பார்வையாக பார்க்கப்போகிறார். அதோடு மறுநாள் சுக்ரனும் இணைகிறார். இதன் விளைவாக சொத்து விற்பனையால் தன இலாபமும் கிடைக்கும். மூத்த சகோதரத்தால் ஏற்பட்ட தொல்லைகள் அகலும். விலை உயர்ந்த பொருட்கள் வாங்க முன்வருவீர்கள். இட மாற்றம், ஊர் மாற்றம், இலாகா மாற்றம் போன்ற வைகள் ஒரு சிலருக்கு உருவாகலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். இம்மாதம் அங்காரக வழிபாட்டில் ஆர்வம் காட்டுங்கள். அமைதி கிடைக்கும்.

இம்மாதம் இனிய மாதம்தான். என்றாலும் விரயங்கள் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும். இதுவரை பகையாக இருந்த உறவினர்கள் உங்கள் மீது பாசம் காட்டுவர். இதுவரை பாசத்தோடு பழகியவர்கள் உங்களை விட்டு விலகுவர். எனவே, பக்குவமாக நடந்து கொண்டால் பக்கத்தில் இருந்து ஒத்துழைப்பவர்களின் எண்ணிக்கை கூடும். கணவன்- மனைவிக்குள் அன்னோன்யம் அதிகரிக்கும். மாதக் கடைசியில் உங்கள் பெயரிலேயே சொத்துக்கள் வாங்கும் சூழ்நிலை உருவாகலாம். சனி கவசம் பாடி சனீஸ்வரரை வழிபடுவதோடு முருகப்பெருமானையும் வழிபட்டு வாருங்கள். உள்ளத்தில் அமைதி பிறக்கும்.

தொழில் வளர்ச்சி மேலோங்கி எதிர்பாராத இலாபம் வந்து சேரும் பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும்

சிவல்புரி சிங்காரம்

புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

மாதத்தின் முற்பகுதியில் மகிழ்ச்சி கூடும்! சுறுசுறுப்பாக பணியாற்றி சொல்லை செயலாக்கிக் காட்டும் கடக இராசி நேயர்களே!

இந்த பங்குனி மாத கிரக நிலைகளை ஆராந்து பார்க்கும் பொழுது, மாதத்தின் தொடக்கத்தில் புதனும் சுக்ரனும் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார்கள். 8 க்கு அதிபதி புதன் 8 இல் சஞ்சரிக்கிறார். எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். வழக்குகளிலும் வாழ்க்கையிலும் திருப்பங்கள் ஏற்படும். அசையா சொத்துக்களை வாங்கியதில் இருந்த பிரச்சினை அகலும். அயல் ராட்டு பயணம் முதல் அடுத்த மாநிலம் வரை செல்ல எடுத்த முயற்சிகளில் இருந்த சிக்கல்கள் தீரும். தெய்வீக பணிகளுக்கு ஒத்துழைப்பு என்னயிருந்தாலும் வீட்டுப் பிரச்சினைகள் சிலவற்றை தீர்க்க முடியாத தாக அமையும். காரணம் அர்த்தாஷ்டம சனியின் ஆதிக்கம்தான். நான்கில் சனி மட்டும் இருந்தாலே தாக்கு பிடிக்க முடியாது. அதோடு ராகுவும் அல்லவா இருக்கிறார்! எனவே வெளியில் உங்களுக்கு எவ்வளவுக் கெவ் வளவு நல்ல பெயர் இருக்கிறதோ அந்த அளவுக்கு வீட்டில் நீங்கள் நல்லபெயர் எடுக்க முடியாது. எனவே, இதுபோன்ற நேரங்களில் சர்ப்ப சாந்தியை முறையாக, யோகபலம் பெற்ற நாட்களில் அனுகூல ஸ்தலங்களில் செய்து வருவது நல்லது. அது மட்டுமல்ல வார வழிபாடாக சனிக் கிழமை தோறும் கருநிற காகமேறி காசினி தன்னைக் காக்கும்... என்ற சனிக்கவசத்தை பாராயணம் செய்து சனிபகவான் சன்னிதியில் எள்தீபம் ஏற்றி வந்தால் அதன் கடுமை குறையலாம். வழிபாட்டின் மூலமாக இனிமை சேர்க்கலாம்.

மீன சுக்ரனின் சஞ்சாரம்!

உங்கள் ராசியைப் பொறுத்தவரை சுக்ரன் உச்சம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. மார்ச் 18 ஆம் திகதி உச்சம் பெறுகிறார். எனவே, பொருள் விரயங்கள் உருவாகலாம். நல்ல விரயங்கள் ஏற்பட வழிவகை செய்து கொள்ளுங்கள். ஆடை, ஆபரண சேர்க்கை மட்டுமல்லாமல் அத்தியாவசியப் பொருட்களையும் மின்சாதன பொருட்களையும் வாங்குவது நல்லது. தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். பிள்ளைகள் நலன் கருதி எடுத்த முயற்சிகளால் சேமிப்பு கரையலாம்.

விரயாதிபதி நீச்சம் பெறும்நேரம்!

3,12 க்கு அதிபதியான புதன் நீச்சம் பெறுவது யோகம்தான். அந்த நிகழ்வு ஏப்ரல் 4 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. அதன்பிறகு பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர ஒற்றுமை பலப்படும். சங்கிலிதொடர் போல வந்த கடன்சுமை குறையும். மாமன்-மைத்துனர் வழியில் நல்ல சம்பவங்கள் நடைபெறும்.

செவ்வாய் பெயர்ச்சியும் சுக்ரப்பெயர்ச்சியும்!

மேஷத்தில் செவ்வாய் மற்றும் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார்கள். அதன் பார்வை சனியின் மீது பதிகிறது. எனவே, பழைய சொத்துக்களை விற்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். அடமானம் வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து, மீண்டும் அடமானம் வைக்கும் சூழ்நிலை உருவாகலாம். வாகன மாற்ற சிந்தனை மேலோங்கும். எலும்பு, நரம்பு சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்பட்டு அகலும் மருத்துவச் செலவு தவிர்க்க முடியாததாக அமையும். இம்மாதம் ஆதியந்த பிரபு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அப்பொழுது தான் பாதியில் நின்ற பணி மீதியும் தொடரும்.



கடகம்

இம்மாதம் ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய மாதமாகும். ஊர் மாற்றம், இடமாற்றம் ஏற்பட்டு உள்ளத்தில் அமைதி இல்லை என்று சொல்வீர்கள். வீட்டில் உள்ள பெரியவர்களை மட்டுமல்லாமல் சிறியவர்களையும் அனுசரித்து சென்றால்தான் அமைதி கிடைக்கும். கோபத்தை குறைத்து கொள்ளுங்கள். கொள்கையை தளர்த்திக் கொள்ளுங்கள். தேக நலனை சீராக வைத்துக் கொள்ள முயற்சி செய்யுங்கள். சனிக்கிழமை விரதமும் சனீஸ்வரர் வழிபாடும் இனிக்கும் நாட்களாக எல்லா நாட்களும் அமைய வழிகாட்டும்.

(தொடரும்)

திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும் வழக்குகளிலும் வாழ்க்கைகளிலும் திருப்பம் ஏற்படும்

செய்வீர்கள். சூரிய சந்திரர்களின் பலம் நன்றாக இருப்பதால் சொல்லை செயலாக்கிக் காட்ட இயலும். நல்லவர்கள் நீங்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள். நாட்டுப் பற்று மிக்கவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும்கூட வந்து சேரலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் உலகப்போர்

71

மானுடத்திற்கான திடக்கண்ணீர்!



"கையில் என்ன பெரியவரே?"
"காகிதப் பை"
"பையில்?"
"கசாப்புக் கடைக் கறி"
"பாலித்தீன் பை இல்லாமல் இது என்ன புதுப்பழக்கம்?"

"இனி எங்கள் ஊரில் இதுதான் வழக்கம். பொருள் வாங்குவதும் அந்தப் பொருளின் கழிவைக் கடத்துவதும் முடிந்தவரையில் காகிதப் பையில்தான். பாலீத்தின் பையைப் புதைத்தால் மக்காது; இந்த மண் எங்களை மன்னிக்காது"

☆☆☆☆☆☆

"பாலித்தீன் ஒழிந்ததா சின்னப் பாண்டி?"

"முடிந்தவரை ஒழிந்தது எமிலி. பாலித்தீன் பைகளில் தானியங்களை அடைப்பது பறவைகளுக்குச் செய்யும் துரோகம். சணல்சாக்கில் தானியம் அடைப்பதே தர்மம்"

"எப்படி?"

"எங்களை நம்பியிருக்கும் பறவைகள் எங்கு போகும்? பாலித்தீன் பைகளைக் கொத்திக் கொத்தி அலகுடைந்து போயின எங்கள் பறவைகள். கோணிச்சாக்குகளில் கொத்தித் தின்னட்டும் பறவைகள். பறவைகள் உயிர்த்தொகுதிகளின் பகுதிகள். பறவைகளின் காடுகளில் மனிதன் தின்னும் போது, மனிதர்களின் தானியத்தைப் பறவைகள் கொள்ளலாகாதா? கொத்தித் தின்ன உகந்தது கோணிச்சாக்குதான். அலகிட்டதுளை வழியே தானியங்கள் எறும்புகளின் உணவாகட்டும். கழற்றி எறிந்தால் கோணிச்சாக்குத்தான் மண்ணில் மக்கும். மண்ணின் வயிறு செரிக்க முடியாத எதுவும் மண்ணுக்கு உணவாக வேண்டாம்"

"பாராட்டுகிறேன்"
"ஏற்றுக் கொள்கிறேன்"

☆☆☆☆☆☆

"அது என்ன ஊருக்கு வெளியே பெருங்குவியல்?"

"மக்காத பொருள்களின் குப்பை அது. புதைத்தாலோ எரித்தாலோ மண்ணோ காற்றோ மாசுறும். அதனால்? மக்காப் பொருள்களை அரைத்துச் சாலை இடும் தார்களில் கலந்து விடுவோம்; அல்லது பெரும் கண்மாய்களின் மத்தியில் இந்தக் குப்பைகளைக் கொட்டி ஒரு தீவுத்திடல் செய்து அதில் ஒரு சோலை உண்டாக்குவோம். படகில் எங்கள் குழந்தைகள் குப்பைத் தீவுக்குச் சுற்றுலா சென்று வரலாம்; பொதுப்பணித் துறைக்கு எழுதியிருக்கிறோம்"

☆☆☆☆☆☆

கூட்டம்; பெருங்கூட்டம்.

பள்ளித்திடலில் ஊரே வழிந்தது.

பஞ்சாயத்துப் பெரியவர்களும் சின்னப்பாண்டியும் எமிலியும் இஷிமுராவும் மேடையில்.

வானொலியில் வாசிக்கிறவன் எங்கோ இருக்க, கீதம் கைதட்டல் பெறுவது மாதிரி, மூலம் சொன்னவள் மௌனமாய் இருக்க மொழிபெயர்த்தவன் கைதட்டல் பெறுகிறான்.

எமிலியின் ஒவ்வொரு சொல்லும் திருவோட்டில் விழும் காசுகள் பிச்சைக்காரனால் கவனிக்கப்படுவது போல் கவனம் பெறுகின்றன.

"நான் அமெரிக்கப்பெண். விருந்தாளியாக வந்தேன்; உங்கள் வீட்டுக்கு வெள்ளையடித்துவிட்டு போகிறேன். ஊர் என்பது வெறும் மண்ணல்ல. மண்ணில் தண்ணீர் கலப்பது போல் ஓர் ஊரோடு தத்துவம் கலக்க வேண்டும். அந்தத் தத்துவத்தோடு சேர்ந்துதான் ஓர் ஊர் முழுமையை நோக்கி முன்னேறுகிறது. இல்லாத எதையுமே மாற்றிவிட முடியாது. உங்களுக்குள் இருந்த ஒன்றுதான் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. வசதியில்லாத ஊர் சுகாதாரமாக இருக்க முடியாது என்று யார் சொன்னது? வசதியில்லாத கூட்டுக்குள் வசிக்கும் ஒரு பறவை தன் அலகால் கோதிக் கோதிக் குஞ்சுப்



பறவையைச் சுத்தம் செய்கிறது. தன் கூடு கழிப்பறையாகி விடாமல் காத்துக்கொள்கிறது. பறவைகளுக்கான வாழ்க்கைமுறை கூட மனிதர்களுக்கு இல்லையா என்ன?"

"உங்களைப் போன்ற உழைப்பாளிகள் உலகத்தில் மிகக் குறைவு. கல்வியும் பொருளாதாரமும் வாய்த்துவிட்டால் உலகத்தில் முன்னேறிய சமூகங்களைக்கூட நீங்கள் முந்திவிடுவீர்கள்" கெதிராய்க் கை தூக்கிப் போராடும் போராளிகள். பள்ளிப் பிள்ளைகள் இதில் ஈடுபடட்டும். விதைகளைக் கொண்டு மரங்களை நடுவோம்"

"அறிவும் பண்பாடும் நம் பிள்ளைகளுக்கு இணை தண்டவாளங்களாயிருக்கட்டும். அறிவு ஈட்டிக் கொடுக்கும்; பண்பாடு காத்துக்கொடுக்கும். பிள்ளைகளே! ஆசிரியர்களை வீட்டுக்கு விருந்துக்கு அழையுங்கள். அவர்கள் உங்களைப் பெறாத பெற்றோர்கள். ஆசிரியர்களே! உங்கள் வகுப்பின் கடைசி மாணவர்களைத் தத்தெடுத்துக் கொள்ளுங்கள். வகுப்பில் வாழ்க்கை முறையும் சொல்லிக் கொடுங்கள்"

"மிக உயர்ந்தது என்று கண்டறியப்பட்ட பொருள் எதுவோ அது உங்கள் ஊரில் மலிவாகக் கிடைக்கிறது. பப்பாளி, நெல்லி, முருங்கை மூன்றும் உங்கள் அன்றாட உணவாய் ஆகிப் போகட்டும். இந்த மூன்றும் உங்கள் கொல்லைப் புறத்து மரங்களாகட்டும்"

"எனக்கொரு கனவு இருக்கிறது. உலகத்தின் எல்லா கிராமங்களும் மரங்கள் என்ற வட்டத்துக்குள் சூழப்பட்டிருக்க வேண்டுமென்று. ஒவ்வொரு கிராமத்தைச் சுற்றி 360 டிகிரியில் வட்டமிடுங்கள். அதில் மூன்றடுக்கு மரங்கள் நடுங்கள். அவற்றுக்குக் காவல் மரங்கள் என்று பெயரிடுங்கள். மரங்களின் சிறகடியில் ஓர் ஊர் பத்திரமாகப் பாதுகாக்கப்படட்டும். புவிவெப்பத்திற்கு எதிராக மனிதன் தொடுக்கும் முதல் போர் இதுவாகயிருக்கட்டும்"

"நான் அமெரிக்கா திரும்பினாலும் மீண்டும் இங்கு வருவேன். உங்கள் ஊரை உங்கள் மாநிலமும்- உங்கள் மாநிலத்தை இந்தியாவும்- இந்தியாவை உலகமும் திரும்பிப் பார்க்கட்டும். மீண்டும் சொல்கிறேன்; மீண்டும் வருவேன்"

அவள்தான் அழகு என்றிருந்த கூட்டம்- அவள் பேச்சு அவளைவிட அழகு என்று கைதட்டியது.

ஒரு குழந்தை மேடையேறி எமிலிக்கும் இஷிமுராவுக்கும் வெற்றிலை மாலை சூடியது. வெற்றிலை போட்ட வாய்போல் வெற்றிலை மாலைக்குச் சிவந்தது அவள் கன்னம். சின்னப்பாண்டி அறிவித்தான்: நம் பள்ளிப் பிள்ளைகள் மரக்கன்றுகள் நட்டார்கள். ஒவ்வொரு மரத்துக்கும் நட்ட குழந்தையின் பெயரே சூட்டப்பட்டது. நட்ட மரத்தை நன்றாக வளர்ப்பதில் முதல் பரிசு பெறுகிறாள் செல்வி மல்லிகா- ஆறாம் வகுப்பு. முதல் பரிசு என்ன தெரியுமா? இன்னும் இரண்டு மரக்கன்றுகள். அந்தக் கன்றுகளை அந்தக் குழந்தையே நட்டுத் தன் அப்பா அம்மா பெயரைச் சூட்டிக் கொள்ளலாம் என்று அறிவிக்கிறோம்"

மேடைக்கு வந்த மல்லிகா மரக்கன்றுகளை வாங்கிக் கொள்ளவில்லை; அழுதாள். நிறுத்தவில்லை; அடைமழைபோல் அழுதாள். கூட்டத்தில் நின்ற அவள் ஆசிரியர்களும் அழுதார்கள். பொதுமக்கள் சிலரும் கண் கலங்கினார்கள்.

"ஏன் அழுகிறது குழந்தை?" என்றான் இஷிமுரா.

"அந்தக் குழந்தைக்கு அப்பா அம்மா இல்லையாம்"

இப்போது இஷிமுராவும் அழுதான்; குழந்தையின் தலைதடவி மார்போடு அணைத்தான்.

"நானும் உன்னைமாதிரித்தான். எனக்கும் அப்பா அம்மா இல்லை. ஆனால், அழாதே. அப்பா அம்மா பெயர்கள் சூட்டி மரங்களை நடு. அப்பா அம்மாதான் குழந்தையை வளர்ப்பார்கள். நீ அப்பா அம்மாவையே வளர்க்கப்போகிறாய்... கொடுத்து வைத்த பெண்ணில்லையா?"

கறுப்புக் கன்னங்களின் கண்ணீரைத் துடைத்தது மஞ்சள் விரல்.

கலைந்தது கூட்டம்.

☆☆☆☆☆☆

"ஊருக்கொல்லாம் பரிசு தந்தாய் சின்னப்பாண்டி. உனக்கொரு பரிசு தரவேண்டாமா?" என்றான் இஷி.

"உங்கள் அன்பை விடவா?" என்றான் சின்னப்பாண்டி.

"ஆமாம். அன்பின் பரிசொன்றை உனக்குத் தர விரைகிறாள் எமிலி. உன்னைத் தனியாகச் சந்திக்க விரும்புகிறாள்; அவளை அழைத்துப் போ"

"எங்கே?"

"உனக்குப் பிடித்த ஓரிடத்திற்கு"

சின்னப்பாண்டி மூளைக்குள் ஒரு படபடப்பு; ஆயிரம் பட்டாம்பூச்சிகளின் படையெடுப்பு. (தொடரும்)

பயிர் கருகியது கண்டு உயிர் மாய்த்துக்கொண்ட ஒரு விவசாயக் குடிமகன் பற்றி எடுத்துக்கூறும் "மூன்றாம் உலகப் போர்" எனும் நூலின் ஊடாக கிடைக்கப் பெறும் வருமானத்தை, தற்கொலை செய்து கொண்ட விவசாயக் குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்போவதாக இந்நூலினை எழுதிய கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

இலக்கிய சிந்தனை அமைப்பின் சார்பில் இவ்வாண்டுக்கான இலக்கிய சிந்தனை விருது கவிஞர் வைரமுத்துவின் "மூன்றாம் உலகப்போர்" எனும் நூலிற்கு வழங்கப்படவுள்ளதாக இலக்கிய சிந்தனை அமைப்பின் அறங்காவலர் இலட்சுமணன் வெளியிட்டுள்ளார்.

இவ்விருது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 12 ஆம்திகதி நடைபெறும் விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளது.

அத்துடன் ஒரு குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் 11 குடும்பத்திற்கும்11 இலட்சம் ரூபா வழங்கப்படும் என்பதையும் அவர் கூறியுள்ளார்.

"பறவைகளின் காடுகளை மனிதன் தின்னும்போது மனிதர்களின் தானியத்தை பறவைகள் கொள்ளலாகாதா?"

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை மத்திய அரசு ஆதரிக்க வேண்டும்

வேலை நிறுத்தம் வெற்றி என்கிறார் கருணாநிதி

தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தமிழின உணர்வோடு பொங்கியெழுந்து இந்தப் பொது வேலை நிறுத்தத்தை மிகப் பெரிய வெற்றியாகத் தந்திருக்கிறார்கள். இந்தப் பெரிய வெற்றிகரமான போராட்டத்திற்குப் பின்னராவது மத்திய அரசு இலங்கைக்கு எதிராக தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று கருணாநிதி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக தி.மு.க.தலைவர் கருணா நிதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்ப தாவது,

ஈழத்தமிழர் இன்னல் தீரவும் ஐக்கிய நாடு கள் அவையின் மனித உரிமை ஆணை யத்தில் அமெரிக்கா கொண்டு வரும் தீர்மான த்தை உரிய திருத்தங்களோடு இந்தியா ஆத ரிக்க வேண்டுமென்று கோரியும் பொது வேலை நிறுத்தம் நடத்துவதென முடிவெடுத்து அறிவிக் கப்பட்டது.பல இடையூறுகள் எதிர்ப்புக்களையெல் லாம் மீறி தமிழ் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் தமிழின உணர்வோடு பொங்கியெழுந்து இந்தப் பொது வேலை நிறுத்தத்தை மிகப் பெரிய வெற் றியாக ஆக்கித்தந்திருக்கிறார்கள்.

தொழிலாளர்கள் போதிய அளவிற்குப் பணிக் குவராத நிலையிலே, தமிழக அரசு குறைந்த பட்ச அலுவலர்களைக் கொண்டு பேருந்துகளை போக்குவரத்தில் ஈடுபடுத்த முயற்சி எடுத்த போது கழகத் தோழர்கள் மறியல் செய்து எங்கள் மாவட் டத்தில் இத்தனை பேர் கைது, எங்கள் நகரத்திலே இவ்வளவு பேர் கைது என்று தொடர்ந்து கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கைகளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

தமிழகம் முழுவதும் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டிருக் கிறார்கள். இந்தப் பொது வேலை நிறுத்தம் காரண மாக ஒரு சிலருக்கு சிற்சில சங்கடங் கள் ஏற்பட்டிருக்கலாம். அவர்கள் எல்லாம் தமிழினத்திற்காக இந்தச் சங்கடங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டுகிறேன். ஒட்டு மொத்த ஈழத் தமிழர்களுக்காக நாம் நடத்திய இந்தப் பொது வேலை நிறுத்தத்தால் மிகப் பெரிய வெற்றி கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தப் பெரிய வெற்றிகரமான போராட் டத்திற்குப் பின்னராவது மத்திய அரசு இந்தப் பிரச்சினையில் உரிய அக்கறை செலுத்தி தெளிவான முடிவினை மேற்கொள்ள முன் வரவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன் என கருணாநிதி தனது அறிக் கையில் கூறியுள்ளார். (அ-2)

சந்தேகத்தின் பேரில் எட்டுப்பேர் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் கடந்த வாரத்தில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் எட்டுபேர் பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

கஞ்சா வைத்திருந்தவர்கள் என குற்றம் சாட்டப்பட்ட இருவரும் மரக்கடத்தலுடன் தொடர்புடைய ஒருவரும் நீதிமன்ற பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட நால்வரும் பெரிய எவிலான குற்றச்சாட்டுடன் தொடர்புடைய ஒருவரும் கைது செய்யப்பட்டு நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதேவேளை வவுனியா நகரப்பகுதியில் 8 கிலோ கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-2-250)

ஊடக சுதந்திரம் மதிக்கப்படவேண்டும்

சுபியான் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

வலம்புரி நாளிதழின் செய்தியாளர் உத யராசா சாளின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் செய்தி ஊடகங்களின் ஜனநாயக உரிமை க்கு விழுந்த அடியாகவே கொள்ள வேண் டியுள்ளது. இத்தாக்குதலை வன்மையான கண்டிக் கின்றேன். இவ்வாறு யாழ். மாநக ரசபை உறுப்பினர் எஸ்.சுபியான் தெரிவித் துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட் டுள்ள கண்டன அறிக்கையில்,

செய்தி ஊடகங்களின் சுதந்திரம் மதிக் கப்ப டுதல் வேண்டும். அவர்கள் எவ்வித பயமும் அச்சமும் இன்றி தங்கள் தொழிலில் ஈடுப அனுமதிக்கப்படல் வேண்டும். அவர்க ளுக்கு எமது மண்ணில் தொடர்ந்து அச்சுறு த்தல் இருக்கின்றது என்பதைத்தான் தொட ர்ச்சி யாக செய்தியாளர்கள் செய்தி ஊடக ங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு நடை பெற்று வரும் தாக்குதல் ஒழிப்பு சம் வங்கள் எடுத்துக்காட்டுகின்றது.

இதற்கு யார் பொறுப்பு? தற்போது சிவில் நிர்வாகம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்றும் மக்கள் பாதுகாப்பான, அமை தியான வாழ்வை மேற்கொள்கின்றனர் என்று கூறுப வர்கள் இத்தாக்குதலின் நோக்கம், பின்ன ணியாளர்கள் யார் என்பதை கண்டறிய வேண் டும். அவர்கள் யாராக இருந்தாலும் அவர் களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறில்லையாயின் வீண் பழிகளை தேவையற்றவர்கள் சுமக்க வேண் டிவரும்.

ஜனநாயக உரிமைகளைப் பாதுகாப்பது இந்நாட்டில் வாழும் அனைத்து ஜனநாயக வாதிகளின் கடமையாகும் என்றுள்ளது. (அ-2)

வெளிநாட்டு கடிதப் போக்குவரத்து தனியார்மயம்-ஜே.வி.பி கண்டனம்

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் வெளிநாட்டு கடிதப்போக்குவரத்து பிரிவை தனியார்மயப்படுத்தியமையை ஜே.வி.பி கண்டித்துள்ளது.

இதனை உடனடியாக இரத்து செய்யா விட்டால் கடுமையான தொழிற்சங்க நடவடி க்கை எடுக்கப்படும் என்று அஞ்சல் சேவை கள் சங்கத்தின் தலைவர் ஜெயந்த விஜய சிங்க எச்சரித்துள்ளார்.

கடந்த ஜனவரி முதலாம் திகதியுடன் அஞ் சல் திணைக்களத்தின் வெளிநாட்டு கடிதப் போக்குவரத்து பிரிவு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது.

இதனால் கடிதம் மற்றும் பொதிகளின் செயற்பாடுகள் தாமதித்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் இது குறித்த ஒப்பந்தத்தை உடன் இரத்து செய்யுமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)

மனிதவுரிமை விவகாரங்களில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றம்

ஐரோப்பிய ஒன்றியம்

இலங்கை மனிதவுரிமை விவகாரங்களில் வரையறுக்கப்பட்ட முன்னேற்றமே ஏற்பட் டுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித் துள்ளது.

இல்லங்கை மனிதவுரிமை நிலைமைகள் குறித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவை தொடர்ந்தும் கண்காணிக்க வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான அயர்லா ந்து பிரதிநிதி கிராஸ்ட்கோர் தெரிவித்துள்ளார்.

மனிதவுரிமை குற்றச்செயல்களுக்கு தண் டனை விதித்தல் மற்றும் நல்லிணக்கம் போன்ற விடயங்களில் கவனம் செலுத்தப் பட வேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பதவியை அயர்லாந்து வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

குற்றச்செயல்களுக்கு தண்டனை விதிக் கப்பட வேண்டும் என்பதே ஐரோப்பிய ஒன் றியத்தின் நிலைப்பாடு என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-2)

அமெரிக்காவை திட்டித் தீர்ப்பதில் பயனேதுமில்லை- திஸ்ஸ எம்.பி

அமெரிக்காவை திட்டித் தீர்ப்பதில் எவ்வித பயனும் கிடையாது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கைப் பரிந்துரைகள் உரிய முறையில் அமுல்படுத் தப்பட்டிருந்தால் ஜெனீவாவில் இலங்கை இப்படியானதொரு நெருக்கடிகளை எதிர் நோக்கியிருக்காது என ஐக்கிய தேசியக் கட்சி யின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாய க்க தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளை அமுல்படுத்துவதாக ஜனா திபதி இந்திய பிரதமரிடம் இரண்டு தடவைகள் எழுத்து மூலம் உறுதியளித்திருந்தார்.

பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும் என வெளிவிவகார அமைச்சர் ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயலாளர் நாயகம் பான்கீ மூனிடம் உறுதியளித்திருந்தார்.

அமெரிக்காவை திட்டி கொண்டிருப்ப தனை விடவும் உரிய முறையில் பரிந்து ரைகளை அமுல்படுத்தியிருந்தால் அபாய நிலையை எதிர்நோக்கியிருக்க வேண்டியிருக் காது.

கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தாது அரசாங்கம் மக்களை நெரு க்கடிக்கடிக்குள் ஆழ்த்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

ஆளுநர் பதவியே ரணிலுக்கு உகந்தது

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க இந்நாட்டின் தலைவராக பதவி வகிக் கக்கூடிய சாத்தியம் கிடையாது என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கிளிநொ ச்சியில் ஆளுநராக இருக்க முடியுமே தவிர நாட்டுக்கு தலைவனாக உருவாக முடியாது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்க வேண் டிய ஆறு இலட்சம் வாக்குகளை ஜாதிக ஹெல உறுமய தட்டிப்பறித்துக் கொண்டது. ரணில் விக்கிரமசிங்க பௌத்த விரோத சக்திகளை தோளில் சுமந்து திரிகின்றார். இதனால் எதிர் காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சிங்கள பௌத்த வாக்காளர் எண்ணிக்கை மேலும் வீழ்ச்சியடையும் என்றார். (அ-2)



வேலணை பிரதேச செயலகத்தில் மகளிர் அபிவிருத்தி நிலை தொடர்பான கண்காட்சி அண்மையில் வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வேலணை பிரதேச செயலாளர் திருமதி மஞ்சுளா சதிசன் மற்றும் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி என்.ஏ.ஜெயராயல் ஆகியோர் இணைந்து தாடவெட்டி கண்காட்சியை திறந்துவைப்பதையும் விருந்தினர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும்அருகில்கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் என். செல்வச்சந்திரன்நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள் :- என்.குமார்)

கூட்டணி கட்சிகளின் கருத்தைக்கேட்டு மத்திய அரசு முடிவு செய்ய வேண்டும்

கி.வீரமணி வலியுறுத்தல்

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் கூட்டணி கட்சிகளின் கருத்தைக் கேட்டு மத்திய அரசு முடிவு செய்ய வேண்டும் என திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இந்திய நாடாளுமன்றத்தின் மக்கள் அவையில் தி.மு.க. கொடுத்திருந்த தீர்மானத்தினையொட்டி நடைபெற்ற விவாதத்தில் காங்கிரசை தவிர ஏனைய அத்தனை கட்சிகளும் இந்திய அரசின் நிலைப்பாடு உறுதியாகவும் உண்மையாகவும் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தின.

இந்த சுவரெழுத்தை பாடமாகக் கற்று கொண்டிருக்க வேண்டாமா ஆளும் காங்கிரஸ்? கூட்டணி தர்மமா குமா? இன்னும் கேட்டால் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் கொள்கையாக ஆட்சியின் வெளியுறவுக் கொள்கையோ உள்நாட்டு திட்டங்களோ அமைய வேண்டுமே தவிர பெரிய கட்சியாகிய காங்கிரஸ் கட்சியின் வெளியுறவு கொள்கையாகவே இருக்கலாமா? இது கூட்டணி தர்மமாகுமா?

கூட்டணி அரசு இருப்பதற்கு முக்கிய ஆதரவு கட்சியாகிய தி.மு.கவின் கருத்தை அறிந்து கூட்டணிக் கட்சிகளை அதன் தலைவர்களை அழைத்து இலங்கை பிரச்சினை, ஈழத்தமிழர் பிரச்சினையை இந்திய அரசு முடிவு செய்ய வேண்டும்.

டெசோவின் தலைவர் கலைஞர் மத்திய அரசுக்கு உருக்கமாக விடுத்துள்ள அறிக்கையில் மற்றொரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடக் கூடாது என்ற வெளிநாட்டு கொள்கையை கடைப்பிடித்திருந்தால் பண்டித நேரு தென்னாபிரிக்காவின் நிறவெறிப் பிரச்சினையில் தலையிட்டிருக்க முடியுமா?

வங்காளதேசத்தில் விடுதலை வீரர் முஜிபூர் ரகுமானுக்கு அன்னை இந்திரா காந்தி உதவிக்கரம் நீட்டி விடுதலைக்கு உறுதுணை புரிந்திருக்க முடியுமா? என்ற கேள்விகளையெல்லாம் வரலாற்றை உன்னிப்பாகக் கவனித்து வரும் உலகத் தமிழர்கள் கேட்க மாட்டார்களா? என்று கூறியுள்ளார்.

எனவே, மத்திய அரசு தனது இலங்கை ஆதரவுப்போக்கை மாற்றிக் கொள்ளவே இன்று பொது வேலை நிறுத்தம் முழு அடைப்பு என்ற அறவழி, அன்பு வழிப்போராட்டம் அரசியல் பார்வையின்றி மனித நேயத்தோடு இதற்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (அ-2)

நவசக்தி முன்பள்ளி விளையாட்டு விழா

கைதடி நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று வியாழக் கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் முன்பள்ளி அபிவிருத்திச் சங்க தலைவி திருமதி. ம.அன்பழகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென் மராட்சி கல்வி வலயத்தின் முன்பள்ளிக் கல் விப் பணிப்பாளர் சு. பாக்கியராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழக தலைவர் ப. செல் லத்துரை, கைதடி எருதிடல் அ.த.க பாடசாலை அதிபர் ந.ஜெயரூபன், கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன், தென்மராட்சி சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் திருமதி.வ. சத்தியேஸ்வரன், தென்மராட்சி ஆரம்பப்பிள்ளை அபிவிருத்தி உத்தியோகத்தர் தே.வினோதன், சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுற வுச் சங்க தலைவர் கி. பூபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-2)

வவு.இல் சீமெந்து உற்பத்தி பொருட்களுக்கு கிராக்கி

வவுனியா மாவட்டத்தில் சுய தொழில் முயற்சியாளர்களாக உருவெடுத்துள்ள பலரும் சீமெந்து உற்பத்தி பொருட்களை தயாரிப்பதில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

மீள்குடியேற்றம் மற்றும் வீட்டுத்திட்டம் என்பவற்றோடு பல்வேறு அபிவிருத்திகளையும் கண்டு வரும் வவுனியா மாவட்டத்தில் சீமெந்து உற்பத்தி பொருட்களுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

கட்டடத்தொழிலாளர்கள் துரித கதியில் கட்டடங்களை அமைப்பதற்கென சீமெந்து உற்பத்தியாளர்களிடமே பொருட்களை கொள்வனவு செய்து வருவதனால் அவற்றுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது.

இதேவேளை, பல்வேறு தெரிவுகளுடனான தரமான உற்பத்தி பொருட்களினை வாடிக்கையாளர்களுக்கு வழங்க முடிவதனால் மக்கள் தற்போது சீமெந்து பொருட்களுக்கான உற்பத்தி நிலையங்களை நடத்தத் தொடங்கியுள்ளனர்.

அத்துடன் சுயதொழில் முயற்சியாளர்கள் பலரும் சிறு முதலீடுகளுடன் அத்தொழிலில் ஈடுபடக்கூடியதாக உள்ளமை பலரது வாழ்வாதாரத்தையும் மேம்படச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2-250-266)

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்

சபாநாயகர் சமல் ராஜபக்ஷவிற்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது. பாராளுமன்ற நியதிகளுக்கு புறம்பாக சபாநாயகர் நடவடிக்கை எடுத்தால் நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் அவசர அவசரமாக 21 சட்டங்களை அமுல்படுத்த முற்சித்து வருகிறது. அரசாங்கத்தின் இந்த முயற்சிக்கு சபாநாயகர் ஆதரவளிக்கக் கூடாது எனவும் அவ்வாறு ஆதர வளித்தால் நம்பிக்கையில்லா தீர்மானம் சமர்ப்பிக்க நேரிடும் என வும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறித்த 21 சட்டங்களும் அவசரமாக சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளர்.

எனினும் உத்தேச சட்டங்களுக்கு உரிய முறையில் அனுமதி பெற்றுக்கொள்ளப்படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு அவசரமாக நள்ளிரவில் உத்தேச சட்டம் தொடர்பான ஆவணங்களை அனுப்பி வைக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். (அ)

ஸ்ரீ இராம கிருஷ்ணர் ஜெயந்தி விழா 17 ஆம் திகதி

யாழ்ப்பாணம் இராமகிருஷ்ண மிஷன் நலன்புரி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தி விழா எதிர்வரும்17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இல. 17 மருதனார்மடம் வீதி, உரும்பிராய் சந்தி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் உள்ள இராமகிருஷ்ணமிஷன் நலன்புரி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 8மணிக்கு நகர சங்கீர்த்தன ஊர்வலத்துடன் ஆரம்பமாகும் ஜெயந்தி விழா சிறப்பு நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார். இவ்விழாவில் **விவேகானந்தர் அறிவு ரைகள்** என்ற ஆன்மீக உரையினை கொழும்பு இராமகிருஷ்ண மிசன் தலைவர் ஸ்ரீமத் சுவாமி சர்வரூபானந்தரும் அன்பே உருவான குருதேவர் என்ற கருப்பொருளில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் சி.சிவமோகனும் கருத்துரை வழங்கவுள்ளார். (அ-5)

வள்ளுவர் மகா சபையின் பொதுக்கூட்டம்

(ஏழாலை)

அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை மத்தி முடி மன்னர் ஆலய மண்டபத்தில் மகா சபையின் தலைவர் நாகன்கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது என அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் பொதுச் செயலாளர் ஆ. சிறீதரன் தெரிவித்துள்ளார். (அ-5)

★ 1489-சைப்பிரஸ் மகாராணி கத்தரீன் கோர்னாரோ தனது இராச்சியத்தை வெனிஸ் நகருக்குக் விற்றார்.

★ 1794-எலி விட்னி பஞ்சைத் தூய்மைப் படுத்தி அதன் விதையில் இருந்து பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் என்ற இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1898-டாக்டர் வில்லியம் கப்ரியேல் றொக்வூட் இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப் பட்டார்.

★ 1939-செக்கோசிலவாக்கியாவின் பொஹேமியா மற்றும் மொராவியா மாகாணங்களை ஜேர்மனியப் படைகள் ஆக்கிரமித்தன.

★ 1951-கொரியப் போர்: இரண்டாவது முறையாக ஐ.நா. படைகள் சியோல் நகரைக் கைப்பற்றின.

★ 1978-இஸ்ரேலியப் படைகள் தெற்கு லெபனானை ஆக்கிரமித்துக் கைப்பற்றியன.

★ 1994-லினக்ஸ் கரு (kernel) 1.0.0 வெளியிடப்பட்டது.

★ 1995-ரஷ்ய விண்கப்பல் ஒன்றில் அமெரிக்கர் (நோர்மன் தகார்ட்) ஒருவர் முதன் முதலாகப் பயணித்தார்.

பிறப்புக்கள்

★ 1879-அல்பேர்ட் ஐன்ஸ்டைன், இயற்பியலாளர் (இ.1955)

★ 1965- அமீர் கான், நடிகர்

இறப்புக்கள்

★ 1883-கார்ல் மார்க்ஸ், ஜேர்மனிய மெய்யியலாளர் (பி.1818)

★ 1932-ஜோர்ஜ் ஈஸ்ற்மன், அமெரிக்க கண்டுபிடிப்பாளர் (பி.1854)

★ 1995- வில்லியம் பவுலர், இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி.1911)

அல்பேர்ட் ஐன்ஸ்டைன்



ஐன்ஸ்டைன் ஜேர்மனியில் வுர்ட்டெம்பர்க் இலுள்ள உல்ம் என்னுமிடத்தில் 1879 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தையார், ஹேர்மன் ஐன்ஸ்டைன். பிற்காலத்தில் ஒரு மின்வேதியியல் சார்ந்த தொழில் நிலையமொன்றை நடத்தி வந்தார். தாயார் பெயர் போலின் கோச்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன் குறிப்பிடத்தக்க பயன்பாட்டுக் கணித திறமைகள் கொண்ட ஒரு கோட்பாட்டு இயற்பியல் அறிஞர் ஆவார். இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான அறிவியலாளராகப் பொதுவாக கருத்தப்படுகிறார். இவர் புகழ் பெற்ற சார்புக் கோட்பாட்டை முன்வைத்ததுடன் இயக்கவியல், புள்ளியியற் எந்திரவியல் மற்றும் அண்டவியல் ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புக்களைச் செய்துள்ளார். ஒளிமின் விளைவைக் கண்டுபிடித்து விளக்கியமைக்காகவும் கோட்பாட்டு இயற்பியலில் அவர் செய்த சேவைக்காகவும் 1921 ஆம் ஆண்டு இவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

மேலும் புரௌனியன் இயக்கம், திணிவிற்கும் சக்திக்கும் தொடர்பு என பல கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டார்.

இதில் திணிவிற்கும் சக்திக்குமுள்ள தொடர்பு ($E=mc^2$) சமன்பாடு மிகச்சிறந்த நிறுவலாக அமைந்தது. இதுவரை காலமும் ஐன்ஸ்டைன் போன்ற அறிவியலாளர் தோன்றவில்லை என கூறப்படுகிறது. இவர் 1955 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி உயிர் நீத்தார்.

தற்காலத்தில் பொதுப் பயன்பாட்டில் ஐன்ஸ்டைன் என்ற சொல் அதிக புத்திக்கூர்மையுள்ள ஒருவரைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. 1999 இல் புதிய ஆயிரவாண்டைக்குறித்து வெளியிட்டப்பட்ட டைம் (இதழ்) இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர் என்ற பெயரைக் ஐன்ஸ்டைனுக்கு வழங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது அப்பா எங்கே?

பசுமரத்தில் பதியப்படும் ஆணிகள்

அரசே எங்கள் மகள் காணாமல் போனது எவ்வாறு... பதில் கூறு அரசே... பதில் கூறு... எங்கள் பிள்ளைகளை மீண்டும் எங்களிடம் தா... தடுத்து வைத்திருப்போரின் பட்டியலை வெளியிடு. எனது அப்பா எங்கே? அவரை பார்ப்பதற்கு அனுமதி தா... அனுமதி தா... எங்கள் பிள்ளைகளை எங்களிடம் தந்து விடு... இருக்கும் இடத்தைச் சொல்லிவிடு... எங்கள் வாழ்க்கை இன்னும் தெருவில் தானா?

இனியாவது எங்களை நிம்மதியாக வாழ விடு... இந்தப் புலம்பல்கள் எல்லாம் எதற்காக வென்று நினைக்கிறீர்கள்... வேறொன்றும் இல்லை. காணாமல்போன உறவுகளின் உள்ளக் குமுறல்களே இவை.

ஆம், இன்னும் முற்றுப்புள்ளி பெறாத தொடர்கதையாக நீண்டுகொண்டிருக்கின்றன இந்தக் கடத்தல், காணாமல்போதல், கைது செய்தல் போன்ற மர்ம நிகழ்வுகள்.

இவற்றின் பின்னணியில் யார், யார் இவற்றை செய்கின்றார்கள்? எதற்காகச் செய்கின்றார்கள்? தமிழர்களை மாத்திரம் குறி வைப்பது ஏன்? காணாமல் போனவர்கள் உயிருடன் இருக்கின்றனரா? இல்லையா? கைது செய்யப்பட்டு காணாமல்போனது எவ்வாறு? கைது செய்யப்பட்டு உயிருடன் இருந்தால் ஏன் அவர்களை விடுதலை செய்ய முடியாது? ஏன் அவர்களின் விபரங்களை வெளியிட முடியாது என்ற கேள்விகள் இன்னமும் எம்முன் கேள்விக்குறிகளாகத்தான் இருக்கின்றன.

எத்தனையோ ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள், உண்ணாவிரதங்கள் இருந்தும் இந்த கேள்விகளுக்கு இன்னமும் பதில் கிடைக்காமல் இருப்பது செவிடன் காதில் உதிய சங்குதான். இறந்தபின் தான் சுடுகாடு தெரியும் என்பார்கள். அந்த வகையில் தமது உறவை இழந்தவர்களுக்குத்தான் அதன் வலியும் வேதனையும் புரியும்.

இதை எப்படி எடுத்துச் சொன்னாலும் மனிதாபிமானம் இல்லாதவர்கள் புரிந்து கொள்ளவே மாட்டார்கள் என்பதே நிதர்சனம். கால காலமாக தலைநிமிர்ந்து நடந்த தமிழர்கள் இன்று காணாமல் போன தமது உறவுகளுக்காக நடுவீதிக்கு இறங்கி யார் யாரோ கால்களில் மண்டியிட்டு புலம்பி அழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

ஜனநாயகம், மனித உரிமை, சுதந்திரம் என அடித்தொண்டை கிழிய கத்தும் அரசியல் வாதிகள் இதனைக் கண்டும் காணாது இருப்பது ஏன்? அல்லது ஏதோ ஒரு பதிலைக் கூறி விட்டு தம் வேலையை பார்த்துக் கொண்டு இருப்பது ஏன்? ஆனால், எமது உறவு எப்போது கிடைக்கும் என்ற ஏக்கம் ஒன்றே காணாமல் போன உறவுகளுக்கு மீதமாகவுள்ளது.

இந்நிலையில் 2012 இல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கையின் படி 12000 இற்கு மேற்பட்டோர் காணாமல் போயுள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. 2012 இல் கிளிநொச்சி மாவட்டத்தில் மாத்திரம் பெண்களை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் 5803 இதில் விதவைகள் 3713 என கணக்கிடப்பட்டுள்ளது.

எந்தவொரு நாட்டிலும் அதன் எல்லைக்குள் சுதந்திரமாக பிரயாணம் செய்வதற்கும் வதிவதற்கும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என அனைத்துலக மனித உரிமை பிரகடனத்தின் உறுப்புரை 13 இல் கூறப்பட்டுள்ளது. ஆனால், நாட்டில் நடந்தேறும் கடத்தல், காணாமல் போதல், கைது என்பது மேற்கூறப்பட்ட உரிமைக்கு ஏட்டுச் சுரைக்காய் போன்றே உள்ளது.

சோதனைச் சாவடிகள், பொலிஸார் மற்றும் படையினரின் வீதி ரோந்து நடவடிக்கைகள், சிவிலுடை தரித்த பாதுகாப்புப் பிரிவின்ரின் கண்காணிப்பு இவ்வாறான அதியுயர் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுள்ள போதும் எவ்வாறு கடத்தப்படுகின்றனர் அல்லது காணாமல் போகின்றனர் என்ற கேள்வி எழுகின்றது.

மனிதாபிமானம் பற்றி மனித உரிமைகள் பற்றி எத்தனை அமைப்புகள் செயற்பட்டாலும் இப்பிரச்சினைக்கான தீர்வினை எட்ட முடியாதுள்ளது. இதற்குக் காரணம் அன்றைக்கு மட்டும் கதறி அழுது விட்டு அதன் பின்னர் ஓரிரு நாட்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளும் நாம் பின்னர் அவை பற்றி சிந்திப்பதும் உரிய தரப்பினர் அதற்கு நடவடிக்கை எடுப்பதும் இல்லை. கடந்த முப்பது வருடமாக இடம்பெற்ற யுத்தம் முடிவடைந்திருக்கின்ற போதிலும் ஏன் இந்த பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாமல் உள்ளது.

குழந்தைகள், ஆண்கள், பெண்கள் என்று பலர் பல காரணங்களுக்காக கடத்தப்படுகின்றனர். காணாமல் போகின்றனர். யுத்த காரணங்களுக்காகவும் அரசியல் நோக்கம் மற்றும் பாலியல் நோக்கத்திற்காகவும் பழிவாங்கல் நோக்கத்திற்காகவும் கப்பம் பெறும் நோக்கத்திற்காகவும் கடத்தப்பட்டனர். தொடர்ந்து கடத்தப்பட்டுக் கொண்டும் இருக்கின்றனர். மேலும் போரின்போது இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்களும் காணாமல் போயும் உள்ளனர்.

இவ்வாறு கடத்தப்பட்டவர்களில் சிலரின் தகவல்கள் பற்றிய தரவுகள் இன்னும் கிடைக்கவில்லை. மேலும் சிலர் அடையாளம் காண முடியாத அளவிற்கு சடலமாக பல இடங்களில் இருந்து மீட்கப்பட்டனர். மேலும் சிலர் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் காணாமல் போன அல்லது கடத்தப்பட்ட கைது செய்யப்பட்ட உறவுகளை மீளவும் தமக்கு ஒப்படைக்க அதன் உறவுகள் ஜனநாயக வழியில் போராட முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் வடக்கு- கிழக்கு பகுதிகளில் கைது செய்யப்பட்டு காணாமல் போன உறவுகளை மீட்டுத்தருமாறு கோரி கொழும்பில் கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ள வடக்குத்தியிலிருந்து புறப்பட்ட பெருமளவிலான பொதுமக்களும் காணாமல் போனோரின் உறவினர்களும் வவுனியாவில் திட்டமிட்டு பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டனர்.

வவுனியாவிலிருந்து பயணிக்கும் முதியோர்கள், பெற்றோர் மீது வழியில் தாக்குதல் நடத்தப்படலாம் என தமக்கு தகவல் கிடைத்திருப்பதாகவும் இதனாலேயே கொழும்புக்கு செல்வதை அனுமதிக்கவில்லை என தெரிவித்த பொலிஸார் அவர்களுக்கு பாதுகாப்பு இல்லாத காரணத்தினால்தான் இரவில் பயணம் செய்ய அவர்களை அனுமதிக்க முடியாது என கூறி கொட்டும் மழையில் வீதியிலேயே மறித்து வைத்தனர்.

கொழும்பு- விகாரமாதேவி பூங்காவில் காணாமல் போனோரை மீட்டுத்தருமாறு கோரும் பாரிய ஆர்ப்பாட்ட நிகழ்வு நடத்தப்பட்டு பொது நூலகத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடத்துவதற்கும் கூட்டத்தின் முடிவில் ஐ.நா. சபைக்கு மகஜர் ஒன்றினை கையளிப்பதற்குமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

இந்நிலையிலேயே ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றுவதற்காக வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி 12 பஸ் வண்டிகளில் புறப்பட இருந்த பொதுமக்களை தொடர்ந்து பயணிக்க அனுமதிக்க முடியாது என தெரிவித்த பொலிஸார் டிரக் வண்டிகளை வீதியின் குறிக்கே நிறுத்தி தடுத்து வைத்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டத்தில் பங்கு பெற முடியாத நிலை தோன்றியதால் மக்கள் வவுனியாவில் நடுவீதியில் மெழுகுவர்த்திகளை ஏந்திப் போராட்டம் நடத்தினர். சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் அத்தியாயம் 9 இல் எவர் ஒருவரையும் நியாயமற்ற விதத்தில் கைது செய்யவோ தடுத்த வைக்கவோ நாடு கடத்தவோ முடியாது.

பொது மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அத்தியாயம் 9(1): அனைவரும் தனி நபர் சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு உரிமையை உடையவராகின்றார். எவரும் தன்னிச்சையான கைது மற்றும் தடுத்துவைத்தலுக்கு உட்பட முடியாது. சட்டத்தில் கூறப்பட்டவாறாக அல்லாத எவருடைய தனிநபர் சுதந்திரமும் பறிக்கப்படலாகாது.

அத்தியாயம்(2) அனைவரும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தைக் கொண்டிருக்கின்றனர். குறுக்கீடற்ற முறையில் நாட்டின் எல்லைகளைக் கடந்தும் தமக்குத் தேவையான தகவல்களை தேடுதல், பெறுதல் மற்றும் தாம் விரும்பும் ஊடகத்தினைப் பயன்படுத்தி வாய்மொழி மூலமாகவோ எழுத்து மூலமாகவோ கலை வடிவங்களினூடாகவோ தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், வெளியிடல் என்பவற்றிற்கான உரிமையும் இதிலடங்குகின்றன.

இவ்வாற சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் காணப்படும் உரிமைகளில் இலங்கையும் கைச்சாத்திட்டுள்ளது. ஆனால், நடைமுறையில் மாத்திரம் ஏன் இதனை செயற்படுத்த முடியவில்லை என்பது பொது மக்களின் ஆதங்கமாகும்.

அதாவது கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் குறித்த வடக்கிலிருந்து வந்த காணாமல்போனோரின் உறவுகளை கலந்து கொள்ள விடாது தடுப்பதன் மூலம் ஆர்ப்பாட்டத்தின்முக்கியத்துவத்தை சீர்குலைத்து சர்வதேச கவனம் பெறுவதை தடுத்துவிடுவதற்காகவே மேற்கொள்ளப்பட்ட சதியோ என எண்ணத்தோன்றுகின்றது.

ஜனநாயக நாட்டில் ஒரு பிரஜை தனது கருத்து சுதந்திரத்தைக் கூட பயன்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை வேதனையான விடயம். ஆர்ப்பாட்டத்தின் மூலமோ கருத்து வடிவின் மூலமோ தனது கருத்தை வெளியிட பிரஜைக்கு உரிமை உண்டு. ஆனால், ஜனநாயக ரீதியில் கருத்து சுதந்திரத்தை வெளிப்படுத்த வந்த உறவுகளை நியாயமற்ற விதத்தில் தடுத்து வைத்தமை சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தின் அத்தியாயம் 9 இல் கூறப்பட்ட உரிமையை முற்றாக மீறியுள்ளது.

எமது நாட்டில் யாரும் இரண்டாம் பிரஜை அல்ல. யாவரும் சமமானவர் எனக்கூறும் இந்த அரசில் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் இதற்கெல்லாம் அப்பால் பிரஜைகள் ஒரு அடிமைக்கு ஒப்பாக நடாத்தப்பட்டுள்ளனர்.

இந்த செயற்பாட்டுக்கு அமெரிக்கா தமது அதிருப்தியையும் வெளியிட்டிருந்தது. அதாவது காணாமல் போன தனது உறவுகளை தேடித்தருமாறு கோரும் போராட்டத்துக்காகவே அவர்கள் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு சென்றனர்.

எனினும் அவர்களை தடுத்து நிறுத்தியமை நியாயமான செயலல்ல. அத்துடன் குறித்த பொதுமக்களின் சுதந்திரமான நடமாட்டத்துக்கு மதிப்பளித்து அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று அமெரிக்கா குறிப்பிட்டிருந்தது.

இந்நிலையில் காணாமல்போனோர் தொடர்பாக பெயர் வெளியிடப்படாத பட்டியலினை வெளியிடப்போவதாக சர்வதேசத்திற்கு அரசாங்கம் பல முறை கூறியுள்ளது. ஆனால், இன்றுவரை அரசாங்கம் அவ்வாறு எந்தவொரு பட்டியலையும் வெளியிடவில்லை.

இது தொடர்பில் அரசாங்கம் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமல் அசமந்தமாக இருப்பது உறவுகளை இழந்த உறவுகளை மேலும் துன்பத்துக்கு உள்ளாக்குவதோடு விரக்தி நிலைக்கு இட்டுச் செல்கின்றது.

யார்தான் எதனையும் சொன்னாலும் இந்நாட்டின் அரசு ஒரு கணம் சிந்தித்தால் இந்நிலையே மாறிவிடும். கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார். சரணடைந்தவர்கள் விடுவிக்கப்படுவர். காணாமல் போகச் செய்தல் இடம்பெறாது. ஆனால், இதெல்லாம் நிறைவேறுமா என்பது சந்தேகமே.

அதுவரை, எங்களிடமிருந்து பறித்த எங்கள் பிள்ளைகளை எங்களிடம் தாருங்கள். ஏது மறியா எங்கள் பாலகர்கள் எங்கே? தவறு இருந்தால் நிரூபியுங்கள். இல்லையேல் விடுதலை செய்யுங்கள் என கண்ணீரோடு வானத்தை நோக்கிய கதறல்கள் மாத்திரமே தொடர்ந்து கொண்டிருக்கும்.

நன்றி: இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலையிலிருந்து திரும்பிய சிறுமி ரமா வீட்டுக்குள் நுழைந்ததும் புத்தகங்களை சோபா மீது விட்டெறிந்தவள் கிடுகிடுவென சமையல் அறைக்குள் நுழைந்து அலுமாரியில் இருந்த ஜாம் போத்தலை எடுக்க முயன்ற போது சப்பென்று அம்மா பின்னால் வந்து அவள் கைகளைப் பிடித்து கொண்டாள். என்ன இது திருட்டுத்தனம் ரமா? சாப்பிட வா! என்று திட்டினாள்.

சாதம், சாம்பார், கூட்டு, பொரியல் என்று எல்லாம் தட்டில் வைத்த பின்பு ஒரு கப்பில் ரமாவுக்கு மிகவும் பிடித்த மாம்பழ ஜாமையும் வைத்தாள். ஏனைய பொருட்களை கிடுகிடுவென முதலில் சாப்பிட்ட பின் ஜாமை விரல்களில் தடவி பின்பு விரலைச் சூப்பிக்கொண்டே ஜாமை அணுஅணுவாக ரசித்துத் தின்றாள். அம்மா தூங்கும்போது ஸ்டூலைப் போட்டுக் கொண்டு அல்லது தன் பிளாஸ்டிக் சைக்கிள்மீது ஏறியோ, அவள் ஜாமைத் திருடித்தின்பாள்.

சில மாதங்களாகவே ரமாவின் அம்மாவுக்கு உடம்பு சரியாக இல்லை. பகல் நேரங்களில்கூட கட்டிலில் படுத்துக் கொண்டேயிருப்பாள்.

ரமா தன் ரூமில் உட்கார்ந்து ஏதாவது விளையாடிக் கொண்டோ கதைப்புத்தகம் படித்துக் கொண்டோ இருப்பாள். அம்மா நடுவில் எதற்காகவாவது ரமாவைக் கூப்பிட்டுக் கொண்டேயிருப்பாள். ஆனால் ரமா தன் இடத்தை விட்டு அசையமாட்டாள்.

குடிக்கத் தண்ணீர் தா ரமா! என்று அம்மா கெஞ்சினாலும் ரமா நகரமாட்டாள். விக்ஸ் எடுத்துவா! தலை வலிக்கிறது என்று அம்மா அழைத்தாலும் அசையமாட்டாள். கடைசியில் அம்மா தானே எழுந்து வந்து



தன் வேலைகளைச் செய்து கொள்வாள்.

ஒருநாள் பாடசாலையிலிருந்து திரும்புகையில், கால் தடுக்கிக் கீழே விழுந்த ரமா முட்டியில் சிறாய்த்துக் கொண்டாள். காயத்திலிருந்து இரத்தம் குபுகுபுவென இரத்தம் வர ஓவென அலறிக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்து ஸ்கூல் பையை வீசிவிட்டு அம்மா அம்மா! என்று கூச்சலிட்டாள். ஆனால் அம்மாவுக்கு பதில் அப்பாதான் வீட்டிலிருந்தார். ரமாவுக்கு துணுக்கென்று இருந்தது.

தன் காயத்தையும் மறந்து அப்பா! இந்தநேரத்தில் நீ எப்படி வீட்டில் இருக்கிறாய்? அம்மாவுக்கு என்ன ஆயிற்று? அம்மா எங்கே போனாள்? என்றாள். அவ்வாறு கேட்கும்

அம்புலிமாமா கதைகள்

அம்மா! நீ எப்படி வருவாய்

போதே அவள் வயிற்றில் இனந்தெரியாத பயம், கலக்கம் உண்டாக்க கைகள் நடுங்கின.

அம்மாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறேன் என்றவர் அடடா! அடிபட்டிருக்கிறதா? வா, வா, மருந்து போடுகிறேன் என்று அவளுடைய காயத்தைப் பஞ்சினால் துடைக்க ஆரம்பித்தார்.

அம்மா ஆஸ்பத்திரியிலா? என்ற ரமாவின் உடல் முழுவதும் நடுக்கம் பரவியது. அப்பா அப்பா அம்மா எப்போ வருவாள்? என்று ரமா கேட்கும் போதே அழுதுவிட்டாள்.

பத்து நாள் பிடிக்கும் என்று சொல்லிவிட்டு அன்று அப்பாவே சாதம் போட்டார். ரமாவுக்கு மிகவும் பிடித்த மாம்பழ ஜாமும் ஒரு கப்பில் வைத்தார்.

ரமாவுக்கு சாப்பாடே பிடிக்கவில்லை. மிகவும் ரசிக்கும் மாம்பழ ஜாம்கூட பிடிக்கவில்லை. அவள் சிந்தனை முழுவதும் நிரம்பியிருந்தது அம்மா, அம்மா, அம்மாதான்! அன்று தூக்கமே வரவில்லை. கண்மூடினால் அம்மா தெரிந்தாள். திறந்தாலும் அம்மாதான் தெரிந்தாள். ஐயோ அம்மா! உனக்கு உடம்பு சரியில்லாமல் சிறிது நாட்களாக படுத்துக் கொண்டே இருந்தாயே! நீ கூப்பிட்ட போதெல்லாம் நான் வரவே யில்லையே! அம்மா, நீ எப்



போது வருவாய்? என்று எண்ணிக்கொண்டே தலையணையை அணைத்துக் கொண்டு வெகு நேரம் அழுதாள்.

மறுநாள் அம்மாவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்கு அவளை அழைத்துச் சென்றார் அப்பா!

ரமாவைப் பார்த்ததும் அம்மா அவளை இறுக்க அணைத்துக் கொண்டு முத்தமாரி பொழிந்தாள்.

அவளை ஆசையோடு கொஞ்சினாள். குழந்தை ஜாம் எவ்வளவு வேண்டும். ஆனாலும் எடுத்துச் சாப்பிடு! என்றாள். எனக்கு ஜாம் வேண்டாம்! நீ தான் வேண்டும் என்று வாய் திறந்து சொல்ல நினைத்தாள் ரமா. ஆனால் முடியவில்லை.

அன்றிரவு ரமாவுக்கு அம்மாவின் நினைவு மிக அதிகமாக வர துக்கம் தாங்க முடியாமல் பெரிதாக விம்மி விம்மியழ அப்பா எழுந்து அவளைச் சமாதானப்படுத்தினார்.

அம்மா நீ எப்போ வருவாய்! என்ற வாக்கியத்தையே ஒருநாளைக்கு ஆயிரம் முறை ஜெபிக்க ஆரம்பித்தாள் ரமா!

இரண்டு நாட்கள் சென்றன. அன்று மாலை கதவை யாரோ தட்டும் ஒலி கேட்க ரமா கதவைத் திறந்தாள். ஹா! அம்மா வந்து விட்டாள்.! ஆஸ்பத்திரியில் இருந்து அம்மா வந்து விட்டாள். அம்மா என்று அலறிக் கொண்டே அம்மாவைக் கட்டித் தழுவிய ரமா வெகு நேரம் அழுதாள். பின்பு ஓடிச்சென்று அம்மா கேட்கா மலே குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்தாள். அடி என் சமத்துக்கட்டி என்று அம்மா அவளை அணைக்க சொர்க்கத்தின் வாயிலிலே நிற்பது போலிருந்தது ரமாவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர் தம் பிள்ளை கல்வி கற்க கூடாயம் விடத்தான் வேண்டுமா?

பேராசிரியர் மா.சின்னத்தம்பி

அறிமுகம்

மக்கள் தம்மைப்பற்றிய கவனம் மிக்க சுய சிந்தனையை வளர்த்துக் கொள்ள வழிகாட்டும் செயன்முறை தான் கல்வி. தன்னைச் சுற்றியுள்ள சூழல் மற்றும் சமூகம் தன் மீது எவ்வாறு தாக்கவிளைவுக்களை உருவாக்குகின்றது என்று பரிசோதித்துக்கொள்ளும்தரமான சிந்தனைப் பழக்கத்தையும் அத்தகைய விருப்பத்தையும் தருவது வலுவான கல்வி என்று கொள்ளப்படும். சூழலைப் பயன்படுத்தி தான் எவ்வாறு முன்னேற முடியும். சூழலில் எவ்வாறு தான் தலைமைத்துவத்தைப் பெற முடியும் என்று சிந்திக்க வழிகாட்டும் போது நுட்பங்களினூடான கல்வியாகி விடுகின்றது.

சமூக வளங்களையும் சமூக சூழலையும் பயன்படுத்திதான் பெற்ற கல்வியையும் அதன் வழியாகப் பெற்ற நுண்மதியையும் எவ்வாறு தனக்கு முன் தென்படுகின்ற சமூகத்துன்பங்களை அகற்றுவதற்குரிய ஆய்வுகளில் பயன்படுத்துவது என்று எண்ணும் போது உன்னதமான கல்வியாக பரிமாணம் பெறுகின்றது.

கல்வி ஒரு உன்னதமான கருத்தியலாகவும் மாறுதல்களைத் தரும் விஞ்ஞானபூர்வமான செயல்களின் ஒழுங்கு முறையாகவும் உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

ஆனால்எல்லோரும்தமதுஅறிவை தமது பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்கும் கௌரவத்துக்கும் எவ்வாறு பயன்படுத்துவதென அறிந்து கொள்வதற்கான வாயில்கள்- வாய்ப்புக்கள்- இன்னமும் முழுமையாக திறந்து விடப்படவில்லை. இவை பற்றிய சில சிந்தனைகள் இன்று கலந்துரையாடப்படுகின்றது.

எல்லோருக்கும் கல்வி தேவையா?

கல்வியின் முதல் நிலைகளுக்குள் கூட நுழைய முடியாத கோடிக் கணக்கான மக்கள் உலகம் முழுவதும் பரந்து கிடக்கின்றனர். எழுத்தறிவின்மை, கல்வியறிவின்மை, உரிய வயதில் ஆரம்பக்கல்விக்கே செல்லாத நிலைமை என்பனவே கல்வியின் முதல் நிலை தடைச் சுவர்களாகும்.

1993 இல் கூட அதிகளவு மக்கள் தொகை கொண்ட ஒன்பது நாடுகளின் உலக எழுத்தறிவற்றவர்களில் 75 வீதத்தினர் குவிந்திருந்தனர். இந்தியா, பங்காளதேசம், சீனா, பிறேசில், எகிப்து, இந்தோனேசியா, மெக்சிக்கோ, நைஜீரியா, பாகிஸ்தான் என்ற இந்த நாடுகளில்தான் பாடசாலை செல்லாத குழந்தைகளில் கணிசமான தொகையினர் இருந்தனர்.

வளர்ச்சி என்பதென்ன? முன்னேற்றத்துக்குள் வர முடியாது. பின் தங்கியிருப்போரை முன்னேற்ற பரப்புக்குள் இழுத்தெடுப்பது தானே! தேவையுடைய மையங்களில் பணியாற்றுவதுதானே அபிவிருத்திச் செயல்முறை!

செறிவாக, அதிக எண்ணிக்கையான மக்கள் படிப்பு வாசனையின்றி துன்பச் சகதிக்குள் வாழ விடக் கூடாது என்ற இலக்குடன் யுனெஸ்கோ நிறுவனம் எல்லோருக்கும் கல்வி என்ற அறிவுப் பதாகையை உலக அரங்கில் உயரத்தில் பிடித்தது.

எழுத்தறிவு இன்றியும் அறிவுக் கண்களைத் திறப்பதற்கான உதவிக் கரங்களை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்த ஒன்பது நாடுகளும் வரலாற்றில் சாமானிய நாடு களாக இருந்திருக்கவில்லை. வரலாற்றை சற்று முன்னோக்கிப் பார்த் தால் பல பெருமை மிக கோலங் களை அவை கொண்டிருந்தமை தெரி யவரும்.

✷ இந்த நாடுகள் பல தலை சிறந்த நாகரிகங்களின் தொட்டில் களாக இருந்துள்ளன. இந்து சம வெளி நாகரிகங்கள், யூப்ரற்றீஸ், ரைகிறீஸ் நதிக்கரை நாகரிங்கள், சீனத்து குவாங்கோ நாகரிகங்கள் போன்ற எல்லாமே இங்கே தான் பூத்துக்குலுங்கின.

✷ எழுத்து எழுதும் முறையை இவைதான் கண்டு பிடித்தன. வரலாற்றில் மனித வரலாற்றின் உன்னத அத்தியாயங்களையும் இந்த நாடுகள் எழுதி வைத்தன.

இப்பிரதேசங்களில் எழுத் தறிவின் மையும் அறியாமையும் வறுமையும் அவநம்பிக்கைகளும் எவ்வாறு வளர்ந்தன? வலிமை பெற்றன? இப் போதாவது விழித்துக் கொள்வோம். நம்பிக்கையும் மறுமலர்ச்சியும் இணைந்த புதிய அறிவியல் சகாப்தத்தை இந்த நாடுகள் உருவாக்க வேண்டும். இத்தகைய சிந்தனை இருபது ஆண்டுகளுக்கு முன்பே உதித் திருந்தது.

தாய்லாந்து நாட்டிலுள்ள ஜோம் தியனில் 1990 மார்ச் மாதத்தில் நடைபெற்ற உலக மகா நாட்டில் தெற்குலகு சார்ந்த வளர்முக நாடுகள் **எல்லோருக்கும் கல்வி** என்ற தலைப்பில் உலக மகா நாட்டைக் கூட்டியிருந்தன.

யுனிசெப், ஐ.நா. மேம்பாட்டுத்திட்ட நிறுவனம், உலக வங்கி, யுனெஸ்கோ போன்ற அமைப்புக்களும் எல்லோருக்கும் கல்வி என்பதை தமது முந்துரிமையாக ஏற்றுக் கொண்டிருந்தன. எல்லோரும் கற்க வேண்டியதன் அவசியமும் அவசரமும் உணரப்பட்டது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த இலட்சிய இலக்குகளை நோக்கி இந்த நாடுகள் உண்மையில் வெற்றி பெற்று விட்டனவா? இதற்கான விடையை இப்போதும் தேடுகிறோம்.

கல்வித் தரிசனம்

கல்வியின் நன்மைகளும் நெருக்கடிகளும்

தனிமனித வாழ்விலும் முழுமையான சமூக வாழ்விலும் கல்வி உன்னதமான பங்கு வகிப்பதாக ஃபிரெய்ரே (Freive 1972) தெளிவுபடுத்தியுள்ளார். எல்லோரும் நிறைவான கல்வி கற்பது பல்வேறு நற்பலன்களை ஏற்படுத்தும் என்பதை பெற்றோரும் சமூக தலைவர்களும் உரிய வாறு விளங்கிக் கொண்டதாக தெரியவில்லை.

உத்தமமான கல்வியை எல்லோருக்கும் வழங்கும் போது பின்வரும் நன்மைகள் உருவாகின்றன.

✷ பொருளாதார நடைமுறைகளிலும் அரசியல் செயற்பாடுகளிலும் ஈடுபடுதற்குரிய இயல்பூக்கமும் சுதந்திரமும் உருவாகின்றது.

✷ புதிய தொழில்நுட்பங்களை முன்னேற்றத்துக்கு உகந்தவாறு பயன்படுத்தும்திறன்கள் வளர்கின்றன.

✷ பொருளாதார, பாலியல் மற்றும் சட்டரீதியிலான சுரண்டல்களிலிருந்து பெண்கள் விடுபடும் வழிமுறைகள் உருவாகின்றன.

✷ தனிநபர்கள் தமது முன்னேற்றங்கள் எங்கெல்லாம் குவிந்து கிடக்கின்றதெனக் கண்டறிந்து அங்கு நகர்வதற்கான துணிவையும் ஆற்றலையும் கல்வி தருகின்றது.

✷ உயர்ந்த சமூக அந்தஸ்து படிப்படியாக வளர்ச்சி பெறுகின்றது. சமூக அசைவியக்கம் துரிதமடைகின்றது.

✷ சுகாதாரம் ஊட்டம் பாதுகாப்பான தாய்மை, முன்னேற்றம் தரும் தொழில் வாய்ப்புக்கள், தரமான வாழ்க்கை முறை என்பன தொடர்பான அடிப்படை உரிமைகளையும் பெண்கள் பெற்றுக் கொள்கின்றனர்.

இவற்றை உணர்ந்து ஏற்றுக் கொண்டயுனெஸ்கோ நிறுவனம் 2015 ஆம் ஆண்டளவில் எல்லோருக்கும்இலவசக் கல்வி வழங்குவதற்கான திட்டத்தைவரையலாயிற்று. இதன்படிஇளைஞர்களுக்கு தரமான வாழ்க் கையை உருவாக்கும் நலன்புரி நிலையங்களை உருவாக்குதலும் பாலினபேதங்களைக் குறைத்தலும் ஆரம்ப மற்றும் இடை நிலைக்கல்வி மட்டத்தில் நிலவும் பாரபட்சங்களைக் குறைப்பதிலும் அக்கறை காட்டப்ப டலாயிற்று.

இந்த ஒன்பது நாடுகளும் 1990 இல் தீர்மானித்த எல்லோருக்கும் கல்வி என்ற இலக்கை அடைய முடிந்ததாஎன்பது அவதானிக்கப்படவேண்டியதாகும். அடைய முடியாத இலக்குகளாகவே இன்றும் இவை பல வளர்முக நாடுகளினால் உணர்ப்படுகின்றன.

✷ 2001 இல் இந்தியாவில் 296 மில்லியன் மக்கள் எழுத்தறிவற்றவர்களாக இருந்தனர்.

✷ இந்தியாவின் கிராமங்களில் 46.6 சதவீதமான பெண்களும் நகரங்களில் 73% மான பெண்களும் எழுத்தறிவின்றி வாழ்ந்தனர். (J.P. Singh: 2005)

✷ ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 40 ஆயிரம் கோடி ரூபாய்கள் ஆரம்பக் கல்வியில் மாத்திரம் செலவிடதிட்டமிடப்பட்டிருந்தது.

இலங்கைஅரசாங்கமும்கல்விக்குரிய செலவு திட்டத்தில் 70 சதவீதத்தை ஆரம்பக் கல்விக்கு செலவிடுகின்றது.

இலங்கை நிலைமை

இலங்கை யின் நிலைமைகளை முன்னேற்றும் திட்டவரைபுகள் புதிய கவன ஈர்ப்பை மீண்டும் உருவாக்கியுள்ளன. இலங்கையின் கல்வி ரீதியிலான ஆகிய நாடுகளுடனான ஒப்பீட்டுத் தர நிலைமை பின்வருமாறு காணப்பட்டது. ஆரம்பக் கல்வி , முக்கியமான பாடங்களின் தரம், கல்வி முறையின் தரம் என்பன இங்கு ஒப்பிடப்படுகின்றன.

மூலம்: அபிவிருத்தி கொள்கைச் சட்டகம் 2010:113 இலங்கை- மலர்ந்து வரும் ஆசியாவின் ஆச்சரியம்.

உலகில் உள்ள 131 நாடுகளின் கல்வி முறை பற்றி மேற்கொள்ளப்பட்ட போட்டித்தன்மை அறிக்கை இவ்வாறு தரப்படுத்தியுள்ளது.

மிகப் பெரிய வளர்ச்சியை இலங்கையும் எட்டமுடியவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

✷ புதிய இலக்குகளை நோக்கி நகர்தல்

இலங்கை 2020 இல் மத்திய வருமானம் கொண்ட தர நாடு என்ற இலக்கு நோக்கி நகர விரும்புகின்றது. தாழ்ந்த வருமானம் கொண்ட நாடுகளின் பட்டியலில் இருந்து விடுபடுதல் என்ற இந்த இலக்கினை கல்வி முன்னேற்றத்தின் வாயிலாக மேற்கொள்வது இதன் இலட்சியமாகும்.

புதிய கல்விக் குறிக்கோள்கள் பின்வருமாறு தரப்படுகின்றன. (இலங்கை -ஆசியாவின் மல ர்ந்து வரும் ஆச்சரியம் 2010)

✷ மாணவர்கள் பெற் நோலும் ஆசிரியரிலும் தங் கியிராமல் சுயாதீனமாக கற் றலை ஊக்குவித்தல்

✷ மாறிவரும் சுதேசத்தில் இதமாகவும் திறமையுடனும் இணைந்து கொள்ளும் திறனை வளர்த்தல்.

✷ துரிதமான பொருளாதார சமூக அபிவிரு த்திக்கு வேண்டப்படும் தகுதிமற்றும் தொழில் நுட்பத்திறன்களை பெறச் செய்தல்

✷ உருவாகும் சவால்களை எதிர்கொண்டு, நிற்கக் கூடிய திறன்மிக்க ஊழியப் படையாக வளர்த்தல்

✷ கல்வியிலான சமவாய்ப் பினை இயன்றளவு அதிகரித்தல்

✷ தற்போதைய கல்வி முறையின் தரத்தையும் பொருத்தப்பாட்டையும் மேம்படுத்துதல்

✷ ஒழுக்கம் மிக்க சமூகத்தில் சமாதானமாகவும் ஐக்கியமாகவும் வாழ்வதற்குரிய தகுதியையும் மனப்பாங்கையும் ஊக்குவித்தல்.

✷ அறிவுமையமனிதவரநிலையை உருவாக்குவதன் மூலம் உள்நாட்டுக்கும் உலகளாவிய பொருளாதாரத்துக்கும் பங்களிப் புச் செய்தல்.

இதனடிப்படையில் பின்வரும் கல்விசார் பணி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

(I) சகல மாணவரும் சமூக, பொருளாதார வேறுபாடுகளைக் கடந்து ஆரம்பக் கல்வி யையும் இரண்டாம் நிலைக்கல்வியையும்நிறைவுசெய்தல்.

(II) ஒவ்வொரு மாணவருக்குமான தேவையுணர்ந்து அவர வர்களுக்கான கல்விச் சேவை கள் வடிவமைக்கப்படுதல்.

(III) சகல இளைஞர்களும் ஆங்கிலம், கணிதம் போன்றவ ற்றை உபயோகிக்கும் திறன் உடையவர்களாக வளர்தல்

(IV) எவ்வாறு தாமாக கற்பது என்பது பற்றிய பூரண தெளிவுகொண்டவர்களாகமாறுவதற்குதுணைசெய்தல்

(V) படைப்பாற்றலுடன் ஒன்றிணைந்த சிந்தனா வளர்ச்சி பெற்று மாற்றங்களை எதிர்கொள் ளக்கூடியவர்களாகவும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணக்கூடிய நம்பிக்கை மிக்க வர்களாகவும் வளர்தல்

(VI) ஆசிரியர்களும் மாணவர்கள் மற்றும் கல்வியில் நிகழும் மாற்றங்களுக்கேற்ப தம்மை மாற்றிக் கொண்டு புதிய அறிவுடனும் புதிய திறன்களுடனும் கற்பிப்பதை உறுதிப்படுத்துதல்

(vii) மாறிவரும் புதிய தொழில் நுட்பங்களை மிகவும் பொருத்தமான முறையில் கற்றலிலும் கற்பித்தலிலும் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துதல்

இலங்கை- மலர்ந்து வரும் ஆச்சரியம் (2010) என்ற ஆவணம் மேற்குறிப்பிட்டவாறு பாடசாலைக்கல்வி எல்லோருக்கும் பயன்படுமாறு செய்வதில் அதிக அக்கறை காட்டுகின்றது.

அத்தியாவசியக்கல்வி கற்பதற்கான வயதெல்லையும் 14 வயதிலிருந்து 16 வயதாக அதிகரிக்கும் கொள்கையும் அது கொண்டு ள்ளது.

புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

2020 இல் தரம் 13 இன் பின் பல்கலைக்கழக அனுமதி பெற தகுதியுடையோர் சதவீதத்தை 75 சதவீதத்துக்கும் க.பொ.த.சாதாரண தரத்திலிருந்து உயர்தர வகுப்புக்குச் செல்வதும் தகுதியுடையோரை 65 சதவீதத்துக்கும் உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டிருப்பதும் சிறப்பானது.

பெற்றோர்கள் கவனத்திற்கு

பெற்றோர்களே உங்களை விடவும் உங்கள் பிள்ளைகள் ஒருபடி வாழ்வில் உயர வேண்டுமல்லவா? அவர்கள்தமதுபிள்ளைகளைமேலும் ஒருபடி உயர்த்துவார்களல்லவா? இப்படியே உங்கள் தலைமுறை முன்னேறுவதற்கு கல்வி கற்பதுதான் ஒரேவழி. அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் அதிர்ஷ்டம் வந்து இதையெல்லாம் செய்ய முடியாது.

உங்கள் பிள்ளைகளை ஒழுங்காக படிப்பதற்கு பாடசாலைக் கனுப்பி உதவியும்உணவும்வழங்கினால்என்ன நன்மைகள் கிடைக்கும் தெரியுமா?

✷ வாழ்க்கை முழுதும் வெயிலிலும் மழையிலும் தூசியிலும் வேலை செய்ய வேண்டிய நிலைமையை தவிர்த்துக் கொள்ளலாம்.

✷ அதிக வேலை செய்து குறைந்த சம்பளம் பெறுவதும் அதனால் வறுமையுடன் வாழ்வதும் தவிர்க்கப்படும்.

✷ கற்றவர்களையும் உத்தியோகம் பார்ப்பவர்களையும் பார்த்து ஏக்கமும் விரக்தியும் அடைந்து எந்நேரமும் **தாம் மற்றவரை விடக் குறைந்தவர்கள்** என்ற தாழ்வுணர்ச்சியுடன் வாழ்வதையும் தவிர்க்க முடியும்.

✷ எப்போதும் மற்றவர்களது கட்டளைகளுக்கும் ஏவல்களுக்கும் கீழ்ப்படிந்து பயந்து, பயந்து வாழும் வாழ்வைத் தவிர்க்க முடியுமல்லவா?

✷ கடின உடல் உழைப்பினால் ஐம்பது வயதிலேயே அறுபத்தைந்து வயதினர் போல் உடல்வாடி நோயினால் வருந்தும் நிலையைத் தவிர்க்க முடியுமல்லவா?

கிராமங்களிலுள்ள சன சமூக நிலையங்களும் மாதர் மன்றங்களும் இவற்றை பெற்றோருக்கு தெளிவுபடுத்தி அரசாங்கம் 3000 கோடி ரூபாவில் வழங்கும் இலவசக் கல்வியை முழுமையாகப் பெற்று வாழ்வில் உயர உதவிடுங்கள். இதுவே தூய சமூகப் பணியாகும்.

ஆசிய நாடுகளின் கல்வியின் தர நிலைமை 2008-2009

நாடுகள்	ஆரம்பக் கல்வித் தரம்	விஞ்ஞான கணித கல்வித்தரம்	கல்வி முறையின் தரம்
இலங்கை	42	41	44
இந்தியா	80	17	37
தாய்லாந்து	80	17	37
மலேசியா	23	21	18

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ஜோன்ஸ் - மத்திய கல்லூரி

'வடக்கின் மாபெரும் போர் இன்று'

Battle Of the North

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான மூன்று நாள் கொண்ட கிரிக்கெட் போட்டி இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கோலாகலமாக ஆரம்பமாகவுள்ளது.

வடக்கின் மாபெரும் போர் எனும் போது அதற்கு இலங்கை ரீதியில் நல் வரவேற்புள்ளது. காரணம் அதன் வரலாறு நீண்டகாலம் கொண்டதாகும்.

இலங்கையில் பெரும் துடுப்பாட்டப் போட்டிகள் அறிமுகமாகும் போது ஆரம்பமான போட்டியாக வடக்கின் பெரும்போர் காணப்படுகின்றது.

வடக்கின் மாபெரும் போர், போட்டி என்றால் யாழ்ப்பாணத்தில் ஒரு திருவிழா போன்று கொண்டாடப்படும். இரு அணிகளின் ரசிகர்களும் யாழ்ப்பாணத்தின் முழு இடங்களிலும் வெற்றிக்கோசங்கள் எழுப்பிய வண்ணம் மேள தாளங்களுடன் செல்வார்கள்.

வடக்கின் மாபெரும் போர் துடுப்பாட்டப்போட்டியில் மோதவுள்ள அணிகளுக்கு பெண் ரசிகைகளின் ஆதரவுகளாக யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு சுண்டுக்குளி மகளிர் கல்லூரி பெண் ரசிகைகளும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி பெண் ரசிகைகளும் ஆதரவு வழங்குவது வழமை.

■ கணேசமூர்த்தி மதீசன்

வடக்கின் மாபெரும் போட்டியில் பங்குபற்றும் வீரர்களுக்கு மேலதிக உத்வேகத்தை காலம் காலமாக இவ் ஆதரவு கொடுத்து வருகின்றது.

107 ஆவது போட்டிக்கு யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு ஜெயகுமார் அமிடஜனும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணிக்கு பூபாலசிங்கம் டார்வினும் தலைமை தாங்குகின்றனர்.

தூள்... தூள்... தூள்...

வடக்கின் மாபெரும் போர்- இது
உலகமே ஒன்றிணையும் போர்
ஒன்லைனில் பார்க்கலாம் போர்- அடி
சிக்ஸரும் பவுண்டரியும் தூள்
பறந்திடும் பந்துகளே பார் - பிடி
எடுத்திடும் ஸ்டைலினை பார்
பாண்டுடன் குத்தாட்டம் போடும்- நம்ம
பசங்க முகத்தில...
ஓடிடும் ஓட்டத்தில- மேல
பறக்கிற பிளைட்டே தூள்
போடுங்க போடுங்க போல்- அடி
ஓயிரும் அடிகளுக்கு மேல்



சென்.ஜோன்ஸ் அணி

இருப்பவர்கள் வலம் இருந்து இடம்

பி.லவேந்திரா (பயிற்றுநர்), பி.பிருந்தாபன், ஜெ. அமிர்தயன் (அணித்தலைவர்), அருட்திரு என்.ஜெ. ஞானப்பொன்ராஜா (கல்லூரி அதிபர்), பி.துவார சீலன் (உபதலைவர்),ஜி.ஆபிரகாம் அனோஜன் , வி.குமணன் (விளையாட்டு உத்தியாகத்தர்)

நிற்பவர்கள் முதலாவது வரிசை

எஸ்.கபில்ராஜ், கே.ரி.கபிலன், ஜி.சுபாசன், என். கிருத்திகன், ஆர்.லோகதீஸ்வர், ரி.சஜன், எ.கானாமிர்தன், எஸ்.கவாஸ்கர், எம்.நிலோசன், எம்.விந்தாகரன்

நிற்பவர்கள் இரண்டாம் வரிசை

எஸ். ஜெனி பிளமின், எம்.ஜெனதர்சன், எ.சுவிந்தன்,ஆர். பிரியசங்கர், எஸ்.பிரவீன்சன்.



மத்திய கல்லூரி அணி

இருப்பவர்கள் வலம் இருந்து இடம்

இ. பிரபாகரன் (விளையாட்டு உத்தியோகத்தர்), பூ. டார்வின் (அணித்தலைவர்),எஸ்.கே. எழில்வேந்தன் (கல்லூரி அதிபர்), பா. நிரோஜ் (உபதலைவர்),எஸ்.சுரேஸ்மோகன் (பயிற்றுநர்), வி.ஆர்.வி.டினேஸ் (பொறுப்பாசிரியர்)

நிற்பவர்கள் முதலாவது வரிசை

விவேகானந்தராஜ் ஹரிகரன், முருகதாசன் கபிலன், பவானந்தன் நிரூபன், சுப்பிரமணியம் நிசாந்தரூபன்,குபேரகுலசிங்கம் பிரிய கோபன், சிவலிங்கம் சௌமீதரன், கலியுகவரதன் சஞ்சயன், குலேந்திரன் ஜனியஸ் கனிஸ்ரன், பத்திநாதன் நிரோஜன், சத்தியலிங்கம் அலன்டிலன்

நிற்பவர்கள் இரண்டாம் வரிசை

சதீஸ் கோமேந்திரன், விஜயதாஸ் டினோஜன், பிரான்சிஸ் ஜெயந்திரன், சிவராதகுந்தரம் அலன்ராஜ், உதயகுமார் பிரியலக்ஷன்

வடக்கின் மாபெரும் போர் இம்முறை அனைத்து கிரிக்கெட் ரசிகர்களுக்கும் விருந்தாக அமையும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

வயிற்றில் தங்கத்தை மறைத்து கடத்திய இலங்கையர் கைது

அடிவயிற்றில் 15 இலட்சம் ரூபாய் மதிப் புள்ள தங்கத்தை மறைத்து எடுத்து வந்த இலங்கை பயணி ஒருவர் கைது செய்யப் பட்டார்.

மும்பை சர்வதேச விமான நிலையத்தில் கடந்த 10 ஆம்திகதி காலை எமிரேட்ஸ் விமா னத்தில் டுபாயிலிருந்து வந்த பயணிகளை சுங்கத்துறை அதிகாரிகள் சோதனையிட்ட னர்.

அப்போது ஒரு பயணியின் பெருங் குடல் பகுதியில் ஏதோ உலோகப் பொருள் இருப்பதை பரிசோதனை கருவி மூலம் கண்டுபிடித்தனர்.

அந்த பயணியை அதிகாரிகள் தனியாக அழைத்து சோதனை செய்தபோது ஐந்து தங்க பிஸ்கட்டுகளை கார்பன் காகிதத்தில் சுற்றி அதன் மீது கிரீம் தடவி மலத்துவாரம் வழியாக வயிற்றின் அடிப்பகுதிக்கு செலுத்தி மறைத்து எடுத்து வந்தது கண்டுபிடிக்கப் பட்டது.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில் அவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்றும் டுபாயிலிருந்து மும்பைக்கு வருவது அவ ருக்கு 25 ஆவது முறை என்றும் இந் தாண்டு 13 முறை வந்துள்ளார் என்பது தெரிய வந்தது.

அவர் மறைத்து வைத்திருந்த தங்க கட்டி களை அதிகாரிகள், மருத்துவர்கள் உதவி யுடன் வெளியே எடுத்தனர். அவரை பொலி ஸார் கைது செய்தனர். (அ-2)

மாங்குளம் சந்தியில் பேருந்து தரிப்பிடமில்லை

கொளுத்தும் வெயிலில் பயணிகள் அவதி

(மல்லாவி)

மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு செல்கின்ற பயணிகள் மாங்குளம் சந்திப் பகுதியில் தரித்து நின்று பேருந்து பயணிப் பதற்கு பேருந்து தரிப்பிடம் இல்லாமலும் மழையிலும் கொளுத்தும் வெயிலிலும் பல் வேறு இடங்களுக்கு மத்தியில் நின்று பய ணிப்பதை காணக் கூடியதாக உள்ளது.

மாங்குளத்தில் இருந்து முல்லைத்தீவு நோக்கி வீதி அகலிப்பு இடம்பெற்ற காரண மாக முன்பிருந்த பேருந்து தரிப்பிடம் அகற் றப்பட்டுள்ளது.

இதன் காரணமாக புதிய பேருந்து தரிப்பிடம் அமைக்கப்படாமையினாலேயே இவ் அவல நிலை தோன்றியுள்ளது.

தினமும் இவ்வீதி ஊடாக வயோதிபர்கள், மாணவர்கள்உட்பட பல்வேறுதரப்பட்டமொதுமக் கள் பயணிக்கின்ற நிலையில் பேருந்து தரிப் பிடம் இல்லாது இருப்பது தமக்கு பெரும் பாதிப் பாக இருப்பதாக மக்கள் குறைபடுகின்றனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை சார்ந்தவர்களும் சமுதாய நலனில் அக்கறை கொண்ட பொது அமைப்புக்களும் தமக்கொரு பேருந்து தரிப்பிடத்தை அமைத் துத்தர வேண்டுமென கோரிக்கை விடுத்துள் ளனர். (அ-3-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சீனாவுடன் கொண்டுள்ள உறவை வெருட்ட மீசை முறுக்குகிறது அமெரிக்கா

தினமணி ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டு

ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 22 ஆவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கை மீதான தீர்மானத்தில் குறிப்பிடும் படியாக எதுவுமில்லை என தினமணி ஆசிரியர் தலையங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் சீனாவுக்கு நெருக்கமாகி வரும் இலங்கைக்கு தன் பலத்தை வெளிப்படுத்த விளையும் அமெரிக்க பெரியண்ணன் மீசை முறுக்குவதுதான் இந்தத் தீர்மானத்தின் நோக்கம் எனவும் இவ்வுடகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது,

ஐ.நா. மனித உரிமைகள் குழுமத்தில் அண்மையில் அமெரிக்கா தாக்கல் செய்த இலங்கைக்கு எதிரான தீர்மானத்தில் சொல்லிக் கொள்ளும்படியாக ஒன்றும் இல்லை. குழுமத்தில் அங்கம் வகிக்கும் 47 நாடுகளுக்கும் வரைவுத் தீர்மானத்தின் நகல் வழங்கப்பட்டபோது அதில் இலங்கை ஜனாதிபதியைப் போர்க்குற்றவாளியாக முன்னிறுத்துவதற்கான எந்தக் கட்டாயமும் அந்தத் தீர்மானத்தில் காணப்படவில்லை.

இவை ஏற்கனவே சென்ற ஆண்டுகொண்டு வரப்பட்டபோது எவ்வாறு இலங்கையில் மனிதவுரிமை மீறல்களைப் பற்றிப் பேசினவோ அதைப் போலவே இப்போதும் இலங்கையில் மனிதவுரிமை மீறல்களைப் பற்றி பேசுகிறது.

இலங்கை இராணுவம் நடத்திய கடைசி நேர அழித்தொழிப்புப் போரில் சரணடைந்த, பிடிபட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினர் சர்வதேச போர்நெறி முறைக்கு உட்படுத்தப்படாமல் கொல்லப்பட்டதோ அண்மையில் வெளியான பாலச்சந்திரன் கொலைப்பட்ட ஆவணப்படங்களின் தாக்கமோ கூட அந்தத் தீர்மானத்தில் அணுவளவும் காணப்படவில்லை.

மனிதவுரிமை மீறல் என்று சொல்வதன் மூலம் இராணுவம் போராளிகள் சாராத ஏனைய இலங்கைத் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல், நடத்தப்பட்ட வன்முறைகள், கொலைகள் இவற்றை மட்டுமே விசாரிக்கவும் பரிந்துரைக்கவும் செய்வதான வரையறைக்குள் இந்தத் தீர்மானம் தன்னைத் தானே திணித்துக் கொள்கிறது என்பதே உண்மை.

இலங்கை அரசு தான் ஏற்படுத்திய போர்ப்படிப்பினை மற்றும் நல்லிணக்க ஆணையத்தின் பரிந்துரைகளைப் போது மானதாக நிறைவேற்றியிருக்கவில்லை என்று கருத்துத் தெரிவிக்கும் இந்த தீர்மானம் இலங்கைத் தமிழர்கள் மீது இலங்கை அரசு நடத்தியுள்ள மனிதவுரிமை மீறல் மற்றும் பேச்சுரிமை, வாழுரிமை, பத்திரிகைச் சுதந்திரம், நீதி ஆகியவற்றை நிலைநிறுத்த அங்கே ஐ.நாவின் சிறப்பு நடவடிக்கை அதிகாரக்குழு செல்ல வேண்டும் என்கிறது.

ஆனால், இந்த சிறப்பு நடவடிக்கை அதிகாரக்குழு தனீது ஆலோசனையை, பரிந்துரையைத் தாக்கல் செய்யும் முன்னால் இலங்கை அரசுடன் கலந்தாய்வு செய்து இலங்கையின் ஒப்புதலுடன் ஏற்புடையவற்றை அமுல்படுத்தச் சொல்ல வேண்டும் என்கிறது.

அமெரிக்கத் தீர்மானம் புஸ்வாணம் என்று தெரிந்தாலும் கூட இலங்கை அரசு எதிர்ப்புத் துள்ளல்களை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. இலங்கை உள்விவகாரத்தில் தலையிடுகிற அரசியல்தனமான தீர்மானம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறது.

அடுத்த நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதை இந்தியா விரும்பாமல் இருக்கக் காரணம் இந்தத் தீர்மானத்தை ஆதரித்தால் அடுத்து காஷ்மீர் பிரச்சினையை ஏனைய வர்கள் எடுத்துக்கொள்வார்கள் என்ற அச்சம்தான்.

அதற்காக இலங்கைத் தமிழர்களுக்காக இந்திய அரசு அளித்த பெருநிதியும் இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிக்கப்படும் என்று இந்திய அரசுக்கு இலங்கை அளித்த வாக்குறுதியும் என்ன ஆயிற்று என்று கேள்விகூட கேட்காமல் இருக்க வேண்டுமா என்ன?

இலங்கையின் வடகிழக்கு மாகாணத்துக்கு தன்னாட்சி அளிக்க மாட்டோம் என்று வெளிப்படையாக இலங்கை ஜனாதிபதி அறிவிப்பு செய்த பின்னரும் கேள்வி கேட்க இந்திய அரசு தயங்குவது ஏன் என்று தெரியவில்லை.

தீர்மானம் என்னவென்று தெரியாமல் எந்த முடிவும் எடுக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் குர்ஷித் எப்போதுமே பிற நாடுகளின் உள்விவகாரங்களில் ஏனையவர்கள் தலையிடுவதை இந்தியா ஒருபோதும் ஆதரித்தது இல்லை என்று அரசின் நிலைப்பாட்டை மறைமுகமாக உணர்த்தவே செய்கிறார்.

இலங்கைத் தமிழர்களின் கண்ணியம், சுயமரியாதை குறித்து கவலை தெரிவிக்கும் பிரதமர் இந்தத் தீர்மானம் பற்றிப் பேசாமல் மௌனம் காக்கிறார். இந்த இரட்டை நிலையை காங்கிரஸ் மத்திய அரசு இடையே முரண்பாடு என்று டெசோ அமைப்பு அறிக்கை வெளியிட்டு தி.மு.க-காங்கிரஸ் இடையே முரண்பாடு கிடையாது என்பதை அடிக்கோடிட்டுச் சொல்கிறது.

தற்போது குழுமத்தின் 22 ஆவது கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கும் இத்தீர்மானத்தின் முடிவுகள் எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதை ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர் கூடும் 25 ஆவது கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என்கிறது இந்தத் தீர்மானம்.

அதிலிருந்தே இந்தத் தீர்மானத்தால் எந்தவிதப் பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதும் இது வெறும் கண்துடைப்பு என்பதும் தெரிகிறது என இந்த ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

இனப்படுகொலை தொடர்பில் மஹிந்தவிடம் கேள்வி எழுப்புங்கள்

ஜப்பான் பிரதமரிடம் வி.உருத்திரகுமாரன் கோரிக்கை

தமிழர்கள் மீதான போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கேள்வியெழுப்புங்கள். இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் ஜப்பானிய பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நடைபெற்று வரும் ஐ.நா. மனித உரிமைக் கூட்டத் தொடரில் வடகொரியா தொடர்பில் ஜப்பான் கொண்டு வரவுள்ள தீர்மானத்தினை சுட்டிக்காட்டி இலங்கை தொடர்பில் அனைத்துலக விசாரணைக்கான ஆதரவினை ஐ.நா. மனித உரிமைச் சபையில் வலியுறுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் கட்டளையின் கீழ் போரின் இறுதி 5 மாதங்களில் மட்டும் 70 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் வரையிலான தமிழர்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதனை ஐ.நாவின் உள்ளக மீளாய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழ்ப்பெண்கள் மீதான பாலியல் வன்புணர்வுகளிலும் இலங்கைப் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்பதனையும் எடுத்துரைத்துள்ளார்.

மேலும் 1958 ஆம் ஆண்டு முதல் தமிழர்கள் மீது இத்தகைய பாரிய படுகொலைகள் இடம்பெற்று வருகின்றன. கடந்த 2009 ஆம் ஆண்டின் போரின் போது பாதுகாப்பு வலயங்கள் என இலங்கையினால் அறிவிக்கப்பட்ட பகுதிகளில் திட்டமிட்ட முறையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமை குறித்தும் அவர் எடுத்துரைத்துள்ளார். (அ-2)

பொலிஸ் அதிகாரி திடீர் மரணம்

(குருமன்காடு)

வவுனியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பண்டாரிக்குளம் பொலிஸ் சோதனை சாவடியில் பொலிஸ் அதிகாரியாக கடமையாற்றிய நிமல் வீரசூரிய (வயது 42) திடீரென மரணமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வவுனியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டாரிக்குளம் பொலிஸ் சோதனைச் சாவடியில் இடம்பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது, பண்டாரிக்குளம் சோதனை சாவடிக்கருகில் உள்ள கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த போதே திடீரென மயக்கமுற்று கீழே விழுந்துள்ளார். உணர்வற்று காணப்பட்டிருந்த இவரை வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போதே அவர் இறந்து விட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் அம்பேபுஸ்ஸவை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2-250)

சொத்தழிவுக்கு விண்ணப்பிக்க காலம் நீடிக்கப்பட்டுள்ளது

முல்லை. அரச அதிபர் தகவல்

(முல்லாவி)

முல்லை. மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து போரினால் பாதிக்கப்பட்ட அனைத்து பிரிவுகளிலும் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கான சொத்தழிவுகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்ப திகதி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக முல்லை. மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தம்காரணமாக வீடுகள் உட்பட சொத்துக்கள் அழிவடைந்த அரச உத்தியோகத்தர்களுக்கான இழப்பீடு வழங்குவதற்கான விண்ணப்பிக்கும் திகதியானது கடந்த மாதம் 28 ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ள நிலையில் மூன்றாவது தடவையாகவும் பலர் விண்ணப்பிக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

அத்துடன் ஊடகங்களும் இது தொடர்பாக காலநீடிப்பு வழங்க வேண்டும் என்பதை கோரிக்கை மூலம் தெரிவித்திருந்தன. இதனை அடுத்து புனர்வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொண்டு திகதி நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே, இறுதி திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்கள் அனைத்தும் புனர்வாழ்வு அமைச்சிற்கு கிடைக்க கூடியதாக தாங்கள் கடமையாற்றும் திணைக்கள தலைவர்கள் ஊடாக அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-3-15)

புலிகளை பாராட்டினோமே தவிர அதன் நியாயங்களை கூறவில்லை

கொளத்தூர் மணி வருத்தம்

திரைப்படத்தில் ரஜினியின் சண்டைக் காட்சியை பாராட்டுவதை போலத்தான் புலிகளின் சண்டையை பாராட்டிக் கொண்டிருந்தார்களே தவிர அதன் பின்னணியில் இருக்கின்ற நியாயங்கள் தனி ஈழத்துக்கான தேவைகளை நாம் மக்களிடம் கொண்டு செல்ல தவறிவிட்டோம் என திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தெரிவித்துள்ளார்.

சென்னை தியாகராஜ நகரில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று உரை நிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், ஈழ விடுதலைப் போர் நடந்தபொழுது கூட நாம் உண்மையான ஈழச்சிக்கலை மக்களிடம் கொண்டு சேர்க்கவில்லை. ஈழ ஆதரவாக நின்றவர்கள் பலபேர் கூட அவர்களின் போர்த்திறனை பாராட்டிக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுது நாம் தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பு என்ற நியாயத்தை உலக நாடுகளுக்கு கொண்டு சேர்க்க வேண்டும் என்று கொளத்தூர் மணி தனது உரையில் தெரிவித்துள்ளார். (அ-2)

விஷப்பாம்பை எதிர்த்து போராடிய எலிகள்

சீனாவில் ஹாங்கூவ் நகரிலுள்ள உயிரியல் பூங்காவில் விசித்திர சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. பூங்கா ஊழியர் அங்குள்ள கொடிய விஷப் பாம்புக்கு தினமும் 2 எலிகளை உணவாக வழங்குவார்.

அதுபோல பூங்கா ஊழியர் சம்பவத்தன்றும் உயிரோடு 2 எலிகளை எடுத்து சென்று பாம்பு கூண்டிற்குள் விட்டார். உணவு கிடைத்த மகிழ்ச்சியில் விஷப் பாம்பு வேகமாக வந்து ஒரு எலியை கொத்தி சாகடிக்க முயன்றது.

உடனே மற்றொரு எலி வெகுண்டெழுந்து தனது கூட்டாளியை காப்பாற்ற பாம்பின் தலையை மீண்டும் மீண்டும் கடித்தது.

இவ்வாறு நீண்ட நேரம் சண்டை நீடித்தாலும் பாம்புக்கே வெற்றி கிடைத்தது. எலியை கொன்று விட்டு வழக்கம் போல விழுங்கி விட்டது.

இச்சம்பவம் தொடர்பாக ஊழியர் வென் ஷாவோ கூறுகையில், இந்த விஷப் பாம்பை ஒரு எலி எதிர்த்து போராடிய ஒரு சம்பவத்தை நான் இதுவரையில் பார்த்ததே இல்லை என வியப்புடன் கூறினார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றலை வெளிப்படுத்தும் வாய்ப்பு இல்லா விட்டால், அந்த ஆற்றல் மதிப்பற்றுப் போய்விடும்.
-நெப்போலியன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

சிறந்த பொது நிர்வாகத்திற்கு அதீத மரியாதை அடையாளமல்ல

வட மாகாணத்தில் இப்போது கடன் கழிப்பு நடந்து கொண்டிருக்கிறது. எவரும் விசுவாச மாகப் பணியாற்ற முடியாத நிலைமை. உயர் அதி காரிகள் தீர்மானம் எடுக்க முடியாத நிலையில் உள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் தங்கள் ஓய்வுகாலம்வரை; வடக்கு மாகாணத்தின் ஆளுநராக இருக்கின் றவரை சமாளித்தல் என்பதும், அவர் கேட்கின்ற வேளைகளில் உரிய புள்ளிவிபரங்களைக் கொடுப்பதும், அதில் ஆளுநர் திருப்தியடைந்தால் ஒரு குட்டிப் புளுகு என்பதிலும்தான் வடக்கு மாகாணத்தின் நிர்வாகம் அசைகின்றது என்பதை வேதனையோடு கூறித்தான் ஆகவேண்டும்.

தரமான தீர்மானங்களை எடுக்கக்கூடிய அதிகாரிகள் எங்களிடம் இருந்தும் அவர்கள் ஆளுநருக்கு பயப்படுகின்றார்கள்போல் தெரிகிறது.

ஆளுநரும் வட மாகாணத்தில் சில முன்னேற் றங்களை, குறிப்பாக வட மாகாணக் கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தாலும்,

அவர் இராணுவக் கட்டளைத் தளபதியாக இருந்ததன் காரணமாகவோ! என்னவோ!! இரா ணுவக் கட்டளைகளைப் பிரயோகிப்பதுபோல் நடந்து கொள்வது அதிகாரிகளை பயம் கொள்ள வைக்கிறது என்றே கருத வேண்டியுள்ளது. இஃது பொது முகாமைத்துவத்திற்குப் பொருத்த டையதல்ல.

உண்மையில் எங்கள் அதிகாரிகள் பாவங்கள். ஒரு சாதாரண சிற்றூழியர் தனது பணியில் கொண்டுள்ள திருப்தியைக் கூட,வடக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் முதல், இடை நிலை அதிகாரிகள் வரை எவரும் கொண்டி ருக்கவில்லை.

அங்கே பார்! இலங்கை நிர்வாக சேவையில் சித்தியடைந்தமையால் அவர் உயர் பதவியில் இருக்கிறார் என்று ஒரு உயர் அதிகாரியை, ஒரு மாணவனுக்கு உதாரணம் காட்ட முடியாத அள வில் எங்கள் நிலைமை உள்ளது.

அரச நிர்வாகத்தில் அதீதமான மரியாதை களும் அடிக்கடி எழுந்து நின்று மதிப்புச் செய்வதும் சிறந்த நிர்வாகத்திற்கான அடையாளங்கள் அல்ல.

இவை தனிமனிதனைச் சமாளிக்கின்ற சடங் குகள். சடங்குகளே நிர்வாகமாயின் அரச பணி யாளர்களிடம் இருந்து உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக் கொள்ள முடியாது.

எனவே வடக்கு மாகாணத்தில் முன்னெடுக் கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பூரண வெற்றியைத் தரவேண்டுமாயின், முதலில் ஆளுநருக்கும், வடக்கு மாகாண உயர் அதிகாரி களுக்கும் இடையில் நட்பியல் ரீதியான உறவு நிலை அவசியமாகும்.

இதைவிடுத்து கட்டளை என்ற அடிப்படை யில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படுமாயின் பள்ளி கள் கட்டப்படும். ஆய்வுகூடங்கள் திருத்தப்படும். மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் படா னாகவே இருக்கும்.

மக்களை சமமாக நடத்துகின்ற போதும் எங்களை விமர்சிக்கின்றனர்-கஜதீர

மனித உரிமைகளை மதித்து நாம் நடக்கும் போது இலங்கைக்கு வெளி யில் உள்ளவர்கள் விமர்சிக்கின்றனர் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்துள்ளார்.

வவுனியா சிறைச்சாலை கடந்த 8 மாதங்களின் பின்னர் புதிய கட்டிடத் தொகுதி மீண்டும் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டதும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப் பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்,

மனித உரிமைகளை மதித்து இன, மத, மொழி பேதமில்லாமல் இந்த் நாட் டில் வாழும் எல்லோரையும் சமமாக மதிக்கின்ற பல்வேறு பணிகளை எங்க ளுடைய அமைச்சும் எமது அரசாங் கமும் முன்னெடுத்து வருகின்றது. அதற்காக பல்வேறு முயற்சிகளையும் எடுத்து வருகின்றோம்.

இப்படியான ஓர் சூழலில் இலங் கைக்கு வெளியே இருந்து பார்க்கின்ற வர்கள் பல்வேறு விமர்சனங்களையும் குற்றச்சாட்டுக்களையும் முன் வைக்கின் றார்கள்.

ஜனநாயகத்தை நாடுபவர்களாக நாம் இருக்க வேண்டும். எந்த வகை யிலும் ஆயுத கலாசாரத்தை நாடுபவர் களாக நாம் மாறக்கூடாது. எந்தக் காரணம் கொண்டும் அது வெற்றிய ளிக்காது.

ஆகவே அது குறித்து நாம் நம்பிக்கை கொள்ளக்கூடாது. ஜனநாயக மனித விழுமியங்களை மதிக்க வேண்டும். அவ்வாறு நாம் செயற்பட்டால் இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பேதமின்றி நல்தொரு நாட்டை கட்டியெழுப்ப முடியும். சிறைச்சாலை சம்பவம் ஏற்பட்ட போது பல்வேறு விமர் சனங்கள் முன்வைக்கப்பட்டன.

ஆனால் நாம் இருந்ததை விட வசதிகளையும் வாய்ப்புக்களையும் அதிகரித்து இந்த சிறைச்சாலைக்குள்ளே இருப்பவர்களுக்கு தேவையான அடிப் படை வசதிகள் செய்து திறந்து வைத்து ள்ளோம். புதிதாக அமைக்கப் பட்ட கட்டடம் உட்பட புனர்நிர்மாணத் திற்கென ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா செலவிட் டுள்ளோம். இந்த நாட்டில் சிறைச்சாலை களை திறப்பதை விட புனர்வாழ்வு நிலை யங்களை திறப்போம் என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

வடமாகாணத்தில் யாழ்ப்பாணத்திலும் வவுனியாவிலும் உள்ள இரண்டு சிறைச் சாலைகளும் இப்பகுதி மக்களுக்கு பல் வேறு விதத்தில் துணை புரிந்து கொண்டி ருக்கின்றது. அத்துடன் இவை இன்னும் வசதிகளுடனும் வாய்ப்புக்களுடனும் முன்னேற்றப்பட வேண்டும் என்பதில் எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை.

சிறைக் கைதிகளாக இருந்த போதி லும் உங்களது வாழ்க்கையில் மாற் றத்தை கொண்டு வரவேண்டும். மனிதர் கள் என்ற ரீதியில் பிழைகளை திருத்திக் கொண்டு சட்ட ரீதியாக நீதிமன்றம் ரீதி யாக உங்களுக்கு எவ்வளவு விரைவாக வீடுகளை நோக்கி செல்ல முடியுமோ அவ்வளவு விரைவாக வீடுகளுக்கு செல்ல வேண்டும் என்று எமக்கும் ஆர்வமாக உள்ளது.அதற்காக சட்டமா அதிபர் திணை க்களத்தோடும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உட்பட அரசாங்க அதிகாரிகள் ஊடாக நடவடிக்கைகளை முன்னெ டுத்துள்ளோம் என்றார்.(அ-2,250,266)

இ.ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல்

இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பா ணம், ஆகிய மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர்களுடனான கலந் துரையாடல் நடைபெறவுள்ளதாக இல ங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அறி வித்துள்ளார்.

அதிபர், ஆசிரியர்களுடனான சந்திப் பின் போது அவர்கள் எதிர்நோக்கும் சம்பள முரண்பாடுகள், இடமாற்றம் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான பிரச்சி னைகள் உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று வியாழக்கி ழமை பி.ப 2.30 மணிக்கு புதுக்குடியி ருப்பு கோட்டத்திற்கு உட்பட்ட அதிபர் ஆசிரியர்களுக்கான கலந்துரையா டல் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி யில் நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை களில் கடமையாற்றும் அதிபர் ஆசிரி யர்களுடனான கலந்துரையாடல் அவர் கள் கடமையாற்றும் பாடசாலைகளி லேயே நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

அத்துடன் நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 10 மணிக்கு யாழ். ஆனைப்பந்தியில் உள்ள நாவலர் கல்வி நிலையத்தில் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கீழுள்ள வலயங்க ளில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர் களுடனும் இலங்கை ஆசிரியர் சங்க வடமாகாண மட்டத்தில் உள்ள வலயம், மாவட்ட மட்ட தலைவர், செயலாளர் உட் பட அங்கத்தவர்கள் உடனான சந்திப்பும் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-3,15)

சத்திய தரிசனம்

மதங்கள் அனைத்துமே வரவேற்கத்தக்கவை. அவை மனி தர்களை நல்ல வழியில் கொண்டு செல்லும் முயற்சிகளாகும். ஒவ்வொன்றும் நல்ல செயல்கள் மூலம் மனதைத்தூய் மைப்படுத்தி ஞானத்தை வெல்லவே கற்றுக் கொடுக்கின்றது சகல மதங்களின் அடிப்படை விதை வேதாந்தங்களின் சனாதன தர்மத்திலிருக்கிறது. இந்த தர்மம் தெய்வீகத்தை அடையக்கூடிய ஒவ்வொரு பாதையையும் ஆராய்ந்து யார் யாருக்கு எந்தப் பாதை உகந்த தென்று வகுத்து வைத்திருக்கின்றது. வேததர்மம்தான் மூதாதையர். பௌத்தம் மகன். கிறிஸ்தவ மதம் பேரன், இஸ்லாம் கொள்ளுப்பேரன். இவர்களிடையே ஏதேனும் மனத் தாங்கல் ஏற்பட்டால் அது வெறும் குடும்பப் புசல்தான். அவர்கள் எல்லோருக்கும் பொதுவான பூர்வீகச் சொத்து ஒன்றேதான்.

ஸ்ரீ வாகீஸ்வரி ச.ச.நி நிர்வாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் ஸ்ரீவாகீஸ்வரி சன சமூக நிலைய பொதுக்கூட்டமும் நிர்வா கத் தெரிவும் அண்மையில் நடைபெற் றது. இதில் தலைவராக கு.முருகையா, செயலாளராக மு.கிரிதரன், உபதலைவ ராக அ.ஜசிகரன், உப செயலாளராக செ.சுதர்சனும் 8 நிர்வாக உறுப்பினர்க ளும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் கல்வி வளர்ச்சி கழகச் செய லாளராக கி.தேவராசா, பொருளாளராக இ.தர்மலிங்கம் ஆகியோரும் விளையாட் டுக்கழக செயலாளராக இ.யுவராஜா, பொருளாளராக கே.வஜிந்தன் ஆகியோ ரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ)

தற்காலிகமாக வீதி மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் போர் என வர்ணிக்கப்படும் மாபெரும் துடுப்பாட்ட போட்டி யாழ். மத்திய கல்லூரிக்கும் யாழ்.பரியோவான் கல்லூரிக்குமிடையில் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் 14,15,16,23 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு இராஜேந்திரா பிரசாத் வீதி இத்தினங் களில் மூடப்பட்டிருக்கும் எனவும் பொது மக்களை மாற்றுப் பாதையினை பயன்ப டுத்துமாறும் மாநகர ஆணையாளர் கேட் டுள்ளார். (அ)

ஜப்பான் இளவரசிக்கு யானை குட்டிகள் பரிசு

ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட் டுக்கு இரண்டு யானைக்குட்டிகளை வழங்கியுள்ளார்.

அமரா, விதுர என்றழைக்கப்படும் இரண்டு யானைக்குட்டிகள் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன. ஜப்பானின் டோக்கியோ நகர தாமா மிருகக்காட்சி சாலைக்கு இந்த யானைக்குட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஜப்பான் இளவரசி டகமாடோ இட்சு கோவிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்த யானைகளை வழங்கியுள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடை யிலான ராஜதந்திர உறவுகள் 60 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன் னிட்டு இவ்வாறு யானைக்குட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. (அ-2)

அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

மணமகளை விளக்கு வழங்கி வரவேற்க வேண்டுமா?

சினிமாவில் மட்டுமல்ல நிஜ வாழ்க்கையிலும் திருமணம் முடிந்து வரும் மணமகளை வீட்டில் பிரவேசிப்பதற்கு முன் ஏற்றிய குத்துவிளக்கைக் கொடுத்து வரவேற்பது வழக்கம். இன்றும் இந்தச் சடங்கு அநேக வீடுகளில் நிகழ்ந்து வருகின்றது. திருமணம் முடிந்து வந்து சேரும் மணமகளை, மண மகனின் தாய் அல்லது சகோதரி குத்துவிளக்கை வழங்கி அழைத்துக்கொண்டு வருவதுண்டு. இது நம்பிக்கைகளின் பாகமாகவே நிலை நின்றுவருகின்றது. தான் இலட்சுமிதேவியின் சின்னமான விளக்குடன் வீட்டுக்குள் பிரவேசிப்பது என்று பெண்ணின் மனதில் தோன்றுவதற்காக இதை ஆசாரித்து வருகின் றனர். ஆனால் மனதார இந்தப்புதிய சூழ்நிலைக்குப் பொருத்தப்படும் மனநி லையை இதுபோன்ற சடங்குகள் உதவியாயிருக்கும் என்பதை நவீன மன நூல் சுட்டிக்காட்டுகின்றது. மேலும் மாமியார், நாத்தனார் போர்கள் சக்தி பெற் றிருக்கும் இந்தக் காலத்தில் நல்லதான ஓர் உறவினை முதலாவதாகவே தொடங்குவதற்கும் இந்தச் சடங்கு நன்மையாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹேலவின் சாதனையைத் தகர்த்தார் சங்கா...

இலங்கை - பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் போது இரண்டு சதங்களை (முதல் இன்னிங்ஸ் - 142, 2 ஆம் இன்னிங்ஸ் - 105) அடித்து மஹேலவின் சாதனையைத் தகர்த்துள்ளார் சங்கக்கார.

இது வரை காலமும் டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்த இலங்கை வீரர்கள் வரிசையில் முன்னாள் அணித்தலைவர் மஹேல ஜெயவர்த்தன 31 சதங்களுடன் முதலிடத்தில் இருந்தார். இந்நிலையில் பங்களாதேசுடனான டெஸ்ட்போட்டியின்போது 2 சதங்களை அடித்து 32 சதங்களைப் பெற்று டெஸ்ட் அரங்கில் அதிக சதங்கள் அடித்த இலங்கை வீரர்கள் வரிசையில் முதலிடத்தைப் பிடித்துள்ளார் சங்கக்கார.

இப்பட்டியலில் சங்கக்கார (32 சதம்), ஜெயவர்த்தன (31 சதம்), அரவிந்த டி சில்வா (20 சதம்) ஆகியோர் முதல் மூன்று இடத்தில் உள்ளனர். இதுவரை சங்கக்கார, 116 டெஸ்டில் பங்கேற்று 32 சதம், 41 அரைசதம் உட்பட 10292 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

அத்துடன் ஒரே டெஸ்டின் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்த ஐந்தாவது இலங்கை வீரர் என்ற பெருமையையும் பெற்றார்.

முதல் டெஸ்ட் போட்டித் துளிகள்...

- ✔ இலங்கை- பங்களாதேஷ் மோதிய முதல் டெஸ்ட் போட்டியில் இரண்டாவது முறையாக 8 சதங்கள் பதிவாகியிருக்கின்றன. (சங்கக்காரா 142 - முதல் இன்னிங்ஸ், திரிமன்னே 155*, சண்டிமால் 116*, அஷ்ரபுல் 190, முஷ்பிகுர் ரஹீம் 200, நாசின் ஹுசைன் 100, டில்ஷன் 126, சங்கக்காரா 105 - 2 ஆம் இன்னிங்ஸ்).
  இதற்கு முன் கடந்த 2005இல் நடந்த மேற்கிந்திய தீவுகள், தென்னாபிரிக்கா அணிகள் மோதிய டெஸ்டில் முதன் முறையாக எட்டு சதங்கள் பெறப்பட்டன.
- ✔ முதல் முறையாக இலங்கை - பங்களாதேஸ் அணிகள் மோதிய டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்துள்ளது. பங்களாதேஸ் அணி டெஸ்ட் அரங்கில் இலங்கை அணிக்கெதிராக தனது முதல் சமநிலையை பதிவு செய்தது. இதுவரை இரு அணிகள் மோதிய 13 டெஸ்டில் 12இல் இலங்கை வென்றுள்ளது.
- ✔ இந்தப்போட்டியில் தனது 16ஆவது சதத்தை பதிவு செய்த டில்ஷான், முன்னாள் வீரர் அத்தப்பத்துவின் (16 சதம்) சாதனையை சமன் செய்து, அதிக சதம் அடித்த இலங்கை வீரர்கள் பட்டியலில் ஐந்தாவது இடத்தை பிடித்துள்ளார்.

வொட்சனுக்காக அணியின் கதவுகள் திறந்திருக்கும்

வொட்சனுக்காக அணியின் கதவுகள் திறந்திருக்கும், என,அவுஸ்திரேலியா கிரிக்கெட் சபையின் பொது முகாமையாளர் பற் ஹொவார்ட் தெரிவித்தார்.

இதுகுறித்து பற் ஹொவார்ட் மேலும் தெரிவிக்கையில்:

எனக்கு வொட்சனை நன்கு தெரியும். அணியின் நலனுக்காக இதற்கு முன் பல நேரங்களில் சிறப்பாக செயற்பட்டுள்ளார். இவருக்கும், கிளார்க்கிற்கும் இடையே கடந்த 18 மாதங்களாக பிரச்சினை இருப்பது உண்மை தான். ஆஷஸ் தொடருக்காக இங்கிலாந்து செல்லுமுன், இதை அவர்கள் கட்டாயம் தீர்த்துக் கொள்ள வேண்டும். இப்போதைய நிலையில் இதற்கு மேல் இப்பிரசினைக்குள் செல்ல விரும்பவில்லை.

வொட்சனுக்கு எப்போது அணியில் இடம் தருவது என முடிவான பின், அவரிடம் இதுகுறித்து பேசுவேன். அவருக்காக மட்டுமல்ல அணிக்கு திரும்ப விரும்பும் அனைவருக்கும், கதவுகள் திறந்தே இருக்கும் இவ்வாறு கூறினார்.

சரியான தண்டனைதான்

- அணியிலிருந்து நீக்கப்பட்ட பட்டின்சன்

இந்தியாவுடனான 2 டெஸ்டிலும் தோற்ற தால் இனிவரும் போட்டிகளில் எப்படி மீள்வது, அதற்காக அணியை எப்படி முன்னேற்றுவது என்று வீரர்களிடம் அவுஸ்திரேலிய அணி நிர்வாகம் கருத்து கேட்டிருந்தது. இதற்கு ஈமெயில் மூலமோ அல்லது நேரிலோ 5 தினங்களுக்குள் பதில் அளிக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தது. ஆனால் அணியில் 4 வீரர்கள் இது தொடர்பாக எதுவித கருத்துக்களையும் தெரிவிக்க வில்லை. இதனால் இந்த நான்கு வீரர்களும் அணியில் இருந்து அதிரடியாக நீக்கப்பட்டனர்.

இது குறித்து அணியிலிருந்து நீக்கப்பட்ட பட்டின்சன் கூறுகையில்,

அதிகமான தண்டனை, எனக்கு கொடுக்கப்பட்டதாக, பலர் கூறுகின்றனர். ஆனால், இதை கூர்ந்து கவனித்தால், அப்படி தெரியாது. அவுஸ்திரேலிய அணியில் வீரர்களாக இருக்க வேண்டுமெனில், எல்லாவற்றிலும் சிறப்பாக செயற்படவேண்டும். எனவே, இது சரியான தண்டனைதான். எங்கள் அணியின் முன்னாள் வீரர்களான ஷேன் வோர்ன்,டீன் ஜோன்ஸ் ஆகியோர் தங்களது கருத்தை தெரிவித்துள்ளனர். அவர்களது காலத்தில் கடும் நெருக கடியை சந்திக்கவில்லை. ஆனால், தற்போது அணியின் நிலைமை வேறு மாதிரியாக உள்ளது. இளம் வீரர்களும் அணியில் அதிகமாக உள்ளனர். எனவே, அதிக முன்னேற்றம அடைய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்றார்.

3ஆவது சமர் இன்று மொகாலியில்

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் 3ஆவது டெஸ்ட் போட்டி மொகாலியில் இன்று ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 2 டெஸ்டில் வென்ற இந்திய அணி மொகாலி டெஸ்டிலும் வெற்றி பெற்று 'ஹெட்ரிக்' சாதனையுடன் தொடரை வெல்லுமா? அல்லது இந்தப் போட்டியில் தக்க பதிலடியைக் கொடுத்து இந்திய அணியை வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி தனது கௌரவத்தை பாதுகாத்துக் கொள்ளுமா என்ற கேள்வி கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

2 டெஸ்டில் தோற்றதாலும், 4 வீரர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாலும் அவுஸ்திரேலிய அணி கடும் நெருக்கடியில் உள்ளது. வேகப் பந்து வீச்சுக்கு ஏற்ற இந்த மைதானத்தில் பட்டின்சன் இல்லாதது அந்த அணிக்கு பாதிப்பே. அத்துடன் விக்கெட் காப்பாளர் மேத்யூ வாட் காயமடைந்துள்ளதால் சில வேளைகளில் அணியில் இடம்பெறமாட்டார்.

இவ்வாறு நெருக்கடியில் இருக்கும் அவுஸ்திரேலிய அணி தொடரை இழக்காமல் இருக்கும் வகையில் கடுமையாக போராடும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

இந்திய அணியைப் பொறுத்த மட்டில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சேவாக் நீக்கப்பட்டுள்ளார். அத்துடன் நேற்றைய பயிற்சி ஆட்டத்தின்போது புஜாரா காயமடைந்துள்ளார். இதனால் இன்றைய போட்டியில் ஆடுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

இன்றைய போட்டி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது. ஸ்டார் கிரிக்கெட் சனலில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.

தீவுகளை மிரட்டுகிறது சிம்பாவே!



மேற்கிந்தியத் தீவுகளுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சிம்பாவே அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகளுக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் சிம்பாவே அணியின் அபார பந்து வீச்சால் மேற்கிந்தியத் தீவுகள் 2 விக்கெட்டுக்களை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

கென்சிங்டன் ஓவல் மைதானத்தில் இடம் பெறும் இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாவே அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி 211 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. ஒரு கட்டத்தில் அவ்வணி 2 விக்கெட்டுக்களை இழந்து 100 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், தொடர்ந்து வந்த வீரர்கள் விரைவாக ஆட்டமிழந்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் சிம்பாவே அணி சார்பாக டீனோ மவாயோ 50 ஓட்டங்களையும், கிரெய்க் ஏர்வின் 29 ஓட்டங்களையும், பிரென்டன் டெய்லர் 26 ஓட்டங்களையும், கிரேம் கிறீமர் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக மார்லன் சாமுவேல்ஸ் 4 விக்கெட்டுக்களையும், ஷேன் ஷிலிங்பேர்ட் 3 விக்கெட்டுக்களையும், கேமர் ரோச் 2 விக்கெட்டுக்களையும், ஷனொன் கப்றியல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அதன் பின்னர் தனது முதலாவது இனிங்ஸில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்றைய நாள் முடிவில் 2 விக்கெட்டுக்களை இழந்து 18 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. கெரன் பவல் 5 ஓட்டங்களுடனும் கேமர் ரோச் ஓட்டமெதனையும் பெறாமலும் ஆட்டமிழந்தனர்.

களத்திலே கிறிஸ் கெயில் 11 ஓட்டங்களுடனும் பிறாவோ எதுவித ஒட்டங்களையும் பெறாத நிலையிலும் உள்ளனர். சிம்பாவே சார்பாக வீழ்த்தப் பட்ட 2 விக்கெட்டுக்களையும் கைல் ஜார்விஸ் வீழ்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.கல்வியியல் கல்லூரியில் 2013இல் அழகியல் பாடங்கள் அவுட்

பெரும் இழப்பு எனப் பலரும் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியல் கல்லூரியில் இருந்து சங்கீதம்,நடனம் மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய கற்கைநெறிகள் நீக்கப்பட்டுள்ளன.

இதனால் யாழ்ப்பாண தேசிய கல்வியியல் கல்லூரி மேற்குறித்த கற்கைநெறிகளுக்கான வளங்களை இழப்பதுடன் மாணவர்களுக்கான சந்தர்ப்பங்களும் இழக்கப்படுவதாக துறைசார்ந்தவர்கள்கவலைவெளியிட்டுள்ளனர்.

கல்வியியல் கல்லூரி ஆரம்பித்த காலம் தொட்டு இக்கற்கைநெறிகள் இங்கு கற்பிக்கப்படுகின்ற போதிலும் 2013ஆம் ஆண்டுக்கான வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் மேற்படி 3 கற்கைநெறிகளும் நிறுத்தப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

இது விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பெரும் அதிர்ச்சியை கொடுத்துள்ளதுடன் இக்கற்கைநெறிகளை கற்பிக்கும் விரிவுரையாளர்கள் இக்கல்லூரியில் இருக்கின்ற போதிலும் அவற்றை வேறு கல்லூரிக்கு மாற்றியமை பெரும் குழப்பத்தையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்திற்கே உரிய பாரம்பரிய கலைகள் விடுபட்டு செல்வது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும் என்றும் எனவே மீண்டும் இக்கற்கைநெறிகளைக் கொண்டு வருவதற்கு அரசியல்வாதிகளும்; புத்திஜீவிகளும் கல்விச் சமூகமும் முன்வர வேண்டும் என்றும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந)

மெஸ்ஸியை முந்தினார் பெக்காம்

உலகின் பணக்கார கால்பந்து வீரர்கள் வரிசையில் இங்கிலாந்தின் டேவிட் பெக்காம் முதலிடத்தில் உள்ளார்.

கால்பந்து இணையத்தளம் சார்பில் அதிக சொத்து மதிப்புள்ள கால்பந்து வீரர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது.

இதில் வீரர்களின் சம்பளம், சொத்துக்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன.

இதன்படி உலக பணக்கார கால்பந்து வீராக இங்கிலாந்தின் டேவிட் பெக்காம் தெரிவு செய்யப்பட்டார். 35 வயதான இவரது சொத்து மதிப்பு 1,418 கோடி இந்திய ரூபாய்கள்.

ஆர்ஜென்டினாவின நட்சத்திர வீரர் மெஸ்ஸி, ரூ936 கோடியுடன்இரண்டாவது இடத்தில் உள்ளார்.

அடுத்த மூன்று இடங்களில் போர்ச்சுகலின் கிறிஸ்டியானா ரொனால்டோரூ.907 கோழி, பிரேசிலின் காகா (ரூ.536 கோழி, ரொனால்டினோ ரூ.510 கோடி)உள்ளனர்.

நோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ண கிரிக்கெட்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு அவை ,நோயல் விமலேந்திரன் வெற்றிக்கிண்ணத்திற்காக அகில இலங்கை பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் விலகல் முறையிலான இருபது-20 துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியினை வருடாவருடம் நடத்தி வருகின்றது.

இந்நிலையில், இந்த மாதம் 21ஆம் திகதி ஆறாவது வருடமாகவும் இதற்கான போட்டிகள் யாழ்ப்பாணக் கல்லூரி பிக்னெல், வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன.

21-ம்,22-ம்,23 ஆகிய தினங்களில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகளில் தேசிய ரீதியாக 15 அணிகள் பங்குபற்றவுள்ளன. இறுதிப் போட்டிகள் 23-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

இமையாணன் ம.வி.க உதைபந்து பொம்மர்ஸ், சென்.அன்ரனிஸ் வெற்றி

இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ். மாவட்ட கால்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் விலகல் முறையிலான கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியென்றை தமது விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்தி வருகின்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2 போட்டிகளில்,வதிரி பொம்மர்ஸ் அணியினை எதிர்த்து உதய தாரகை அணி மோதிய முதல் போட்டியில் வதிரி பொம்மர்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து தொண்டைமானாறு ஒற்றுமை அணிக்கும் மணல்காடு சென்.அன்ரனிஸ் அணிக்கும் இடையில் இடம்பெற்ற இரண்டாவது போட்டியில் மணல்காடு சென்.அன்னிஸ் அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.



வலிகாமம் வலய கால்பந்து; மானிப்பாய் இந்து சம்பியன்

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரிகளுக்கிடையில் நடைபெற்ற கால்பந்தாட்ட இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு கால்பந்தாட்ட அணிகளுக்கிடையில் கால்பந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்று வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி பிக்னெல் மைதானத்தில் கடந்த திங்கட்கிழமை முதல் நடைபெற்று வந்தது.

இறுதிப்போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினை எதிர்த்து தெல்லிப் பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஆக்ரோஷமாக விளையாடின. இதனால் ஏற்பட்ட முறுகல் நிலையினால் இரு அணிகளிலும் ஒவ்வொரு வீரருக்கு சிவப்பு அட்டை காட்டப்பட்டு, ஆட்டத்திலிருந்து வெளி யேற்றப்பட்டனர்.

இதனால் இரண்டாவது பாதியாட்டம் 10 வீரர்களுடன் இரு அணிகளும் விளையாடின. இரண்டாவது பாதியாட்டத்தில் கிடைத்த சந்தர்ப்பம் ஒன்றை சரியாகப் பயன்படுத்திய மானிப்பாய் இந்து அணி 1 கோல் பெற்று முன்னிலை பெற்றது.

இறுதிவரை மேலதிக கோல்கள் அடிக்கப்படாததால், இறுதியில் 1:0 என்ற கோல் கணக்கில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெற்றி பெற்று வலிகாமம் கல்வி வலயச் சம்பியனாகியது.

வசாவிளான் மகா வித்தியாலயத்திற்கும் சென்.ஹென்றியரசர் அணிக்கும் இடையில் நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென். ஹென்றியரசர் அணி 3:0 என்ற கோல் வெற்றிபெற்றது.

சென்.ஹென்றியரசர் வெற்றி

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுப்பிரிவு கால் பந்தாட்டப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை முதல் வட்டுக்கோட்டை பிக்னெல் மைதானத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வந்தது.

இறுதிப்போட்டியில் இளவாளை சென். ஹென்றியரசர் அணியினை எதிர்த்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மோதியது. இரண்டு பாதியாட்டங்களிலும் இரு அணிகளும் கோல் எதனையும் அடிக்காத தினால், போட்டியின் வெற்றியாளரைத் தீமானிக்க சமநிலை தவிர்ப்பு உதை நாடப் பட்டது.

சமநிலை தவிர்ப்பு உதையில் இளவாளை சென்.ஹென்றியரசர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வலிகாமம் கல்வி வலயச் சம்பினாகியது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய அணியினை எதிர்த்து ஏழாலை ஸ்ரீமுருகன் மகா வித்தியாலய அணி மோதியது. இப் போட்டியில் ஏழாலை ஸ்ரீ முருகன் மகா வித்தியாலய அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தென்மராட்சி கல்வி வலய கபடிப் போட்டி முடிபுகள்

தென்மராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் 15,19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கபடிப்போட்டிகள் மட்டுவில் ஸ்கந்தவரோதய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

15 வயதுபிரிவு ஆண்களுக்கான போட்டியில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணி முதலிடத்தையும், இரண்டாம் மூன்றாமிடங்களைமுறையே சாவகச்சேரி இந்துக் கல்லூரி ,கச்சாய் மகா வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.

15வயதுப்பிரிவுபெண்களுக்கானபோட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி முதலிடம் பெற்றதுடன், 2-ம் 3-ம் இடங்களை முறையே கச்சாய் மகா வித்தியாலயம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.

19 வயதுப்பிரிவு ஆண்கள், பெண்கள் இரு பிரிவுகளில் அதே ஒழுங்கில் முதலிடத்தை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அணியும் ,இரண்டாமிடத்தை சாவச்சேரி இந்துக் கல்லூரி அணியும், முன்றாமிடம் கச்சாய் மகா வித்தியாலய அணியும் பெற்றுக்கொண்டன.

கண்டாவளை கல்விக் கோட்ட சதுரங்க போட்டி முடிபுகள்

கிளிநொச்சி வலயத்திற்குட்பட்ட கண்டாவளை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் 15, 19 வயதுப் பிரிவுகளுக்கிடையிலான சதுரங்க போட்டிகள் கண்டாவளை கோட்டக் கல்வி அலுவலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

15 வயது ஆண்கள் பிரிவில் பரந்தன் இந்து மகா வித்தியாலயம் முதலிடத்தைப் பெற்றுக் பெற்றது.

15 வயது பெண்கள் பிரிவில் கிளிநொச்சி முருகானந்த கல்லூரி முதலிடத்தையும், தர்மபுரம் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முருகானந்த கல்லூரி முதலிடத்தையும், 2-ம்,3-ம் இடங்களை முறையே தர்மபுரம் மகா வித்தியாலயம், கலவெட்டித்திடல் நாகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக் கொண்டன.

19 வயது ஆண்கள் பிரிவில் முதலாம் இடத்தினை முருகானந்தா கல்லூரி பெற்றதுடன் இரண்டாம், மூன்றாம் இடங்கள் முறையே தர்மபுரம் மகா வித்தியாலயம், கலவெட்டித்திடல் நாகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.

கரப்பந்தாட்ட போட்டி

பாடசாலைகளுக்கிடையிலான 15,17,19 வயதுப்பிரிவுபெண்,ஆண்களுக்கானகரப்பந்துப் போட்டி ஒன்று இன்று வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. எனவே பங்குபற்றும் பாடசாலைகள் காலை 8.30 மணிக்கு முன் மைதானத்திற்கு வருமாறு பொறுப்பாசிரியர் தெரிவித்துள்ளார்.

கண்ணீர் அஞ்சலி

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட

திருமதி சின்னத்தங்கம் சதாசிவம்

யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான அமைப்பாளர் அங்கஜன் இராமநாதனின் பேர்த்தியும்,

ச.இராமநாதன் அவர்களின் தாயாருமான சின்னத்தங்கம் சதாசிவம் சிவபதமெய்திவிட்டார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் யாழ். மக்களின் இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
அலுவலக உதவியாளர்கள்

(சி-2674)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாந்துறைப் படிப்பகம்
...சபை, யாழ்ப்பாணம்.

தகவல் வழங்குவோரை...

சார்பற்ற நிறு வனங்களின் பிரதிநிதிகளை இதன் போது வலியுறுத்தியுள்ளார்.

இச்சந்திப்பில் சர்வதேச ரீதியில் செயற் பட்டு வரும் பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங் களின் பிரதிநிதிகள் அரசாங்கம் தொடர்பில் பல விமர்சனங்களை முன்வைத்தனர்.

இதற்குப்பதில் அளித்துப்பேசிய நவநீ தம்பிள்ளை, மனித உரிமைகள் விடயத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு அறிவுறுத்தல்களை வழங்கி உள்ளதாகக் குறிப்பிட்டார். (எ-11)

அமெரிக்காவின் தீர்மா...

றுத்தெரிவு இல்லை என தகவலறிந்த வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு வில் ஒரு அங்கத்துவ நாடாக இல்லாத இலங்கை தனது நட்பு நாடு ஒன்றின் மூலம் இந்த வாக்கெடுப்பைக் கோர முடிபு செய் துள்ளதாக தெரியவருகின்றது.

இலங்கையின் நட்பு நாடுகளான சீனா, ரஷ்யா மற்றும் கியூபா போன்ற நாடுகளும், ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங் கத்துவம் வகிக்காத நிலையில், பாகிஸ் தான் ஊடாக இந்த வாக்கெடுப்பை இலங்கை அரசாங்கம் கோரலாம் என எதிர்பார்க்கப்படு கின்றது.

அதேவேளை, இத்தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு இடம்பெறுவதைத் தவிர்ப் பதற்கு சிலநாடுகள் விருப்பம் கொண்டுள்ள தாக அறியமுடிகின்றது.இதில் இந்தியா மற்றும் ஜப்பான்போன்றநாடுகளும்உள்ளடங்குகின்றன.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு வின் 19வது அமர்வில் கொண்டுவரப்பட்ட இலங்கை மீதான தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்திருந்தது. ஆனால் ஜப் பான் அப்போது ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் அங்கத்துவ நாடாக இருக்க வில்லை.

ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழு வில் தற்போது ஜப்பான் அங்கத்துவம் வகிக் கும் நிலையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்நாட்டிற்கு விஜயம் செய்துள்ளமை குறிப் பிடத்தக்கது. (எ-11)

தமிழர்களுக்கு...

குற்ற விசாரணை செய்ய வேண்டும்.

ஐ.நா சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கவேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உள்ளனர்.

உண்ணா விரதத்தில் ஈடுபட்டுள்ள கைதிகளி டம் ஜெயில் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். (எ-11)

கஸ்தூரியார் வீதிப்...

நேற்று பிற்பகல் கல்லூரி வீதியால் சென்ற இளைஞன் ஒருவர் தனது சைக்கிளை வீதியோரமாக நிறுத்தியுள்ளனர். இதனை இடைஞ்சல் எனத் தெரிவித்த இளைஞர் கூட் டம் பிரஸ்தாப இளைஞனை தாக்கியதுடன் அவர் பயணித்த சைக்கிளையும், சேதமாக்கியுள்ளனர்.

அதே போன்று வடி எனக்கூறப்படும் சிறிய ரக வாகனம் ஒன்று அவ்வீதிவழி யாகப் பயணித்த நிலையில் நடுவீதியில் நடனமா டிய இளைஞன் ஒருவரை இலேசாக முட்டி யுள்ளது.

இதனையடுத்து அங்கு மது போதையில் நின்ற இளைஞர் குழு அவ்வாகனத்தை முற்றுகையிட்டுத் தாக்கத் தொடங்கியது. இதில் வாகனக் கண்ணாடிகள் சேதமடைந் ததுடன் சாரதியும் காயமடைந்த போதிலும் ஒருவாறு அவர்களிடமிருந்து தப்பித்து சென்று விட்டார்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் சுமார் முப்பதுக்கும் மேற்பட்டோர் ஈடுபட்டதாக நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ். இந்துக்கல்லூரிக்கும், கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் இடையில் எளிமை யான முறையில் நடத்தப்பட்ட இந்துக்களின் போர் என வர்ணிக்கப்படும் துடுப்பாட்டப் போட்டியில் மதுபோதையில் நின்றவர்களின் மோசமான செயற்பாடு ரசிகர்களை வெறுப் படைய வைத்துள்ளது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் மாணவர் கள் என்றும் அவர்களே மது போதையில் நின்றனர் எனவும் பார்வையாளர்கள் சிலர் தங்களுக்குள் பேசிக் கொண்டதை அவதா னிக்க முடிந்தது. எனினும் மதுபோதையில் நின்றவர்கள் யார் என்பதை உறுதிப்படுத்த முடியவில்லை.

தாக்குதல் மேற்கொண்டவர்களை அடை யாளம் காட்டமுடியும் எனவும் தாக்கப்பட்ட வர்கள் தெரிவித்தனர். (எ-11)

மோ.சைக்கிளில் வந்தவர்களால் இளைஞர் கடத்தப்பட்டு தாக்குதல்

சிவராத்திரி தினத்தில் கரவெட்டியில் சம்பவம்

(பருத்தித்துறை)

கரவெட்டி கரணவாய் கிழக்கைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த சிவராத்திரி தினத் தன்று நான்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த இனந்தெரியாதோரால் கடத்திச் செல் லப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

சிவராத்திரி தினமான கடந்த 10-ம் திகதி இரவு 10.30 மணியளவில் நடந்த இச்சம்ப வத்தில் கரணவாய் கிழக்கைச் சேர்ந்த மணி சுந்தரம் சதீஸ்கரன் (வயது 36) என்பவரே கடத்திச் செல்லப்பட்டு தாக்கப்பட்டவராவார்.

இது தொடர்பில் தாக்குதலுக்கு உள்ளா னவர் நெல்லியடிப் பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டில்,

10.03.2013ஆம் திகதி இரவு சிவராத்திரி தினத்தை முன்னிட்டு கோவில் நிகழ்ச்சிகளில் கலந்துவிட்டு இரவு 10.30 மணியளவில் எனது வீடு நோக்கி நெல்லியடி சந்தியூடாக பெற் றோல் செற்றுக்கு தெற்கே போகும் வீதியில் சென்று கொண்டிருக்கும்வேளை, அதிவேக மாக மோட்டார் சைக்கிள்கள் எனக்குப் பின் னால் வருவதை உணர்ந்து கொண்டேன்.

வந்த மோட்டார் சைக்கிள்கள் எனது மோட் டார் சைக்கிளுக்கு முன்னால் அதிவேகமாகத் தாண்டி, எனது மோட்டார் சைக்கிளை நிறுத் தும்படி சைகை மூலம் பணித்தனர்.

அப்போது எனக்கு முன்னால் 4 மோட் டார் சைக்கிள்கள் நிற்பதை உணர்ந்தேன்.

எனது மோட்டார் சைக்கிளை வந்த பாதை க்கு திருப்புமாறு கூறி என்னை மிரட்டினர்.

பிரதான வீதிக்கு ஏறியதும் யாழ்.நோக்கிப் போகும் திசையில் என்னைக் கூட்டிச் சென் றனர்.

பிரதான வீதியில் செல்லும்போது வீதிக்கு வடக்கேயுள்ள ஒரு ஒழுங்கைக்குள் மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றனர்.

சிறிது தூரத்தில் ஒழுங்கையின் ஓரத்தில் எனது மோட்டார் சைக்கிளை நிறுத்துமாறு கூறி, என்னை மோட்டார் சைக்கிளைவிட்டு இறக்கிவிட்டு எனது மோட்டார் சைக்கிளையும் தொலைபேசியையும் எடுத்துக் கொண்டனர்.

அதன்பின் தங்களுடைய மோட்டார் சைக்கிளில் என்னை பலவந்தமாக ஏற்றிக் கொண்டு ஆள்நடமாட்டம் இல்லாத இருட்பான இடத்திற்குக் கொண்டுபோய் நான்கு பேரும் மாறிமாறி அடித்தார்கள்;துன்புறுத்தினார்கள்.

அவர்களை கெஞ்சி ஒருவாறு விடுபட்டு தப்பித்துக் கொண்டேன் என்று அந்த முறைப் பாட்டில் தெரிவித்துள்ளதுடன், எந்தெந்த தொலைபேசியில் இருந்து தமக்கு மிரட்டல் வந்துள்ளதென்பதையும் முறைப்பாட்டில் அவர் தெரிவித்துள்ளார். (ந)

பதிலுரை மட்டும் நிகழ்...

மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளர்நவநீதம்பிள்ளைஅண்மையில்அழைப்பு விடுத்திருந்தார்.

குறித்த அழைப்பை சாதகமாகப் பரிசீலிக்கத் தவறிய அமைச்சர் மகிந்த சமரசிங்க, இந்த விடயத்தை அரசு மேல் மட்டத்திற்கு அறிவிக் கா மல் சந்திப்பில் கலந்து கொள்ளாதிருக்க முடி பெடுத்தார். இதனால் இலங்கைப் பிரதிநிதி கள் எவரும் நவநீதம்பிள்ளையுடனான சந் திப்பில் கலந்து கொள்ளவில்லை.

அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் இந்த தன்னிச்சையான முடிபால் இலங்கை அரச உயர்மட்டம் அதிருப்தியடைந்து, நாடு திரும் பிய அமைச்சர் சமரசிங்காவிடம் இது தொடர் பில் விளக்கம் கோரப்பட்டது என்றும் செய்தி கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையிலேயே ஜெனிவா விவகாரங் களைக் கையாளுவதற்கு அமைச்சர் மகிந்த சமரசிங்காவுக்கு வழங்கப்பட்டிருந்த பொறுப் புக்களை இலங்கை அரசு மீளப்பெற்றுள்ளது என்றும், அவை ஜெனிவாவிற்கான இலங்கை யின் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்கவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக் கப்படுகிறது.

இதனடிப்படையில் அனைத்துலக இராஜ தந்திரிகளுடனான சந்திப்புக்களுக்கு ரவிநாத் ஆரியசிங்கவே தலைமை வகிப்பார் எனத் தகவல்கள் வெளியாகியிருந்தாலும், இந்த விடயத்தை இலங்கை அரசு இன்னும் உத் தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

அதே வேளை, ஜெனிவாவிலிருந்து நாடு திரும்பிய அமைச்சர் மகிந்த சமரசிங்காவை மீண்டும் ஜெனிவா அனுப்புவதா இல்லையா என்பது தொடர்பில் இலங்கை அரச உயர் மட்டம் பரிசீலித்து வந்த நிலையில், அமைச்சர் மகிந்த சமரசிங்க நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை மீண்டும் ஜெனிவாவிற்கு விரைந்துள்ளார்.

கடந்த தடவை இலங்கையின் சார்பில் அறிக்கையை சமர்ப்பித்து அமைச்சர் மகிந்த சமரசிங்க விசேட உரையை நிகழ்த்தியிருந் தார். எனவே, அதற்கு இம்முறை பதிலளிக்க வேண்டிய கடப்பாடு அவருக்குண்டு. இதன் பிரகாரமே அவரை இலங்கை அரசு உயர் மட்டம் மீண்டும் ஜெனிவாவுக்கு அனுப்பி யுள்ளது எனத் தெரியவருகின்றது. (எ-11)

பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- முகாமைத்துவ உதவியாளர்கள் (பெண்கள்)
- அலுவலக செய்தியாளர்கள் (உள்ளகம்-இருபாலாரும்)
- பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)
- ஒவ்செற் இயந்திர இயக்குநர்கள் மற்றும் பயிலுநர்கள் (ஆண்கள்)
- பத்திரிகை மடிப்பவர்கள் (ஆண்கள்-இரவுக் கடமை)

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை
மனித வள முகாமையாளர்
வலம்புரி
இல.3, 2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

(இ) முடிவுத் திகதி: 20.03.2013

இலங்கை...

இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் சுமார் 70 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இவை தொடர்பில் சுயாதீனமான சர்வதேச விசா ரணை அவசியம் எனவும் சுட்டிக்காட்டியுள் ளார். (எ-11)

காணாமல்...

மகஜர் கையளிக்கும் இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் வினோநோக ராதலிங்கம் மற்றும் ஐக் கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப் பின ரான ஜெயலத் ஜெயவர்த்தன ஆகியோர் உட்பட மன்னார் சிவில் சமூகப் பிரதிநிதிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் வடக்கு கிழக்கு காணாமல் போன உறவுகளைத் தேடும் சங் கத்தினரும்நூற்றுக்கணக்கானஉறவினர்களும் கலந்து கொண்டனர். (எ-11)

காணி விற்பனைக்குண்டு

இளவாலையில் மானிப்பாய் இளவாலை பிரதான வீதியை முகப்பாகக் கொண்ட பத்துப்பரப்பு காணி வெட்டுக்கிணற்றுடன் விற்பனைக்குண்டு.
விபரங்களுக்கு.
தொடர்பு:- 0773151723
(2152)

UK, Australia, New Zealand, Switzerland, German & France

உள்ளிட்ட எந்த நாடுகளிலும் தொழில்வாய்ப்பை வழங்கும்
City & Guilds, Australian Employment Solutions & University of East London சான்றிதழ்களுடன்
மாதம் 50,000/- வருமானம் வழங்கும்

ஹொட்டேல் தொழிற்துறைப் பயிற்சி & வேலைவாய்ப்பு

(கற்கைநெறி நிறைவில் 100,000/-, Work Permit உடன் வேலைவாய்ப்பு)

கருத்தரங்கும் உடனடி அனுமதியும்

2012 ஜூன் கருத்தரங்கின்போது

2012 ஒக்டோபரில் பயணமானவர்கள்

அன்றைய தினம் அனுமதி பெறும் 5பேருக்கு 25% கட்டணக்கழிவு

க.பொ.த. சாதாரணதர தேர்ச்சி இல்லாவிட்டாலும் வருமானத்துடன் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தொழில் தேர்ச்சியுடன் விரும்பிய நாட்டுக்குச் சென்று தொழில் செய்து வருமானமீட்டலாம்

On 16-03-2012 சனி மு.ப. 10.00 மணி
@ வவுனியா நெல்லி ஸ்ரார் ஹொட்டேல்

On 17-03-2012 ஞாயிறு மு.ப. 10.00 மணி
@ ஞானம்ஸ் ஹொட்டேல்

MEDIA & EDUCATION
சிகரம் SIKARAM
கல்வி - தொழில் வழிகாட்டி
221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 300 80 60
நேரடி: 0773 616 798
மி.அ.:edusikaram@gmail.com இணையம்:www.sikaram.lk

PC MATE SYSTEMS
Computer Sales & Repair
உங்களது கணினியில் ஏற்படும்
Software/Hardware/Virus
பிரச்சினைகளுக்கு சிறப்பாகவும் மிக விரைவாகவும் தீர்வைப்பெற்றுக்கொள்ள எங்களை நாடுங்கள்
மலிவு விலையில்
Core 2 duo, Dual Core , LGA HT
Branded Computers 0779689043

478 Mother Board
LGA DDR2 Board
DDR/DDR2 Rams
IDE/SATA HDD
LCD Monitors
Computers
எமது புதிய கிளை
746B பருத்தித்துறை வீதி
நல்லூர்
யாழ் மாநகரசபை முன்பாக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.